கோகுலம்

விடுமுறை ஸ்பெஷல்



GOKULAM
மே '98
ரூ. 5.00


DIAMOND COMICS BONANZA

DIAMOND COMICS
India's Largest Selling Comics

1st Prize




2nd Prize



1 COLOUR T. V.

3rd Prize



1 TWO-IN-ONE

Consolation Prize



100 TITAN WATCHES

Subscribe to Diamond Comics

Get attractive gifts + win a prize Too

ONE YEAR SUBSCRIPTION

New set of Diamond Comics for Rs. 60/- for 12 months =	Rs. 720/-
Your Free Gifts : 1) Parker Pen	Rs.120/-
2) Popular Diamond Comics	Rs. 60/-
3) Popular Amar Chitra Katha	Rs. 60/-
4) Free Postage	Rs.180/-
You Get : *(Comics worth Rs. 720/- + Gifts worth Rs. 420/-)*	Rs. 1140/-
You Pay : Rs. 720/-	

TWO YEARS SUBSCRIPTION

New set of Diamond Comics for Rs. 60/- for 24 months =	Rs. 1440/-
Your Free Gifts : 1) Parker Pen	Rs. 120/-
2) Popular Diamond Comics	Rs. 200/-
3) Popular Amar Chitra Katha	Rs. 200/-
4) Free Postage	Rs. 360/-
You Get : *(Comics worth Rs. 1440/- + Gifts worth Rs. 880/-)*	Rs. 2320/-
You Pay : Rs. 1440/-	

THREE YEARS SUBSCRIPTION

New set of Diamond Comics for Rs. 60/- for 36 months =	Rs. 2160/-
Your Free Gifts : 1) Parker Pen Set	Rs. 240/-
2) Popular Diamond Comics	Rs. 400/-
3) Popular Amar Chitra Katha	Rs. 400/-
4) Free Postage	Rs. 540/-
You Get : *(Comics worth Rs. 2160/- + Gifts worth Rs. 1580/-)*	Rs. 3740/-
You Pay : Rs. 2160/-	

For Free Gifts select your "Popular Diamond Comics" and "Popular Amar Chitra Katha" from the list which will be published in all Diamond Comics issues during April - June 98.

DIAMOND COMICS RELEASED IN APRIL 1998

- Chacha Chaudary and The Hijacker
- Biloo Digest - 9
- Motu-Patlu and The Foolish Muscleman
- Dynamite - The Maskman
- Tauji and Dhanasur
- Rajan-Iqbal and The Priests
- Mahabali Shaka and Cobral
- Shaktiman - 1
- Phantom - 79
- Mandrake - 66
- James Bond-69
- Superman - 1
- Superman - 2
- Batman - 1
- Batman - 2

Rush! Send this subcription coupon today for your FREE Gifts

I would like to subscribe new set of Diamond Comics for (✔)

☐ 1 year (12 x Rs. 60/-) at Rs. 720/- + Free Gifts worth Rs. 420/-.
☐ 2 years (24 x Rs. 60/-) at Rs 1440/- + Free Gifts worth Rs. 880/-.
☐ 3 years (36 x Rs. 60/-) at Rs. 2160/- + Free Gifts worth Rs. 1580/-.

Please find (✔) enclosed cheque / DD.No. ____________
Dated ____________ for Rs.720/- ☐ Rs.1440/- ☐ Rs.2160/- ☐
favouring "Diamond Comics Pvt. Ltd." payable at Delhi / Noida.
(for outstation subscription, please send a D.D. only)

Name : Mr./Ms. ____________ Date of Birth ☐☐ ☐☐ ☐☐
Address : ____________
____________ Pin ☐☐☐☐☐☐
Phone : ____________ Date ____________ Signature ____________

Terms and Conditions: ● This subscription offer closes on 30th June 98. The draw of lots for 1st, 2nd, 3rd & Consolation prizes will be held after 30th June 98. For the 1st prize, is one way ticket to Disneyland. ● The decision of the judges regarding the prizes will be final and no correspondence will be entertained in this regard. ● Please allow us 3-4 weeks for your subscription to start and 6-8 weeks for despatch of your free gifts by courier/regd. post. ● For outstation subscription, please send a D.D. only. ● All the subscriber of this scheme are eligible for the draw of prizes. Employees of Diamond Comics and their relatives are not eligible to participate in this offer. ● Winners will be notified individually. ● The prizes cannot be exchanged for cash. ● Diamond Comics (P) Ltd. reserves the right to extend, cancel or discontinue this offer without giving any reason or prior notice. ● This offer is valid in India only and all disputes shall be subject only to Delhi Jurisdiction.

Please fill the coupon, the list of selected free "Popular Diamond Comics" & "Popular Amar Chitra Katha" and mail along with your remittance to

Diamond Comics Pvt. Ltd., A-11, Sector-58, Noida- 201301(U.P.)



கோகுலம்

மே 1998 | மலர்: 16 இதழ்: 4



அன்பார்ந்த சிறுவர், சிறுமியரே,

கோடை விடுமுறையில் சுற்றுலா செல்வதென்றால் ஏதோ ஒரு வாரம் அல்லது அதிகபட்சம் பத்து நாள் போகலாம். இரண்டு மாதங்களும் கொடைக்கானல் அல்லது ஊட்டியில், உட்கார்ந்திருப்பது என்பது வெகு சிலரால் மட்டுமே முடியும்.

பாக்கியுள்ள நாட்களை என்ன செய்வது? எப்படி பொழுதைக் கழிப்பது? ஒன்-டே-மேட்ச் இருந்தால் டீவி எதிரே உட்கார்ந்து பால் - பை - பால் பார்த்து ரசிக்கலாம். டெண்டுல்கர் ஐந்து விக்கெட் சாதனை புரிந்து, கிரிக்கெட் பந்தை அம்மானை ஆடிய காட்சியை மறக்க முடியுமா என்ன!

அதுவும் போக மீதியுள்ள நேரத்தை என்ன செய்வது? அதற்காகத்தான் இந்த விடுமுறை மலர் தயாரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பக்கத்திலும் உங்களுக்கு ஓர் ஆச்சர்யம் காத்திருக்கிறது. விளையாட்டுகள், புதிர்கள், கைத் திறனுக்குச் சவால் விடும் 'செய்து பாருங்கள்' பகுதிகள் என்று உங்கள் நேரத்தை முழுமையாகவும் பயனுள்ள வகையிலும் ஆக்கிரமிக்கும். இந்த இதழ் கோகுலத்தை மட்டுமென்ன, எந்த ஒரு கோகுலம் இதழையும் வாங்கிப் படிக்காத சிறுவர், சிறுமியருக்கு பெரிய இழப்புதான்!


இந்தக் கோடை விடுமுறையில் நீங்கள் ஒரு ஹாபியை ஆரம்பித்துக் கொள்ள லாம் என்றும் இந்த இதழ் யோசனை கூறுகிறது. தோட்டம் போடுவது, ஸ்டாம்பு சேகரிப்பது, ஏதேனும் ஒரு வாத்தியக் கருவியோ வாய்ப்பாட்டோ கற்றுக் கொள்வது, அல்லது ஒரு மலிவான காமிரா வாங்கி புகைப்படங்கள் எடுக்கப் பழகுவது என்று இப்படி...

எனக்குத் தெரிந்து பலருக்கு ஹாபியாக ஆரம்பித்த ஒன்றே முழு நேரத் தொழிலாக ஆகியிருக்கிறது. பட்டப்படிப்பு முடித்த பிறகும் உத்தியோகம் தேடாமல், ஹாபியாகப் பயின்றதிலேயே நிபுணர்களாகி, வாழ்க்கையில் வளர்ந்து முன்னேறியிருக்கிறார்கள். ஒரு வயலின் வித்வானாக, ஒரு புகைப்படக் கலைஞராக, ஒரு தோட்டக்கலை நிபுணராக அல்லது ஒரு எழுத்தாளராக உங்களுக்கும் ஒருவேளை ஒரு எதிர்காலம் காத்திருக்கிறதோ என்னமோ!

அன்புடன்,


(கி. ராஜேந்திரன்)
ஆசிரியர்

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும். — பாரதியார்.










கோகுலம்

மே 1998

இந்த இதழில்...



நீங்களே திரைப்படம் தயாரிக்கலாம்!

தீபாவளியின் போது கம்பி மத்தாப்புகளை இருட்டில் கொளுத்தி மேலும் கீழும் அசைத்து விளையாடியதுண்டா? மத்தாப்புக் கம்பியை வட்டமாகவோ, அல்லது எட்டு போன்ற வடிவம் வருமாறோ நாம் சுழற்றும் போது எரியும் பகுதி வெவ் வேறு இடங்களில் தனித் தனியே தெரிவதில்லை. ஒரே தொடர்ச்சியான பிம்பமாகவே காட்சி யளிக்கிறது.

நோட்டில், ஒரு பக்கத்திற்கும் அடுத்த பக்கத்திற்கும் சற்றே மாறுதல் இருக்கும் அளவிற்கு, பக்கங்களின் ஓரங்களில் ஒரு உருவத்தை வரையுங்கள். நோட்டின் தாள்களை வேகமாக விசிறும் போது உருவம் அசைவது போல மாயத் தோற்றம் ஏற்படும். இது ஒரு மௌனத் திரைப் படம் பார்ப்பது போல இருக்கும்.

இது போன்ற ஓசையில்லாத் திரைப்படம் தயாரித்து விடுமுறையில் உங்கள் தம்பி, தங்கைகளை மகிழ்விக்க இன்னொரு வழியும் உண்டு. இதை நீங்களே செய்யலாம்!


என்னென்ன தேவை?


1. சுமார் 10 செ.மீ. விட்டமுள்ள பிளாஸ்டிக் மூடி
2. தீர்ந்து போன பால் பாய்ண்ட் பேனா ரீபில்
3. அட்டை
4. பென்சில்
5. பசை

எப்படி?

முதலில் மூடியின் நடுவில் காம்பஸ் வைத்து ஒரு ஓட்டை போட வேண்டும். அந்த ஓட்டையினுள் பால் பாய்ண்ட் பேனா ரீபிலின் பித்தளை முனையை செருக வேண்டும். மூடி, ரீபிலில் நன்றாக சுழல வேண்டும்.

ஒரு அட்டையை மூடியின் சுற்றளவிற்கு வெட்டிக் கொள்ளுங்கள். இதன் உயரம் மூடியின் உயரத்தை விட சற்று அதிகமாக இருக்க வேண்டும். இந்த அட்டையில் படத்தில் காண்பித்துள்ள படி உருவங்களை வரையுங்கள். ஒவ்வொரு படத்திற்கும் நடுவில் சிறிது வெட்டி விடுங்கள். பின்பு இந்த அட்டையை, உருவங்கள் உட்பக்கம் இருக்கும் படி மூடியில் ஒட்டுங்கள். இப்பொழுது மூடியைச் சுழற்றினால், நமக்கு உருவங்கள் அசைவது போலத் தெரியும். படம் நன்றாகத் தெரிவதற்கு அட்டையின் வெளிபுறத்தில் கறுப்பு வண்ணம் பூசி விடுங்கள். இப் பொழுது சுழற்றி விட்டு தங்கை, தம்பிகளிடம் பார்க்கச் சொல்லுங்கள். பறவை இறக்கை விரித்து பறப்பது போலவோ, மனிதன் நடந்து, ஓடுவது போலவோ நீங்கள் வரைந்த காட்சிகள் அழகாகத் தெரியும்.






சூரியன் மறையும் முன்....

மன்னன் பகவதி ராஜனுக்கு கர்வம் அதிகம். யாரையும் மதிக்க மாட்டான்.

அந்நாட்டிற்கு முனிவர் ஒருவர் வந்தார். மக்கள் தினமும் சென்று வழிபட்டு வந்தனர். இதை அறிந்த அரசன் முனிவரை அரண்மனைக்கு அழைக்க விரும்பினான்.

பணியாளைக் கூப்பிட்டு "முனிவரை சூரியன் மறையும் முன் அரண்மனை விருந்தில் பங்கேற்குமாறு கூறு" என்று அனுப்பி வைத்தான்.

அன்று மாலை விருந்திற்கு முனிவர் புறப்பட்டார். வழியில் ஒரு விவசாயிக்கு பாம்பு கடித்துவிடவே முனிவர் சிகிச்சை யளிக்க வேண்டியதாகி விட்டது.



சிகிச்சை முடிந்தபோது சூரியனும் மறைந்துவிட்டது. வேகமாக அரண் மனைக்குச் சென்றார்.

அரசன் அவரைப் பார்த்து "முனிவரே காலம் தவறி வந்ததால் தங்களுக்கு விருந்து வைக்க முடியாது" எனக் கூறி அனுப்பி விட்டான்.

மறுவாரம் அரசன் நகர்வலம் சென்றான். முனிவரின் குடிசை வழியே வரும் போது அரசனை ஒரு பாம்பு கடித்தது. எல்லோரும் முனிவுரை அழைத்தனர். முனிவர் வந்தார்.

"ஐயா விரைவாகக் காப்பாற்றுங்கள்" என்றான் அரசன்.

"அரசே என்னை மன்னியுங்கள். என்னால் வைத்தியம் செய்ய இயலாது. பக்கத்து நாட்டு அரசர் விருந்திற்கு அழைத்திருக்கிறார். நான் செல்ல வேண்டும்" என்றார்.

"ஐயா, உயிரைக் காப்பாற்றுவதை விட விருந்து அவசியமா?" என்று கேட்டான் அரசன்.

"போன வாரம் ஒரு உயிரைக் காப்பாற்றியதால்தான் ஒரு விருந்தை இழந்தேன். இதையும் இழக்கத் தயாரில்லை"

என்றார் முனிவர்.

"என்னை மன்னித்து விடுங்கள்" என்று கெஞ்சினான் அரசன்.

உடனே முனிவர் சிகிச்சையளித்துக் காப்பாற்றினார் அரசனை.

"ஐயா இதற்கு நான் என்ன கைமாறு செய்வேன்" என்றான் அரசன் பணிவுடன்.

"நீ பெரியோரை மதித்தாலே போதும்" என்றார் முனிவர்.

— ஜோ. தேன்மொழி,
பன்னிரெண்டாம் வகுப்பு,
அரசினர் மேல்நிலைப்பள்ளி,
ஊத்துக்கோட்டை.

பெயர் தெரியாது!

ஈ ஒன்று கவலையாக உட்கார்ந்திருந்தது. அதன் கவலைக்குக் காரணம் 'தன்னுடைய பெயர் தெரியவில்லையே' என் பதுதான்.

சரி! இப்படியே வருத்தப்பட்டுக் கொண்டிருந்தால் மட்டும் பெயர் தெரியவா போகிறது!

யாரிடமாவது விசாரித்துப் பார்த்தால் என்ன என்று தோன்றவே ஈ சுற்றும் முற்றும் பார்த்தது. அருகில் கொசு ஒன்று தேங்கிய நீரில் உட்கார்ந்திருந்தது.

அருகில் சென்ற ஈ "அக்கா எனக்கு ஒரு உதவி செய்வாயா?" என்று கேட்டது.

"கேட்பதை விரைவாகக் கேள். எனக்கு வேலை அதிகமிருக்கு" என்று நிமிர்ந்து பார்க்காமல் கூறியது கொசு.

"என் பெயர் உனக்குத் தெரிந்தால் சொல் லேன்" என்று கனிவாகக் கேட்டது ஈ.

"நான் எவ்வளவு கஷ்டப்பட்டு வேலை செய்துக்கிட்டு இருக்கேன்! கிண்டலா செய்யறே!" என்று விரட்டியது கொசு.



பயந்து போன ஈ அங்கிருந்து பறந்தது. போகும் வழியில் மரவட்டை ஒன்றை சந் தித்தது.

"அண்ணா என் பெயர் உங்களுக்குத் தெரியுமா?" என்றது ஈ.

"என் பெயரே எனக்குத் தெரியாது, ஆளை விடு" என்று கூறியபடி சுருண்டு கொண்டது மரவட்டை.

அங்கிருந்து மிகுந்த வருத்தத்துடன் சென்று ஒரு மிட்டாய்க் கடை வாசலில் அமர்ந்தது ஈ.

ஒரு சிறுவன் பஞ்சு மிட்டாய் சாப் பிடுவதைக் கண்ட ஈக்கு எச்சில் ஊறியது. உடனே பெயர் தெரியாத கவலையை மறந்து பஞ்சு மிட்டாயில் அமர்ந்தது.

அவ்வளவுதான் அந்தச் சிறுவன் "ஐயோ ஈ, ஈ" என அலறியபடி விரட்டினான்.

சுதாரித்துக் கொண்ட ஈ 'ஓஹோ என்

பெயர் ச' என்று ஆனந்தப்பட்டது.

— பி.என். நாகராஜன்,
நாகமங்கலம், தருமபுரி மாவட்டம்.

புத்திசாலி சின்னா!

அங்குசாமி பெரும் பணக்காரர். மிகவும் கஞ்சத்தனமாக இருப்பார். சம்பளமே கேட்காத அதிபுத்திசாலியான வேலைக்காரன் சின்னாவை வேலைக்கு வைத்திருந்தார்.

ஒரு நாள் வருமான வரி சோதனையாளர்கள் அங்குசாமியின் வீட்டை நோக்கிப் படையெடுத்தனர்.



முதலிலேயே விவரத்தை அறிந்து கொண்ட அங்குசாமி பணம், நகைகளை மூட்டையாகக் கட்டி தோட்டத்தில் புதைத்து விடுமாறு சின்னாவிடம் கூறினார்.

சிறிது நேரத்தில் சின்னா தோட்டத்திலிருந்து வந்தான்.

அங்குசாமி அவனிடம் ரகசியமாக "புதைத்து விட்டாயா?" என்று கேட்டார்.

"ஐயா நீங்கள் கூறியபடி புதைத்து விட்டு, ஒரு பெரிய கல்லையும் அதன் மீது வைத்து விட்டேன். யாராலும் எடுக்க முடியாது" என்றான்.

அங்குசாமியின் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை!

"எடுக்க முடியாதபடி என்ன செய்திருக்கே?" என்றார் ரகசியக் குரலில் அங்குசாமி.

"அந்தக் கல்லின் மீது இங்கு மூட்டை ஏதும் புதைத்து வைக்கப்படவில்லை என எழுதியிருக்கிறேன்" என்றான் பெருமிதத்துடன் சின்னா.

அங்குசாமி அதிர்ந்து போய் நின்றார்.

— ஆபில் பாஷா, ஒன்பதாம் வகுப்பு,
'அ' பிரிவு, ஆண்கள் மேல்நிலைப்
பள்ளி, வத்தலக்குண்டு.

குறளைக் கண்டு பிடியுங்கள்!

வரவும் செலவும்...

எங்கள் ஊரின் நடுவில் ஒரு
குளம் இருக்குது — அது
எந்த நாளும் தண்ணீ ருக்காய்



தவம் இருக்குது
எந்த ஒரு கா
ரணத்தால்
இந்த வறட்சி?
நன்றாய்
எண்ணிப் பார்த்
துக் காரணத்தை
எனக்கும் சொல்
லுங்கள்.
தண்ணீர் வர
ஒரே வழி
தான் இருக்குது
— வந்த
தண்ணீர் வெளியே போக
வழி நூ றிருக் குது!
வந்த தண்ணீர் நிலைத்து நிற்க
வழியில் லாத தால் — கொடும்
வறட்சி அந்தக் குளத்தி லேயே
குடி இருக்குது!
செலவு செய்யும் வழிகளை நாம்
சின்ன தாக்கினால் — நமது
வரவு கொஞ்சம் சுருங்கி னாலும்
வறட்சி வராது!
குளத்தின் நிலை நமக்குத் தரும்
பாடம் இது வாம் — திருக்
குறள் படித்தோர் அனைவருக்கும்
தெரிந் திருக்கு மே!

— ரா. பொன்ராசன்

ஆகாறு அளவிட்டி தாயினும் கேடில்லை
போகாறு அகலாக் கடை.

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டி-1998



பரிசு ரூ. 1000/-

கதை எழுத ஆர்வமுள்ளவர்களுக்கு, இதோ ஓர் மகிழ்ச்சியான செய்தி! சிறுவர் இலக்கியம் செழிக்கத் தம்மை முழுவதுமாக ஈடுபடுத்திக் கொண்ட அழ. வள்ளியப்பா, கோகுலத்தின் முதல் கௌரவ ஆசிரியர். அவர் நினைவாக இந்த ஆண்டும் சிறுவர் சிறுகதைப் போட்டியை அறிவிப்பதில் கோகுலம் பெருமை கொள்கிறது.

1. இந்தப் போட்டியில் பள்ளி மாணவ-மாணவியர் (+2 உட்பட) மட்டுமே கலந்து கொள்ளலாம். ஆசிரியர் அல்லது பெற்றோரின் கையொப்பமிட்ட சான்று இணைக்கப்பட வேண்டும்.

2. சிறுகதைகள் சிறுவர்களுக்கானதாக இருக்க வேண்டும். நகைச்சுவை, துப்பறிதல், சமூகம், வரலாறு, அறிவியல் என்று எதைப் பற்றியதாக வேண்டுமானாலும் இருக்கலாம். சொந்தக் கற்பனை என்ற உறுதிமொழியுடன் அனுப்ப வேண்டும். கோகுலத்தில், கதைகள் 3 முதல் 4 பக்கங்களுக்கு மேற்படாமல் அமைதல் வேண்டும்.

3. வெள்ளைத் தாளில் ஒரு பக்கம் மட்டுமே எழுதலாம். கையெழுத்து தெளிவாகப் புரியும்படி இருக்க வேண்டும். தட்டச்சு செய்தும் அனுப்பலாம். ஆனாலும் கட்டாயமில்லை.

4. பரிசு பெறாத, பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கதைகளைத் திரும்பப் பெற, போதிய தபால் தலைகளை ஒட்டிய சுயவிலாசமிட்ட உறையைக் கதைகளுடனேயே இணைக்க வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை. இது குறித்து எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்ளப்பட மாட்டாது.

5. இதில் கலந்து கொள்ளக் கட்டணம் ஏதும் இல்லை. ஒருவரே எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம். ஆனால், ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக உறுதிமொழி இருக்க வேண்டும்.

6. முதல் பரிசு ரூ. 300/- (ஒரு கதைக்கு) இரண்டாவது பரிசு ரூ. 200/- வீதம் இரண்டு கதைகளுக்கு. மூன்றாவது பரிசு ரூ. 100/- வீதம் மூன்று கதைகளுக்கு. ஆகமொத்தம் ரூ. 1000/- பரிசாக வழங்கப்படும்.


7. தவிர, பிரசுரத்துக்கு ஏற்கப்படும் ஒவ்வொரு சிறுகதையும் ரூபாய் ஐம்பது பரிசாகப் பெறும். கதைகளை முதல் முறையாக வெளியிடும் உரிமை கோகுலத்திற்கே உண்டு. பிறகு இதன் உரிமை முழுவதும் ஆசிரியருக்கே.

8. முடிவு தேதி 31.5.98. இதற்கு மேல் வருபவை பரிசீலனைக்கு ஏற்கப்பட மாட்டா. தபாலில் ஏற்படும் தாமதத்திற்கு கோகுலம் பொறுப்பேற்காது. நடுவர் குழு பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுக்கும்.

9. அயல்நாட்டில் உள்ளவர்கள், இந்தியாவில் நண்பர் அல்லது உறவினர் முகவரியைக் கட்டாயம் தரவேண்டும்.

10. கதைகளை, **'ஆசிரியர், கோகுலம், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097'** என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். உறையின் மேல் ***'அழ. வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டி.'*** என்று அவசியம் குறிப்பிட வேண்டும்.

11. போட்டி குறித்து எழும் எவ்விதப் பிரச்னைகளுக்கும், சந்தேகங்களுக்கும் கோகுலம் ஆசிரியர் எடுக்கும் தீர்ப்பே முடிவானதாகும்.



✉ கோகுலத்தில் கதை எழுத ஆசையாக இருக்கிறது. முகவரியைக் கண்டிப்பாக எழுத வேண்டுமா?

மா. ஜோதிலட்சுமி,
திருப்பத்தூர்,
சிவகங்கை மாவட்டம்.

என்ன ஜோதி! இப்படி ஒரு கேள்வி? படைப்புகளை அனுப்பும் போது உங்கள் பெயர், வகுப்பு, பள்ளி, ஊர் என அனைத்தையும் குறிப்பிட்டு முழுமுகவரியுடன் அனுப்ப வேண்டும். (ஆர்)

✉ ஆசிரியரின் கடிதத்தைப் படித்தவுடன் விடுமுறையைக் கழிக்க குடும்பத்துடன் உட்கார்ந்து திட்டம் போட்டிருக்கிறோம்.

மு. சிவசங்கர்,
செட்டியார்பட்டி,
திருநெல்வேலி மாவட்டம்.

✉ சரணாலயங்கள், செல்லும் வழி, தங்கும் வசதி பற்றி எழுதிய கட்டுரை சுற்றுலா வழிகாட்டி போல் அருமையாக இருந்தது.

தே. கல்பனாதேவி,
நெய்வேலி வட்டம்.

✉ 35 வயதில் தென் ஆப்பிரிக்க அணியில் இடம்பெற்று, 38வது வயதில் உலக சாதனை புரிந்த பாட் சிம்காக்ஸ் தன்னம்பிக்கைக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கிறார்.

வெ. பாரதி,
எட்டாம் வகுப்பு,
அரசினர் மேல்நிலைப் பள்ளி,
நாமக்கல்.

✉ குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டி அறிவிப்பைக் கண்டதும் என் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை!

ஜி. ராதிகா,
ஒன்பதாம் வகுப்பு,
அரசினர் பெண்கள் உயர்நிலைப் பள்ளி,
பரமக்குடி,
இராமநாதபுரம் மாவட்டம்.

மகிழ்ச்சிக்கு அளவேயில்லை!

✉ எங்கள் ஊரில் நடந்தது, பிருந்தாவனக் கதையரங்கம், சிரிப்புகளை நான் விரும்பி, ரசித்துப் படிக்கிறேன்.

கா. சங்கர்,
ஆறாம் வகுப்பு,
ஸ்ரீரங்கம்.

✉ 'ஆப்பிரிக்க யானைகள் அழிந்து வருகின்றனவா?' என்ற கட்டுரையைப் படித்ததும் நெகிழ்ச்சியாக இருந்தது.


வி. சரளா,
எட்டாம் வகுப்பு,
சின்ன திருப்பதி,
சேலம் மாவட்டம்.

✉ வால்ட் டிஸ்னி உலகத்தை நேரில் சென்று பார்க்காவிட்டாலும் கோகுலத்தில் வந்த போட்டோ என்னை அங்கேயே கொண்டு சென்று விட்டது!

வ. பால்ராஜ்,
அனந்தபுரம்,
செஞ்சி.

✉ வெங்காயம் பற்றிய வரலாறு மற்றும் மருத்துவச் செய்திகள் எல்லோருக்கும் பயன்தரும்.

எஸ். ஞூர்துமேரி,
பெரியகுளம்,
மதுரை மாவட்டம்.



காழியுடன் ஒரு கம்பு விளையாட்டு!

அமுதன் தன் நண்பர்கள் இளங்கோ, மணி, கண்ணன் ஆகியோரைப் பார்க்கச் சென்றான்.

"வாடா அமுதன். ஏதோ பரபரப்பா சொல்ல வந்தது மாதிரி தெரியுதே. என்னடா?'' என்றான் இளங்கோ.

"போன வாரம் மழை பேஞ்சி அய்யனார் அருவியில தண்ணி வருதுன்னு தெரிஞ்சதும் எல்லோரும் போய் குளிச்சிகிட்டு இருந்தாங்க. மலைஉள் காட்ல மழை பேஞ்சி திடீர் வெள்ளம் வந்திருக்கு. சத்தம் கேட்டதும் எல்லாரும் பாறையில ஏறிக்கிட்டாங்க. ரெண்டு மூணு பேரு அக்கரைக்கு ஓடிட்டாங்க. எல்லோரும் கூச்சல் போட்டுருக்காங்க. இதக் கேட்ட உடனே சைக்கிள்ல வேகமாகப் போயி போலீசுக்கு தகவல் தந்ததும் அவங்க வந்து பாறையிலே தவிச்சிட்டு இருந்தவங்களைக் காப்பாத்திட்டாங்களாம்!''

"நாமும் போய் அருவியைப் பார்த்துட்டு வரலாம்'' என்றான் மணி.

நால்வரும் கிளம்பினர்.

"கோயமுத்தூர் பக்கம் ஒரு யானைக் குட்டியவே ஆத்து வெள்ளம் அடிச்சிட்டு வந்திட்டதாமே.''

"அப்புறம்?''

"கிராமத்து ஜனங்க யானைக்குட்டிய புடிச்சி வனத்துறையினரிடம் ஒப்படைச்சாங்களாம்.''

"ஒருசமயம் சதுரகிரி மலை, மகாலிங்கம் கோவில் திருவிழாவுக்கு போனவங்க, தண்ணியில்லாத ஆத்து மணல்ல இரவுல படுத்திருந் தாங்களாம். அப்ப திடீர் வெள்ளம் வந்து ரொம்ப பேரை அப்படியே அடிச்சிட்டுப் போயிடுச்சாம்.''

நால்வரும் பேசிக் கொண்டே அருவிப் பக்கம் வந்து விட்டனர். இவர்களைப் பார்த்த வனத்துறை அலுவலர் ஒருவர் "தம்பிகளா அருவியில யாரும் குளிக்கப் போகக் கூடாதுன்னு போலீஸ் சொல்லியிருக்காங்க. அதனால நீங்க அங்க போகக் கூடாது'' என்று கூறினார்.

அமுதன் "சரிங்க அப்ப நாங்க கோவி

கொ.மா. கோதண்டம்

லுக்கு மாத்திரம் போயிட்டு வந்திடுறோம்'' என்றான்.

"சரி, சரி நேரா போயிட்டு சாமி கும்புட்டு வந்துடுங்க. அந்தப் பக்கமா ஆத்துக்கு போயிட வேண்டாம்" என்று அவர் கூறியதும் –

''சரிங்க சார் உடனே வந்திடுறோம்'' என்று சொல்லிவிட்டு அவர்கள் கோவிலுக்குப் போய் சாமி கும்பிட்டனர்.

''இன்னிக்கி நல்லா வெயிலடிக்கிது. இப்படியே கோவிலுக்கு பின்னால கூடி போயி கொஞ்ச தூரம் மலை ஏறி அங்க எங்கயாவது பாறையில உக்காந்துட்டு வருவமே'' என்றான் இளங்கோ.

"ஆமா நல்ல யோசனைதான்! பொழுது போனது மாதிரியிருக்கும். அங்கேயே தண்ணி வார இடமா பார்த்து டிபன் சாப்பிட்டு வரலாமே" இது கண்ணன்.

''பாதை தெரியணுமே'' என்று இழுத்தான் மணி.

''வாங்கப்பா போவோம். ரொம்ப தூரம் போனாத்தான் பாதை மாறிடும். கொஞ்சம் தூரம் போயிட்டு திரும்பிடலாம்'' அவர்கள் கோவிலுக்கு பின்பக்கமாக உள்ள ஒற்றையடிப்பாதையில் நடந்து மலை ஏறினார்கள்.

மரக் கிளைகளில் குரங்குகள் விளையாடிக் கொண்டிருந்தன. அதை வேடிக்கை பார்த்துக் கொண்டே நடந்தனர். மணி தன் பையிலிருந்து கடலை பருப்பு பொட்டலத்தைப் பிரித்தான். படக்கென்று பாய்ந்த ஒரு குரங்கு அவன் கையிலிருந்த பொட்டலத்துடன் மரத்து மேலே தாவி ஏறி ஓடியது.

''ஆ'' என்று அலறிய மணி செய்வதறியாது திகைத்து நின்றான்.

''குரங்கு எதிரில் எதயும் திங்கக் கூடாதுன்னு ஒரு தடவ நீலன் சொன்னது ஞாபகத்துக்கு வருது.''

''ஆமாப்பா நீலனை கூட்டிக்கிட்டு வந்திருக்கலாமில்லே.''

''அட அந்நேரம் யாருக்கும் அவன் ஞாபகம் வரலையே.''

''சரி விடுங்க. ஒரு தடவ நாமளா போயிட்டு வந்தாப்புல இருக்கட்டுமே.''

வெளியே நல்ல வெயில் அடித்தும் காட்டுக்குள் வெயிலே தெரியவில்லை. எங்கும் அடர்ந்த மரங்கள். கிழேயும் செடி, கொடிகள், உள்ளே எது இருந்தாலும் தெரி



யாத அளவுக்குப் படர்ந்திருந்தன. பாதை குண்டும் குழியுமாய் கற்களும் மரவேர் களுமாய் இருந்தது. கீழே பார்த்துத்தான் நடக்க வேண்டும். தூரத்தில் ஏதோ பறவைகளின் சத்தம், அருகிலே வண்டு களின் ரீங்காரம் யாவும் ஒருவித பயத் தையே தந்து கொண்டிருந்தது.

ஒரு இடத்தில் நெல்லி மரங்களில்



கிளைகளிலெல் லாம் இலைகள் தெரியாமல் காய்த் துக் குலுங்கியது.

மணி ஒரு கல்லை விட்டு எறிந் ததும் காய்கள் தொபு தொபுவென கீழே விழுந்தன. அவர் கள் நெல்லிக் காய் களை எடுத்து தின்று கொண்டே பைகளிலும் போட்டுக் கொண்டனர்.

''ஏய் நெல்லிக்கா ரொம்ப தித்திப்பா இருக்குப்பா.''

''சந்தையிலே படி பத்து ரூபான்னுல்ல விக்கிது.''

''ஆமாப்பா நெல்லிக்கா பற்றி மாதப் பத்திரிகை ஒன்றுல படிச்சேன். ஆறு ஆரஞ்சுப் பழ சத்து ஒரு நெல்லிக்காயிலே இருக்காம். இரண்டு ஆப்பிள் சத்து ஒரு நெல்லிக் காயில இருக்காம். சாப்பிட்டா பல்லு, எலும்பு வலுவாகுமாம்; ரத்தம் சுத்தமாகுமாம்; உடல் சூடு தணியுமாம்; பல நோய்கள் தீருமாம்.''

''அடேயப்பா இவன் வைத்தியரா மாறிவிடலாம் போல.''

ஏதோ விலங்குகள் படுத்திருப்பதைப் போன்று ஆங்காங்கே சிறிய பெரிய பாறைகள் இருந்தன.

அவர்கள் பேசிக் கொண்டே சென் றனர்.

திடீரென்று இளங்கோ ''அதோ பாருங்கப்பா பாதையிலே ஏதோ வார மாதிரியில்லே தெரியுது'' என்றதும் அவர்கள் பயத்துடன் பார்த்தனர்.

''ஏய் ஆமா கரடி வருதுப்பா. இப்ப என்ன செய்ய?'' என்றான் அமுதன்.

''மரத்துல ஏறிக்கிடலாமா?'' என்றான் மணி.

''கரடி மரத்துல ஏறிடுமாமில்லே. நாம அதோ அந்தப் பெரிய பாறையில ஏறிக் கிடலாம்'' என்றான் கண்ணன். அவர்கள் ஓடி பெரிய பாறையில் தத்தி ஏறினார் கள். இவர்களைப் பார்த்து விட்ட கரடி யும் ஓடி வந்தது. மேலேயிருந்து அவர்கள் ஒரு கல்லை உருட்டி விட்டார்கள். அதைப் பார்த்து கரடி ஓடிச் சென்று தூரத்தில் நின்று கொண்டது. அது போவதாக இல்லை.

''என்னப்பா கரடி அங்கேயே நிக் குதே, நாம எப்படி இறங்கிப் போவது?''

''அதானே, இப்ப என்ன செய்யறது?''

அய்யனார் கோவில் பனியர் குடி சைங்க இங்கிருந்து ஒரு பர்லாங் தூரந் தான் இருக்கும். வனத்துல சத்தமும் அவ் வளவு தூரம் கேக்கும். சத்தம் போட்டு

அவங்கள கூப்பிட்டா என்ன?

''அதான் சரியான வழி. நீலா நீலான்னே கூப்பிடுவோம்.''

அவர்கள் மாறி மாறி "நீலா" "நீலா" என்று பெரும் சத்தமுடன் கூப்பிட்டார்கள்.

''நீ யாரையும் கூப்பிடு. நா பயந்திடுவேனாக்கும்' என்பதைப் போல கரடி அங்கேயே அசையாமல் இருந்தது. சிறிது நேரத்தில்''யாரு சாமி என்னைக் கூப்பிடுறது?'' என்றவாறே நீலன் ஓடி வந்தான்.

''நீலா பாறைக்கு இந்தப் பக்கம் ஒரு கரடி நிக்கிதுப்பா. நாங்க தப்பிக்க ஒரு வழி சொல்லு.''

''இருங்க வாறேன்'' என்ற நீலன் அருகிலிருந்த நீளவாக்கான செடியில் இரண்டு கம்புகளை ஒடித்தான். அவை கம்பு விளையாட்டுக்கு ஆகும் போல இருந்தது. இரண்டையும் கையில் எடுத்துக் கொண்ட நீலன் பாறையருகில் வந்து அந்தப் பக்கம் எட்டிப் பார்த்தான். கரடி இவனைப் பார்த்து ஓடி வந்தது. ஒரு கம்பை அதை நோக்கி வீசினான். அருகில் விழுந்த கம்பை கரடி எடுத்துக் கொண்டது. கரடிக்கு முன்னே வந்த நீலன் கம்பை அப்படியும் இப்படியும் சுழற்றினான்.

கம்புடன் எழுந்து, இரண்டு கால்களால் நின்று கொண்டு முன்னங்கால்களால், கைகளைப் போன்று கம்பைப் பிடித்து கரடியும் சுழற்ற ஆரம்பித்தது.

நீலன் கம்பைச் சுழற்றியவாறே பின்புறமாக நடக்க ஆரம்பித்தான். அதுவும் அவனை நோக்கி நடந்தது. சிறிது நேரத்தில் நீலனும் கரடியும் மறைந்து போனார்கள்.

பாறையில் இருந்த மாணவர்கள் அதிசயத்துடன் அந்தக் காட்சியைப் பார்த்தார்கள்.

''அப்ப நாம இறங்குவோமா?''

''நீலன் வந்து சொன்னதுக்குப் பிறகு இறங்குவோம்.''


சிறிது நேரம் கழிந்தது. நீலன் இவர்களிடம் ஓடி வந்தான். ''சரி இறங்குங்க சாமி இப்படியா வனத்துக்குள்ளே யாரையும் கூப்பிடாம வாரது'' என்றான். பாறையிலிருந்து இறங்கிய அவர்கள் நீலன் அருகில் வந்தனர்.

''கொஞ்ச தூரம் போயிட்டு வருவமேன்னு வந்துட்டடம்பா. சரி; கரடி எங்கே?''

''சாமி, கரடி கையில் ஒரு கம்பைக் குடுத்திட்டா நாம் சுத்தறது போல அதுவும் சுத்தும். நம்ம பின்னாலேயே வரும். சமயம் பார்த்து நாம தப்பிச்சிக்கிடணும். இப்ப அது அலுத்துப் போய் உஸ்ஸுன்னு படுத்திருச்சி. நான் இங்க ஓடியாந்திட்டேன். இனி பின்னால வராது சாமி. இப்ப இந்த பாதையில போக வேண்டாம். ஒரு யானை நிக்கிது. காத்தடிக்கிற திசை பார்த்துப் போயி எப்படியும் கோயில்ல சேர்ந்திருவோம். அந்தப் பாதையில போனா காத்துல நம்ம வாடை யானைக்கு தெரிஞ்சி நம்மள பார்த்து வந்திடும்.'' அவன் பேசிக் கொண்டே பாதையில் மாறி மாறி நுழைந்து எப்படியோ கோவில் அருகே அவர்களை அழைத்து வந்து விட்டான்.

ஆற்றங்கரையில் நீலனுடன் சாப்பிட்டார்கள்.

''நீலா நீ வரல்லேன்னா எங்க கதி என்ன ஆயிருக்கும்? ஆபத்துல வந்து காப்பாத்துனே; உனக்கு நன்றிப்பா. நாங்க இந்த ஆத்துலயே குளிச்சிட்டு அப்படியே ஊருக்குப் புறப்படுறோம்'' என்றவர்கள் ஆற்றில் குளிக்கத் தயாரானார்கள்.



''கடல்ல முத்துக் குளிச்சு நீ பார்த்திருக்கியா?''


''பார்த்திருக்கேனே!''

''பொய்தானே சொல்றே?''

''எதிர் வீட்டு முத்து அண்ணனையே கேட்டுக்கடா... அவங்க கடல்ல குளிச்சப்ப நான் பார்த்தேனா இல்லையான்னு!''

— சீர்காழி வி. ரேவதி

குறுக்கெழுத்துப் புதிர்



இடமிருந்து வலம்

1. கங்காருகளின் நாடு (6)
4. பறவைகளை இப்படியும் அழைக்கலாம் (3)
5. மனிதன் இது கொள்ளக் கூடாது (3)
7. இதிலிருந்து தண்ணீர் இறைக்கலாம் (2)
8. பச்சையம் இல்லாத தாவரம் (3)
10. இந்தக் கோளைச் சுற்றி வளையம் இருக்கும். கிழமைகளில் ஒன்று (2)

வலமிருந்து இடம்

3. ஊறுகாய் போட்டு வைக்க உதவும் (2)
6. நான் என்பதின் பன்மை (2)
9. அவசரச் செய்தியை அனுப்ப உதவுவது. மோர்ஸ் இதைக் கண்டறிந்தார். (3)
12. இந்தப் பிரதேசத்தில் பெங்குவின்கள் அதிகமாக வாழ்கின்றன. (6)

மேலிருந்து கீழ்

1. நள்ளிரவில் குரலெழுப்பி பயமுறுத்தும் பறவை (3)
2. தஞ்சை பெரிய கோவிலில் நந்தியும் இதுவும் பிரமாண்டமாக இருக்கும் (4)
3. முதுகில் குழந்தையைச் சுமந்தபடி ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்ட வீரப் பெண்மணி (5)
8. மின்விசிறியை இப்படியும் அழைக்கலாம் (4)
9. சைக்கிளில் வேகமாகச் செல்ல வேண்டாம் என்று அம்மா வேகத்திற்கு இது போடுகிறார் (2)

கீழிருந்து மேல்

4. மார்கழி மாதம் இது அதிகமாகப் பொழியும் (2)
5. வலை பின்னும் பூச்சி (4)
10. நீண்ட தூரம் செல்லும் பயணிகள் தங்கி ஓய்வெடுக்க அக்காலத்தில் இதை அமைத்திருந்தார்கள் (5)
11. குரங்கிலிருந்து மனிதன் தோன்றினான் என்பதைக் கண்டறிந்த விஞ்ஞானி (4)
12. இரவில் மலரும் பூ (3)

விடை - 68 ஆம் பக்கம்

— ந. ரமா, சென்னை



எங்கள் ஊரில் நடந்தது!

வளரவே இல்லை!

நானும் தம்பியும் தெருவில் இருந்த மாஞ்செடியை எடுத்து வந்து வீட்டில் நட்டு வைத்தோம். தினமும் செடிக்குத் தண்ணீர் ஊற்றி வந்தோம். ஒரு மாதம்




ஆகியும் செடி கொஞ்சம் கூட வளரவே யில்லை. என் அம்மாவிடம் செடி வளராததைக் கூறினேன். அருகிலிருந்த தம்பி "ஆமாம் அம்மா! நான் கூட தினமும் வேரைப் பறித்துப் பார்க்கிறேன். ஒரு செ.மீ. கூட வளரவேயில்லை" என்றான். எனக்கு கோபமாக வந்தது. அம்மாவுக்கோ சிரிப்பை அடக்க முடியவில்லை!

தே. இளங்குமரன்,
கருப்பனூர் கிராமம், திருப்பத்தூர்.

சாதாரணம்!

பக்கத்து வீட்டு மாமா 'அன



கோண்டா' படம் பார்த்து விட்டு வந்தார். "நம்ம ஊர் பாம்பெல்லாம் ரொம்ப சாதாரணம், அனகோண்டாவைப் பார்த்தால்தான் பயமாக இருக்கிறது" என்றார். "மாமா உங்க காலடியிலே ஏதோ ஊர்வது மாதிரி தெரியுது!" என்றேன் நான். உடனே அலறியடித்துக் கொண்டு வீட்டிற்குள் சென்றார் மாமா. "ஏன் மாமா, உங்களுக்குத்தான் நம்ம ஊர் பாம்பு ரொம்ப சாதாரணமாச்சே!" என்று நான் கேட்டவுடன் கோபமாய் பார்த்துவிட்டு உள்ளே சென்றுவிட்டார்.

துரை. கார்த்திக்,
ஒன்பதாம் வகுப்பு,
தேசிய மேல் நிலைப்பள்ளி,
ராஜமன்னார்குடி.

தண்டபாணி இருக்கிறாரா?

டெல்லியில் உள்ள நண்பர் வீட்டிற்கு அழைத்துப் போனார் அப்பா. நண்பரின் வீட்டு எண் சரியாகத் தெரியாததால், விசாரிப்பதற்காக ஒரு வீட்டைத் தட்டினோம். "தண்டபாணி ஹைா?"



(தண்டபாணி இருக்கிறாரா?) என்று கேட்டார் அப்பா. அவர் ஒன்றும் பேசாமல் உள்ளே சென்று விட்டார். சிறிது நேரம் கழித்து ஒரு பாத்திரத்தில் குளிர்ந்த நீரைக் கொண்டு வந்து கொடுத்தார். எங்களுக்கு முதலில் ஒன்றும் புரியவில்லை. பிறகுதான் தெரிந்தது, நாங்கள் கேட்ட கேள்வியை அவர், 'டண்டா பாணி ஹை?' (குளிர்ந்த நீர் இருக்கிறதா?) என்று தவறாகப் புரிந்து கொண்டு விட்டார் என்று. நாங்கள் அவருக்கு தண்டபாணி என்பவருடைய வீட்டைத் தேடிக் கொண்டிருப்பதை விளக்கியவுடன், சிரித்துக் கொண்டே எங்களுடன் சேர்ந்து தேட ஆரம்பித்தார்.

எஸ். ஸ்ரீராம்,
நான்காம் வகுப்பு
ஸ்ரீவாணி வித்யாலயா, நங்கநல்லூர்,
சென்னை.

பஸ் ஸ்டாண்டிலா?

ஊரிலிருந்து மாமா, அத்தை, பாட்டி வந்திருந்தார்கள். என் தம்பி அசோக்கை அழைத்து "எந்தப் பள்ளியில் படிக்கிறே?" என்றார் மாமா. அவனும் சொல்லி முடித்தான். மீண்டும் "எந்த வகுப்பு படிக்கிறே?" என்றார் மாமா. அவனும் "பஸ்ட் ஸ்டாண்டர்ட்" என்றான். இதை கவனித்துக் கொண்டிருந்த பாட்டி, "ஏண்டா உனக்கு படிக்க பள்ளிக் கூடம் இல்லாமல், பஸ் ஸ்டாண்டிலேயா படிக்கிறே?" என்று கேட்டார். பாட்டியிடம் "அவன் முதல் வகுப்புப் படிக்கிறான்" என்று விளக்கினேன்.



என். ராஜி,
மேலப்பாதி.


கறிப்வேப்பிலை கிள்ளு!

அம்மா சமைத்துக் கொண்டிருந்தார். நான் பாடம் படித்துக் கொண்டிருந்தேன். விளையாடிக் கொண்டிருந்த என் தங்கையைக் கூப்பிட்டு "கறிவேப்பிலை கொஞ்சம் கிள்ளிட்டு வா" என்றார் அம்மா. சிறிது நேரமாகியும் அவள் வந்து கண்டு, "கறிவேப்பிலை கிள்ளச் சொன்னால் என்ன செய்யறே?" என்று கேட்டார் அம்மா தங்கையிடம். "அம்மா நான் அப்போதே நறுக்குன்னு கிள்ளிட்



டேன்" என்று சொல்லி விட்டு மீண்டும் விளையாட ஆரம்பித்தாள் தங்கை. அம்மா கறிவேப்பிலை பறிப்பதை கிள்ளு என்று சொன்னதால் தங்கை தவறாகப் புரிந்து கொண்டதை எண்ணி சிரிப்பாக வந்தது எனக்கு.

சு. காத்யாயனி,
ஆறாம் வகுப்பு, புனித
அலாய்சியஸ் மகளிர்
மேல்நிலைப் பள்ளி,
தூத்துக்குடி.





டான் கிராம்

தேர்வுகளெல்லாம் முடிந்து ஜாலியாக வீட்டில் பொழுதைக் கழித்துக் கொண்டிருப்பீர்கள். பகலில் வெயில் அதிகமாக இருப்பதால் மைதானத்தில் விளையாட முடியவில்லையே என்று கவலைப்படுகிறவர்களுக்கு இதோ ஓர் புதுமையான விளையாட்டு!

இதன் பெயர் டான்கிராம். இது ஒரு சீன விளையாட்டு. புதிர் என்றும் சொல்லலாம். 5000 ஆண்டுகளுக்கு முந்தைய விளையாட்டு என்று கருதப்படுகிறது. இதை விளையாட தனிப்பட்ட திறமைகள் எதுவும் தேவையில்லை. கற்பனை வளமும் ஆர்வமும் இருந்தால் யார் வேண்டுமானாலும் விளையாடலாம். இவ்விளையாட்டு சீனாவிலிருந்து உலகின் பல நாடுகளுக்கும் பரவியுள்ளது.

டான்கிராம் விளையாட பைசா செலவில்லை. உங்களின் பழைய நோட்டு அட்டையை சதுரமாக வெட்டிக் கொள்ளுங்கள். பின் படத்தில் காட்டியபடி ஏழு பாகங்களாக பென்சிலால் வரைந்து விட்டு வெட்டுங்கள். இந்த 7 பாகங்களை வைத்துக் கொண்டு ஏறக்குறைய 1600 வகையான






உருவங்களை உருவாக்கலாம். என்ன வியப்பாக இருக்கிறதா! முயன்று பாருங்கள்.

என்னென்ன செய்யலாம்?

- ஆங்கில எழுத்துகள்
- எண்கள்
- பல்வேறு வடிவங்கள்
- விலங்குகள், பறவைகள், மனிதர்கள்
- இன்னும் எத்தனை எத்தனையோ....

ஆரம்பத்தில் இது சற்று கடினமாகத் தோன்றும். ஆனால் இந்த விளையாட்டில் ஆர்வம் வந்து விட்டால் பல்வேறு புதிய உருவங்களை உருவாக்க முடியும்.

இயற்கையில் மிகவும் சிக்கலான வடிவமைப்புகளைக் கொண்ட உருவங்களைக்கூட இந்த 7 துண்டுகளை வைத்துக் கொண்டு உருவாக்க முடியும்.



விதிமுறைகள் என்ன?


1. எந்த ஒரு உருவத்தை உருவாக்கினாலும் 7 துண்டுகளையும் பயன்படுத்த வேண்டும்.

2. ஒவ்வொரு துண்டையும், மற்றொரு துண்டுக்குப் பக்கத்தில்தான் வைக்க வேண்டும். ஒரு துண்டின் மேல் மற்றொரு துண்டை வைக்கக் கூடாது.

இங்கே சில மாதிரி உருவங்கள் உள்ளன. இவற்றைச் செய்து பார்த்தபின் உங்கள் கற்பனையில் மேலும் பல புதிய உருவங்களை உருவாக்கி மகிழுங்கள்!

அட்டையில்: **கவிதாஞ்சலி**

வண்ணப்படம்: **ஸ்ரீஹரி**



கேட்கட்டுமா டாக்டர்?

பசி எப்படி ஏற்படுகிறது?

டாக்டர் கு. கணேசன்



● **என். பிரபாகரன், நிரவி.**

? பசி எப்படி ஏற்படுகிறது, டாக்டர்?

! பசி என்பது ஓர் உணர்வு. இது உண்டாகின்ற இடம் இரைப்பை மற்றும் குடல் பகுதிகள். ஆனால் பசியை ஏற்படுத்துவது இவையல்ல; மூளை! பெருமூளையில் பசி மையம் (Hunger Centre) உள்ளது. இரைப்பை, குடல்கள் இவற்றின் இயக்கங்களை பசி மையம் கட்டுப்படுத்துகிறது. ரத்தத்தில் உடம்புக்குத் தேவையான உணவுச் சத்துகள் இல்லாத போது இந்த பசி மையம் இரைப்பையையும், குடல்களையும் தூண்டுகிறது. விளைவு, அங்கு செரிமான நீர்கள் உற்பத்தியாகி பசி என்ற உணர்வை நமக்கு ஏற்படுத்துகிறது. உணவைச் சாப்பிட்டதும் பசி மையம், இரைப்பை மற்றும் குடல்களின் செயல்களை சிறிதளவு நிறுத்தி விடுகிறது. இதனால் நமக்குப் பசி



தெரிவதில்லை.

● **கே. வசந்தி, திருநெல்வேலி.**

? 'மமோகிராபி' என்றால் என்ன, டாக்டர்?

! மார்பகப் புற்றுநோயை ஆரம்ப நிலையிலேயே கண்டு பிடிக்க உதவும் மருத்துவப் பரிசோதனைக் கருவியின் பெயர் 'மமோகிராபி' (Mammography). பரிசோதனைக்கு சுமார் ஆயிரம் ரூபாய் செலவாகக் கூடும்.

● **கு. சுபாஷிணி, சென்னை - 41.**

? தும்மும்போது வைரஸ் கிருமிகள் வெளி வருமா? அது மற்றவர்களைத் தாக்குமா?

! சந்தேகமே வேண்டாம், சுபாஷிணி. ஜலதோஷம் பிடித்துள்ள நோயாளிக்கு மூக்கிலும் தொண்டையிலும்தான் வைரஸ் கிருமிகள் மிகுதியாக வாசம் செய்யும். நோயாளி இருமும் போது, தும்மும் போது மணிக்கு சுமார் 150 கி.மீ. வேகத்தில் வைரஸ் கிருமிகள் வெளியேறும். அப்போது அருகிலுள்ளவர்களின் முகத்திலோ, உடம்பிலோ பட்டுவிடும். பிறகென்ன, அவர்களுக்கும் அடுத்த இரண்டு நாட்களில் ஜலதோஷம் துவங்கிவிடும்.

● **கே. பிரஷ்னேவ், பாக்கம் கோட்டூர்.**

? நாய் கடித்தால் ஏன் தொப்புளில் ஊசி போடுகிறார்கள், டாக்டர்?

! வெறி நாய் கடித்தால் மனிதனுக்கு வெறி நோய் (Rabies) வருவது உனக்குத் தெரிந்திருக்கும் இல்லையா? இதைத் தடுக்க வெறி நோய்த் தடுப்பூசி (Anti Rabies Vaccine) போடுகிறார்கள். இந்தத் தடுப்பூசி பல வகைப்படும். அவற்றில் ஒன்று தான் நீ குறிப்பிட்டுள்ள தொப்புள் தடுப்பூசி. இந்த ஊசி மருந்தானது தொப்புளைச் சுற்றியுள்ள தசைப் பகுதியில் போடப்பட்டால்தான் ரத்தத்தில் கலந்து தடுப்புப் பணியாற்றும். மற்ற உடல் பகுதிகளில் இந்த ஊசி மருந்தைச் செலுத்தினால் பலன் கிடைக்காது. ஆகவேதான் இது தொப்புளைச் சுற்றிப் போடப்படுகிறது.

என்றாலும் இப்போது கைபுஜங்களில் அல்லது பிட்டம், தொடை போன்ற இடங்களில் போடக் கூடிய ஊசி மருந்துகள் நடைமுறையில் உள்ளன. நாய்க்கடித்தவர்கள் இவற்றையும் பயன்படுத்தலாம். என்ன, விலைதான் கொஞ்சம் அதிகம். ஒரு ஊசி 300 ரூபாய்! மொத்தம் 6 ஊசிகள் போட வேண்டும்.

● **த. வரதன், மன்னார்குடி.**

? உறிஞ்சி, இருமி, வாயில் வரும் சளியை விழுங்கி விட்டால் அடுத்ததாக அது என்ன ஆகும் என்பதைக் கூறுங்கள், டாக்டர்?

! சளி, இரைப்பைக்குச் சென்றதும் அங்குள்ள அமிலத்தில் கரைந்து விடும்; சளியில் உள்ள கிருமிகள் இறந்து விடும். பின்பு மலத்தில் இவை வெளியேறிவிடும் என்றாலும் சளியை விழுங்கும் பழக்கம் நல்லதல்ல! ஏனென்றால் அடிக்கடி சளியை விழுங்கி இரைப்பையை அடைத்துக் கொண்டால் பசி குறைந்து விடும்; செரிமானம் சரிவர நடக்காது.



உடல் பலவீனமாகி விடும்.

● **இ. பிரகாஷ், கொன்னிடம்.**

? சிறுவர்களுக்கு நீரிழிவு நோய் வருமா டாக்டர்?


! அப்பா, அம்மா இருவருக்கும் நீரிழிவு நோய் இருக்குமானால் அவர்களுக்கு பிறக்கும் குழந்தைகளுக்கு நீரிழிவு நோய் வருவதற்கு 90 சதவீதம் வாய்ப்புள்ளது.

● **எம். ரவிகுமார், வெள்ளைகிராமம்.**

? எய்ட்ஸ் நோய் உள்ள ஒருவரின் ரத்தம் நம் மீது படுவதால் நமக்கு எய்ட்ஸ் நோய் வருமா, டாக்டர்?

! எய்ட்ஸ் நோயாளியின் ரத்தம் நம் மீது சாதாரணமாகப் பட்டால் நமக்கு எய்ட்ஸ் நோய் வருவதில்லை. மாறாக, உடம்பிலுள்ள திறந்த காயங்கள் மீது அது படும்போது இந்த நோய் வரும் வாய்ப்பு உருவாகும்.

தொலைபேசி




குழந்தை போல கத்துது
அழுது அழுது பார்க்குது
கையில் தூக்கிக் கொண்டதும்
காது குளிர பேசுது!

விரலை நீட்டி எண்களை
வேக மாகச் சுற்றினால்
உரியவர்கள் காதிலே
விருப்பம் போல பேசலாம்!
நினைத்த போது பேசலாம்
நிறைய நிறைய பேசலாம்
எவருடனும் பேசலாம்
எது சொன்னாலும் கேட்கலாம்!

தொலை பேசிக் கருவியாம்!
தொடர்பு கொள்ளும்
கருவியாம்!
இதனைக் கண்டு பிடித்தவர்
கிரகாம் பெல் விஞ்ஞானியாம்!

— கருமலைப்பழம் நீ



பூ மாலை!

பிரபஞ்சமே அமைதியாக இருந்த வேளையில் பூமி மட்டும் வருத்தமாக இருந்தது. ஒரு நல்ல கணவனை அடைய பூமி முயன்றது. ஆகாயத்தை அதற்கு மிகவும் பிடித்துப் போனது.


"என்னைக் கல்யாணம் செய்வாயா?" என்றதும் ஆகாயமும் ஒப்புக் கொண்டது.


ஆனால் அவர்கள் கல்யாணம் விடிகாலை சேவல் கூவுவதற்கு முன் நடக்க வேண்டும் என்று குருக்கள் கூறினார். இதற்குள் மக்களுக்கு பயம் வந்து விட்டது. பூமிக்கும் ஆகாயத்திற்கும் கல்யாணமானால் பூமி மேலே சென்று விடுமே என்று பயந்து கிருஷ்ணரை வேண்டினார்கள்.

உழைப்பாளியின் சட்டை

விதிஷா என்ற நாட்டை ராஜவர்மன் ஆட்சி செய்து வந்தான். அவன் ஆட்சியை கவனிக்கவே மாட்டான். எப்பொழுதும் சாப்பிட்டுக் கொண்டோ அல்லது தூங்கிக் கொண்டோ இருப்பான். இதனால் அவன் சோம்பேறியாகவும் மிகவும் பருமனாகவும் இருந்தான். எந்த வேலையும் செய்யாமல் எப்பொழுதும் தூங்கிக் கொண்டிருந்த மன்னனை மக்கள் வெறுத்தனர்.

இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த அரண்மனை வைத்தியர் வைத்தியசீலன் மன்னனுக்குப் பாடம் புகட்டி, நாட்டை நல்வழிப்படுத்த வேண்டும் என்று





தான் பார்த்துக் கொள்வதாக கிருஷ்ணரும் வாக்களித்தார்.

குறிப்பிட்ட தினமும் வந்தது. கல்யாணத்திற்கு குருக்கள் தயாரானார். மக்கள் எல்லோரும் கூடினார்கள். வாத்தியங்கள் முழங்கின. கிருஷ்ணர் சேவல் ரூபம் எடுத்து திருமணம் நடக்குமிடத்திற்கு வந்தார். மணமகளான பூமி மிகவும் அழகாக இருந்தது. அதன் கழுத்தில் மாலை இருந்தது. முகூர்த்த நேரத்தில் சேவலாக வந்த கிருஷ்ணர் கூவிவிட, உடனே குருக்கள் "சேவல் கூவியாயிற்று. இனி திருமணம் கிடையாது" என்று கூறி விட்டார். மக்கள் நிம்மதியடைந்தனர்.

விரக்தியுடன் பூமி தன் கழுத்தில் இருந்த மாலையை ஆகாயத்தை நோக்கி வீசியது. ஆகாயம் பிடித்துக் கொண்டது. பூமியின் கண்ணில் நீர் நிறைந்தது. ஆகாயத்தில் சில சமயம் தெரியும் வானவில்லே அந்த மாலை! அதைப் பார்க்கும்போதெல்லாம் பூமிக்கு வருத்தமாக இருக்கும்!

– இந்திரா, பெங்களூர் – 8.

நினைத்து, அதற்கான தருணத்தை எதிர் பார்த்துக் கொண்டிருந்தார்.

ஒருநாள் காலையில் வழக்கம் போல் மெதுவாக எழுந்த மன்னன் திடீரென்று வயிற்று வலியால் துடித்தான். உடனே அரண்மனை வைத்தியர் அழைக்கப்பட்டார். அவர் மன்னனின் உடலைப் பரிசோதித்து அவரின் கடுமையான வயிற்றுவலிக்கு, உடல் உழைப்பு இல்லாததே காரணம் என்று அறிந்து கொண்டார்.

மன்னனை எப்படி உழைக்க வைப்பது என்று யோசித்தார் வைத்தியர். மன்னன் மிகவும் கோபக்காரன். அதனால் அவரிடம், 'நீங்கள் வேலை செய்யுங்கள்' என்று சொன்னால் தன் வேலை போவது நிச்சயம். அவருடைய மூளையில் 'பளிச்'சென்று ஒரு யோசனை தோன்றியது. உடனே மன்னனிடம் சென்று, "வேந்தே! தங்களுக்கு ஏற்பட்டுள்ள வயிற்றுவலி ஒரு மாதிரியானது. அதை தற்போது குணப்படுத்த நான் இந்த மாத்திரையைத் தருகிறேன். ஆனால் இது நிரந்தரமாக குணமாக வேண்டுமானால் தாங்கள் ஒரு உழைப்பாளியின் சட்டையை அணிய வேண்டும்" என்றார். அதைக் கேட்ட மன்னன், "நம் நாட்டில் எவ்வளவு உழைப்பாளிகள் உள்ளனர். ஏதாவதொரு உழைப்பாளியை நீங்களே அழைத்து வாருங்கள்" என்றான்.

அடுத்த நாள் மன்னன் முன், ஒரு ஏழை விவசாயி நிறுத்தப்பட்டார். அவர் சட்டையே அணியவில்லை. அவரை நோக்கி மன்னன், "ஏழை விவசாயியே, நீ உன்னிடமுள்ள சட்டைகளுள் ஒன்றை எனக்கு விலைக்குத் தருவாயா?" என்று கேட்டான். அதற்கு அந்த விவசாயி, "மன்னா! என்னிடம் ஒரே ஒரு சட்டைதான் உள்ளது. 'உழைப்பு'

என்பதுதான் அந்தச் சட்டை" என்றார் பணிவுடன்.

மன்னனுக்கு இப்பொழுது எல்லாமே விளங்கி விட்டது. தான் இவ்வளவு நாட்கள் பொறுப்பில்லாமல் நடந்து கொண்டதை எண்ணி வருந்தினான். தன்னை விழிப்புறச் செய்த அந்த விவசாயிக்கு பல பரிசுகளை வழங்கி னான். மன்னன் திருந்தக் காரணமாக இருந்த வைத்தியரை மக்களும், மன்ன னும் வாழ்த்தினர். மன்னனும் உழைப் பாளியாக மாறினான். நாடும் செழிப் பாக மாறியது.

– ஸ்ரீ. ஸ்ரீராம், ஏழாம் வகுப்பு,
கூடுவாஞ்சேரி, காஞ்சிபுரம்
மாவட்டம்.


சிற்றெறும்பின் ஆசை

இடும்பன் என்னும் சிற்றெறும்பு இரை தேடிக் கிளம்பியது. அது மற்ற எறும்புகளைப் போல் அல்லாமல் சிந்தித்துக் கொண்டே இருக்கும். தான் மிகவும் சிறிய உருவத்தைப் பெற்று இருப்பதால்தான் தொல்லைகளை அனுபவிக்க வேண்டி இருக்கிறது என்று வருந்தியது. எனவே அது வன தேவதையை நோக்கி தவம் புரிந்தது. எறும்பின் தவத்தால் மகிழ்ந்த வனதேவதை அதன் முன் தோன்றி, "உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டது. "நான் நினைத்த உருவம் பெற அருள்புரிய வேண்டும்" என்று கூறியது எறும்பு. "தந்தேன் வரம்" என்று கூறி தேவதை மறைந்தது.


பிறகு அது குயில் வடிவத்தைப் பெற்றது. காட்டில் சில காலம் மகிழ்ச்சியாக வாழ்ந்தது. ஒரு வல்லூறு அதைத் துரத்தவே அது யானையின் வடிவத்தைப் பெற்றது. ஒரு சிங்கம் அதைக் கொல்ல முயன்றது. எனவே அந்த எறும்பு சிங்கத்தின் வடிவத்தை எடுத்துக் கொண்டது. அது தன்னுடைய பிடரி மயிரையும் நகங்களையும் கண்டு தனக்கு உள்ளேயே மகிழ்ந்தது. ஒருமுறை வேடனின் அம்பு துளைத்த போது சிங்க உருவத்தைக் கைவிட்டது.

பிறகு மீனாக மாறியது. மகிழ்ச்சியுடன் வாழ்ந்தது. ஆனால் மீனவர்கள் அதை வலைவீசிப் பிடிக்க முற்பட்டனர். எனவே அது மனிதர்களின் உருவத்தைப் பெற்றது. மனிதர்கள் மத்தியில் இருந்த போதுதான் அவர்களுடைய பொறாமை, பேராசை, வஞ்சகம், பிறரின் உழைப்பைச் சுரண்டல் போன்ற குணங்கள் அதற்குத் தோன்றலாயின. எனவே அது மனித வாழ்க்கையை வெறுத்து மீண்டும் சிற்றெறும்பு ஆயிற்று.

இடும்பன் தன் புற்றை நோக்கி ஓடியது. "எந்த வாழ்க்கையிலும் துன்பமும் உண்டு, இன்பமும் உண்டு" என்று தன் நண்பர்களிடம் கூறி மகிழ்ச்சியுடன் வாழ்ந்தது.



– கோ. சு.
வைரமுத்து,
புதுக்கோட்டை.



திருப்பிக் கொடுக்கணுமா?

தேர்வு முடிந்த சந்தோஷத்தில் விளையாடிக் கொண்டிருந்தாள் தேவி.

"தேவி, இந்தா, இந்தத் தேங்காயை பக்கத்து வீட்டு மாமிகிட்ட கொடுத்துட்டு வா" என்றார் அம்மா.

"என்னம்மா நீங்க, அந்த மாமிக்கு நாம எவ்வளவோ கொடுத்திருக்கோம். போன வாரம் பாட்டி பலாப்பழம் வாங்கி வந்தப்போ கால்வாசி பழத்தை அவங்களுக்குத்தான் கொடுத்தீங்க. நேத்துகூட நம்ம மரத்தில வாழைத்தார் வெட்டினப்போ முழுசா ரெண்டு சீப்ப அவங்ககிட்ட கொடுத்துட்டு வரச் சொன்னீங்க. போயும் போயும் ஒரு தேங்கா வாங்கிட்டு வந்ததை திருப்பிக் கொடுக்கச் சொல்றீங்களே. அவங்கதான் என்னம்மா நினைப்பாங்க... நான் போக மாட்டேன்...." என்று சங்கடப் பட்டாள்.

"இல்ல தேவி, மாமிகிட்ட இத சீக்கிரம் கொடுத்துட்டு வாயேன். உன் பிறந்த நாளுக்கு துணி வாங்கப் போகலாம்." காரணம் ஏதும் கூறாமலேயே தேவியின் கையில் தேங்காயைக் கொடுத்து அனுப்பி வைத்தார் அம்மா.

"இந்தாங்க மாமி! அம்மா கொடுத்துட்டு வரச் சொன்னாங்க. ரொம்ப தேங்க்ஸ் மாமி," என்று தேங்காயை நீட்டினாள் தேவி.

"என்னடி இது, உங்கம்மாதான் இது ஒரு பெரிசுன்னு தேங்கா வாங்கினதை திருப்பித் தந்தாங்கன்னா அதுக்குப் போய் நீ தேங்க்ஸ் எல்லாம் சொல்லி இன்னும் அத பெரிசுப்படுத்தறே!"

"மாமி நான் போயிட்டு வரேன். மீனா அப்புறம் எங்க வீட்டுக்கு வாடி" என்று சொல்லிக் கொண்டே நடந்தாள் தேவி.

விடுகதைப் போட்டி



விடுகதைக்கு விடை சொல்வதை விட நீங்களே விடுகதையை உருவாக்கினால் கூடுதல் சுவாரசியம் தானே! விடுகதை 'சைக்கிளை'ப் பற்றியதாக இருக்க வேண்டும். சிறந்த பதினைந்து விடுகதைகளுக்கு ஒவ்வொன்றுக்கும் ரூபாய் பத்து பரிசளிக்கப்படும். முகவரி கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். மறக்காமல் உங்கள் முகவரியையும் எழுதுங்கள். முடிவு தேதி 31.5.98. அயல்நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியையும் கண்டிப்பாகத் தர வேண்டும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

ஆசிரியர்,
கோகுலம்
47, ஜவாஹர்லால்
நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை – 600 097

"**நே**த்து நம்ம வீட்லயே ரெண்டு தேங்காதான் இருந்துச்சு. தேவி அம்மாவுக்கு ஒண்ணைக் குடுத்திங்க. ஆனா போன வாரம் பத்து தேங்காய் இருக்கும் போது, நம்ம வீட்டு மாடியில குடியிருக்கிறவங்களுக்கு மட்டும் இல்லேன்னு ஏம்மா சொன்னீங்க?'' என்றாள் மீனா.

"கொடுத்து ஒரு நாள் கூட ஆகலை. ஒரு காயாக இருந்தாலும் உடனே திருப்பிக் கொடுத்துட்டாங்க. மாடி வீட்டுக்காரங்க எதை வாங்கினாலும் ஒழுங்கா திருப்பித் தந்திருக்காங்களா? கேட்ட உடனே ஏன், தேவி வீட்டுக்கு மட்டும் தர்றேன்னு இப்பப் புரியுதா?''

மாமியின் வார்த்தைகளைக் காதில் வாங்கிக் கொண்டே சென்றாள் தேவி.

"அம்மா எனக்குப் புரிஞ்சுடுச்சும்மா. நீங்க ஏன் பக்கத்து வீட்டு மாமிகிட்ட உடனே தேங்காயை திருப்பித் தந்தீங்கன்னு...'' மீனாவின் அம்மா கூறியதை அப்படியே ஒப்பித்தாள் தேவி.

சிரித்தார் அம்மா.

- கோ. கிருஷ்ணராஜ் பூங்கோதை


****


"உங்க அக்கா என்ன படிக்கிறாங்க?''


"B.A இரண்டாம் ஆண்டு.''

"ஏன், ஃபெயிலாயிட்டாங்களா?''

– எம். ராமரத்தினம்




முரளியும் கலாவும் விடுமுறைக்கு, தங்கள் கிராமத்திலிருந்து சென்னையிலிருக்கும் அத்தை வீட்டுக்கு வந்தார்கள். அங்கே அஜித், வினய், சுதா அவர்களை வரவேற்றார்கள்—
ஹலோ முரளி, கலா! வாங்க, வாங்க!
வணக்கம் அத்தை! வினய், சுதா நலமா?
ஹாய்! முரளி..
ஹாய் கலா!
கதை: சங்கீதா
படம்: ஜெயராஜ்
உங்க ரெண்டு பேருக்கும் வகுப்புல் முதல் மார்க் வாங்கி பரிசெல்லாம் கிடைத்ததாமே!
ஆமா! அதுவும் ஒரு ஸ்கூலு! அதுல பெரிய முதல் மார்க்!!
ஆமா அத்தை!
இங்கேயில்ல படிச்சு முதல் மார்க் வாங்கிக் காட்டணும்!?
என்ன வினய், உங்களால முடியலை. அவங்களையாவது பாராட்டலாமே!
ஒரு நாள் பொருட்காட்சிக்குச் சென்றார்கள்—
என்ன சாப்பிடறீங்க?
சரியான பட்டிக்காடு! ஐஸ்கிரீம், ஜூஸ் ஏதாவது கேட்கக் கூடாதா?!
அத்தை இந்தப் பெரிய அப்பளம்!
வெரி ஃபன்னி!


சும்மா இரு வினய்! அப்பளம் சாப்பிட்டா பட்டிக்காடா? இங்கே எத்தனை பட்டணவாசிகள் அப்பளம் வாங்கிச் சாப்பிடுறார்கள், தெரியலை?
மறுநாள் —
வினய்! நீ கடைக்குத்தானே. போறே, 25 பைசா போஸ்ட் கார்டு வாங்கிட்டு வர்றியா? அம்மாவுக்கு எழுதணும்
25 பைசா போஸ்ட் கார்டா? அந்த விலைக்கெல்லாம் உங்க பட்டிக்காட்டுலதான் தருவான்!
இங்கே 25 பைசாவுக்குப் பட்டாணி கூடக் கிடைக்காது!
இந்தியா பூரா போஸ்ட் கார்டு 25 பைசா தான், வினய்!
நாங்க பெரிய சிட்டியிலே வளர்ந்தவங்க...
எங்களுக்குத் தெரியாதா?... சொல்லுங்கடா!
ஆமா கலா, புரிஞ்சுக்க!
அடுத்து அந்த வினய்யின் நண்பன் அசோக்கிடம் சொன்னார்கள். அவனும் —
சரி சரி போகட்டும் விடு! கிராமத்துப் பசங்க பாவம்!
கலா இதுக்குப் போய் ஏன் அழறே இந்தச் சின்ன விஷயம் கூட தெரியாததுக்கு அவங்க தான் வெட்கப் படணும்!
ரொம்ப பேசாதே!



கடைக்குப் போய் வந்த அத்தையும் மாமாவும் நடந்ததை அறிந்து கொண்டனர் —
உங்களுக்குத்தான் தெரியலை! இந்தியா முழுவதும் போஸ்ட் கார்டு 25 பைசாதான். இதுவரை நீங்க போஸ்ட் கார்டு வாங்கி யூஸ் பண்ணினதே இல்லை. அதனால தெரியலை. இது புரியாமே, நீ சிட்டி, தலா பட்டிக்காடுன்னெல்லாம் சொல்லி அவனை அழவச்சிட்டீங்களே!
அப்படியா? ஐயோ!
தெரியாததை நாம் யார்கிட்டேயிருந்தும் கற்றுக் கொள்ளலாம். தப்பே இல்லை.
தலா, மோகி! எங்களை மன்னிச்சுடுங்க.
சரிசரி போனதை மறந்துடுவோம். வாங்க நாம நாலுபேரும் ஜாலியாப் போயி போஸ்ட் கார்டு வாங்கிட்டு வரலாம்.

ஒரு வித்தியாசமான பயணக் கதை!



இருட்டத் தொடங்கியது. முகிலும் அகிலாவும் மெல்ல வீட்டிற்குள் நுழைந்தனர்.

''வாங்க, வாங்க! லீவு விட்டதிலிருந்து உங்களைப் பார்ப்பதே ஆபூர்வமாயிருக்கு. விளையாடி முடிஞ்சாச்சா?'' என்றார் அப்பா.

இருவரும் அமைதியாக நின்று கொண்டிருந்தனர்.

''சரி! கால், கை கழுவிட்டு வாங்க. டிபன் சாப்பிடலாம்'' என்று அப்பா சொன்னவுடன் குளியலறை நோக்கி ஓடினர்.

சிறிது நேரத்தில் திரும்பிய இருவரும் அப்பாவின் அருகில் அமர்ந்து சாப்பிட ஆரம்பித்தனர்.

''வெயில்ல விளையாடி ஆளே கறுத்துப் போயிட்டீங்களே!'' என்று அம்மா வருத்தப்பட்டார்.

திடீரென எழுந்து நடந்தாள் அகிலா.

''என்ன அகிலா. முழுவதுமாக சாப்பிடுவதற்குள் எங்கே கிளம்பிட்டே?'' என்றார் அப்பா.

எஸ். சுஜாதா

"கார்ட்டூன் புரோகிராம் இருக்குப்பா. டீ.வி போட்டுட்டு வந்து சாப்பிடறேன்" என்று சொல்லியபடியே டீ.வி போட்டாள்.

"அகிலா நீ சொன்னவுடன்தான் ஞாபகம் வருது. இன்னிக்கு நடந்த தென் ஆப்பிரிக்கா, பாகிஸ்தான் கிரிக்கெட் போட்டியின் முக்கியப் பகுதிகளை காட்டறாங்க. அதை வையேன்" என்றான் முகில்.

"நீ முதல்லேயே வைக்க வேண்டியது தானே! நான் கார்ட்டூன்தான் பார்ப்பேன்."

"தயவு செய்து இந்த புரோகிராம் மட்டும் வை. அப்புறம் நான் டீ.வி. பக்கமே வர மாட்டேன். உன் விருப்பப்படி பார்த்துக் கொள்ளலாம்" என்று கெஞ்சினான் முகில்.

"முடியவே முடியாது! எப்பப் பார்த்தாலும் கிரிக்கெட்தானா உனக்கு?" என்று உறுதியாக மறுத்தாள் அகிலா.

"நீ நியாயமா சொன்னா கேட்க மாட்டே. இப்ப என்ன செய்யறேன் பார்" என்றபடி சேனலை மாற்றினான் முகில்.

"அப்பா நான்தான் முதல்ல டீ.வி போட்டேன்" என்று சொல்லிக் கொண்டே மீண்டும் சேனலை மாற்றினாள் அகிலா.


இருவரும் தங்களுக்குப் பிடித்த நிகழ்ச்சிகளைப் பார்க்க மாறி, மாறி சேனலை மாற்றிக் கொண்டிருந்தார்கள்.

"ரெண்டு பேரும் சும்மா இருங்க. டிஸ்கவரி சேனல்ல ஏதோ காண்பிக்கிறான். கொஞ்ச நேரம் பார்க்கலாம்" என்று அப்பா சொல்லவும் இருவரும் சாப்பிட உட்கார்ந்தனர்.

அப்பா சத்தத்தை அதிகரித்து விட்டு உன்னிப்பாக கவனித்தார்.

"என்னப்பா கடல் பாம்பைப் பற்றி காண்பிக்கிறாங்களா?" என்று சந்தேகம் கேட்டாள் அகிலா.

"இது கடல் பாம்பு இல்லைம்மா" என்றபடி டீ.வி.யை



பார்த்துக் கொண்டிருந்தார் அப்பா.

"நிச்சயம் கடல் பாம்புதான். பாருங்க எப்படி வேகமா வளைந்து நெளிந்து ஓடுது" என்றாள் அகிலா.

"அப்பா அந்தப் பாம்பு கண்ணாடி மாதிரி இருக்கு. உள்ளே உள்ள எலும்பெல்லாம் நல்லா தெரியுது. ரொம்ப ஆச்சர்யமாக இருக்கு" என்றான் முகில்.

அதற்குள் நிகழ்ச்சி முடிந்தது. அப்பா இருவரையும் நோக்கித் திரும்பினார்.

"இப்ப பார்த்தது பாம்பு இல்லை மீன். இதன் பெயர் ஈல்."

"மீனா! நம்பவே முடியலைப்பா. பாம்பு மாதிரியேதான் இருந்தது. இதைப் பற்றி நான் அதிகம் கேள்விப்பட்டதில்லை" என்றான் முகில்.

"இது அதிசயமான மீன். இதை எளிதில் பார்க்க முடியாது" என்று நிறுத்தினார் அப்பா.

"ஏன்ப்பா? கடல்லதானே இதுவும் வாழுது. அப்புறம் என்ன?"

"கடல்ல வாழ்ந்தாலும் இவை பயணம் செய்வது இருட்டில்தான். அதுவும் தரையில் புதைந்தபடியே நீந்தும். அரிதாகவே வெளியில் தெரியும். அதனால் தான் சொன்னேன்."


"பயணம் செய்யுமா? எப்படி ஊர் விட்டு ஊருக்குப் போகுமா" என்றாள் அகிலா.

"ஆமாம் அகிலா. பஸ்ல டிக்கெட் எடுத்து பெட்டி, படுக்கையோட பயணம் செய்யும்" என்று கிண்டல் செய்தான் முகில்.

"அகிலா சொல்றதும் ஒரு விதத்துல சரிதான். ஈல்கள் பிறந்த சில நாட்களிலேயே கடினமான பயணத்தை மேற்கொள்கின்றன."

"எங்கிருந்து எங்கே போகும் அப்பா?"

"சார்கோசா கடலில் பெண் ஈல்கள் முட்டையிடும். முட்டையிலிருந்து குஞ்சு பொரிந்து வெளி வரும். அதற்கு பின் ஐரோப்பிய ஆறுகளை நோக்கி இந்த



அறிவியல் உண்மைகள்!

- ஈல் மீன்கள் அட்லாண்டிக் பெருங்கடல், ஐரோப்பிய ஆறுகள், ஏரிகள், அமெரிக்கா போன்ற இடங்களில் வாழ்கின்றன.
- அதிகம் ஆழம் இல்லாத, தாவரங்கள் அதிகமுள்ள சார்கோசா கடலில் முட்டை இடுகின்றன.
- முட்டையிலிருந்து வெளி வந்த குஞ்சுகளுக்கு லார்வா என்று பெயர்.
- லார்வாக்கள் சார்கோசா கடலிலிருந்து ஐரோப்பாவில் உள்ள ஆறுகளை நோக்கி 4,800 கி.மீ தூரம் பயணம் செய்கின்றன. ஆறுகளை அடையும்போது மூன்றாண்டுகள் ஆகி விடும். அப்போது உருவம் மாறி விடும். இதற்கு எல்வர்ஸ் என்று பெயர்.
- எல்வர்ஸ்கள் கண்ணாடி போன்ற உடலுடன் காணப்படும்.
- ஆற்றின் கழிமுகத்தில் ஆண் ஈல்கள் தங்கி விடும்.

லார்வாக்கள் எனப்படும் குஞ்சுகள் பயணம் செய்யும்."

"ஏன் கடல்லயிருந்து ஆற்றுக்குப் போகுது?"

"இவை கடலில் பிறந்தாலும் வளர்வது எல்லாம் ஆற்றில்தான்."

"அம்மா, அப்பாவுடன் ஜாலியாக கிளம்பி விடும்னு சொல்லுங்க?" என்றாள் அகிலா.

"அதுதான் இல்லை. முட்டை இட்டவுடன் தாயும் தந்தையும் கடலிலேயே இறந்து போய் விடும். குஞ்சுகள் மட்டும் நீண்ட தூரம் பயணம் செய்யும். இதற்கு மூன்று ஆண்டுகள் கூட ஆகும்"

"இன்னும் சொல்லுங்கப்பா" என்றாள் அகிலா.

"ஆற்றின் கழிமுகத்தை அடைந்தவுடன் ஆண் ஈல்கள் அங்கேயே தங்கி விடும். பெண் ஈல்கள் மட்டும் ஆற்றிற்குள் செல்லும்."

"அப்புறம் மறுபடியும் கடலுக்கு வராதா?" என்றான் முகில்.

"அங்கு ஏழு முதல் பதினைந்து வருடங்கள் வரை வாழும். இதற்குள் இவை முழு வளர்ச்சிப் பெற்ற ஈல்களாக மாறி விடும். அதுவரை ஆண் ஈல்கள் பெண் ஈல்களுக்காக காத்துக் கொண்டிருக்கும். பின் ஆணும் பெண்ணும் சேர்ந்து சார்கோசா கடலுக்குத் திரும்பி வரும்.

"மீதி நான் சொல்றேன். மறுபடியும் கடலில் முட்டையிட்ட பிறகு, ஆண் ஈல்களும் பெண் ஈல்களும் இறந்து போயிடும்தானே!" என்றான் முகில்.

"ஆமாம் முகில். இவை பயணம் செய்யும்போது நிறைய கஷ்டங்களை அனுபவிக்கும். அணைக்கட்டுகள், பிளாஸ்டிக் குழாய்கள், கால்வாய்கள் என எந்தத் தடை வந்தாலும் பொருட்படுத்தாமல் பயணத்தை மேற்கொள்கின்றன" என்றார் அப்பா.

இருவரும் அமைதியாக உட்கார்ந்திருந்ததைப் பார்த்த அம்மா "இப்ப யார் வேண்டுமானாலும், எந்தச் சேனல் வேண்டுமானாலும் பாருங்க" என்று நினைவூட்டினார்.

"போங்கம்மா. அந்த புரோகிராம் முடிஞ்சு போயிருக்கும்" என்றாள் அகிலா.

"எனக்கு புரோகிராம் பார்க்க முடியலையேன்னு வருத்தம் இல்லை. அதனால் தானே ஈலைப் பற்றி தெரிந்து கொண்டேன்" என்றான் முகில்.


"சாப்பிட்டு எவ்வளவு நேரமாச்சு. கை கழுவுங்க" என்றார் அம்மா.


மூவரும் எழுந்து சென்றார்கள்.


பெண் ஈல்கள் மட்டும் ஆற்றுக்குள் செல்லும்.

- ஆற்றில் ஏழு முதல் பதினைந்து வருடங்கள் வரை தங்கி பருவ நிலையை அடையும்.
- அதுவரை ஆண் ஈல்கள் பெண் ஈல்களுக்காக காத்திருக்கும்.
- ஆண், பெண் ஈல்கள் மீண்டும் சார்கோசா கடலை அடைந்து முட்டையிட்டவுடன் இறந்து போய் விடுகின்றன. மீண்டும் முட்டையிலிருந்து வெளி வந்த குஞ்சு தன் நீண்ட நெடிய பயணத்தை மேற்கொள்ளும்.
- இவைகளின் பயணம் கடினமானது. போகும் வழியில் பல இடையூறுகளைச் சந்திப்பதால் நிறைய ஈல்கள் இறந்து விடுகின்றன.
- இவைகளை பெரும்பாலும் பார்க்க முடியாது. அரிதாகவே வெளியில் வரும்.
- இரவில் கடல் அடிவார மணலில் புதைந்தபடியே பயணத்தை மேற்கொள்ளும்.
- வேகமாக நீந்தும். தடைகளை பொருட்படுத்தாது.
- மீன்கள், தவளைகள், கடல் வாழ் சிறிய உயிரினங்களே உணவு.
- யாருடைய வழி காட்டுதலும் இன்றி இவைகளின் பயணங்கள் தொடர்கின்றன. இவற்றின் ஜீன்களிலேயே பயணத்துக்கான உள்ளுணர்வுகள் **(Instinct Behaviour)** உள்ளன.
- பெண் ஈல்கள் ஒரு மீட்டர் நீளமும், ஆண் ஈல்கள் 50 செ.மீ நீளமும் வளரும்.
- கறுப்பு, பச்சை, மரக்கலர், சாம்பல் நிறத்துடன் காணப்படும்.
- உடல் முழுவதும் ஒரே செதில் சுற்றி இருக்கும். பார்ப்பதற்கு பாம்பு போல் தோற்றம் தரும்.
- ஈல்களில் பல வகைகள் உள்ளன.


கோடை விடுமுறைப்




















இங்கு இரண்டு தொகுதிகளாகப் படங்கள் பிரிக்கப்பட்டுள்ளன. முதல் தொகுதியில் உள்ள படங்களின் முதல் இரண்டு எழுத்துகளையும் இரண்டாவது தொகுதியில் உள்ள படங்களின் கடைசி இரண்டு எழுத்துகளையும் சேர்த்தால் ஒரு வார்த்தை கிடைக்கும். உதாரணத்திற்கு திருமாலின் 'திரு'வையும் குச்சியின் 'ச்சி'யையும் சேர்த்தால் திருச்சி கிடைக்கும். மீதமுள்ள ஆறு வார்த்தைகளையும் கண்டு பிடித்து எழுதி முகவரிக் கூப்பனையும் ஒட்டி அனுப்புங்கள். மறக்காமல் உங்கள் முகவரியையும் எழுதுங்கள்.


போட்டி - I


















முடிவு தேதி 31.5.98. அயல்நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியையும் கண்டிப்பாகத் தர வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் சரியான விடைகளை எழுதினால் பரிசு குலுக்கல் முறையிலேயே முடிவு செய்யப்படும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. அடுத்த இதழில் கோடை விடுமுறைப் போட்டி - II



ஆசிரியர்,
கோகுலம்
47, ஜவாஹர்லால்
நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை – 600 097

விடுகதை போடுவோமா?



1. தாடிக்காரன் கோயிலுக்குப் போவான். அவன் யார்?

2. வெட்ட வெட்ட வளருவான். வெட்டாமல் இருந்தால் தொல்லைதான். அவன் யார்?

3. தொட்டால் கோபித்துக் கொள்வான். அவன் யார்?

4. சிவப்பான அக்கா. தண்ணீர் பட்டால் கறுத்து விடுவாள். அவள் யார்?

5. காலையில் வருவான். கண்ணாடி போல் இருப்பான். பச்சைப் புல்லில் உருண்டு விடுவான். அவன் யார்?

6. நீரில் பூக்கும் பூ. வண்டு வந்து மொய்க்காது. தலையில் வைக்க முடியாது. அது என்ன பூ?

7. சொன்னதைக் கேட்பான். திரும்பச் சொல்ல மாட்டான். அவன் யார்?

8. அலை அலையாய் ஆடி வரும். நிலையாக நிற்காது. அது என்ன?

— அமிர்தம்,
எட்டாம் வகுப்பு 'அ' பிரிவு
அரசினர் உயர்நிலைப் பள்ளி,
ஒத்தக்கால் மண்டபம்,
கோவை.

விடைகள் : 1. தேங்காய், 2. நகம், 3. தொட்டாற் சிணுங்கி, 4. நெருப்பு, 5. பனி, 6. உப்பு, 7. காது, 8. புகை



கண் ஏமாற்றுமா?


1. நெடுக்குக் கோடும் படுக்கைக் கோடும் உள்நோக்கி வளைந்திருக்கிறது. சரியா?


2. AB இரண்டு கோடுகள் உள்ளன. இவை சற்று வளைந்து இருப்பது போல் எனக்குத் தோன்றுகிறது. உங்களுக்கு எப்படி?

3. இந்த இணைகரத்தில் உள்ள AB கோடுகளில் எது பெரியது? இது என்ன கேள்வி Aதான் என்கிறீர்களா?


4. கவிதா சொல்கிறாள் Aயை விட B பெரியது என்று. கீதா இரண்டும் ஒரே அளவுதான் என்கிறாள். நீங்கள் சொல்லுங்கள். எது சரி?

5. இந்தப் படத்தில் Aயும் Bயும் ஒரே அளவு





②




④

கோடு என நான் சொல்கிறேன். நண்பன் மறுக்கிறான். நீங்கள் சொல்லுங் களேன்!

மேலே கொடுக்கப்பட்டுள்ள ஐந்து புதிர்களையும் செயல் படுத்திப் பார்த்தீர்களா? என்ன தெரிகிறது? நாம் சாதாரணமாகப் பார்க்கும் போது AB ஆகியவற்றின் நீளம் வேறுபடுவதாகத் தோன்றுகிறது.


③




முதல் இரண்டு புதிரில் உள்ள கோடுகள் வளைந்திருப்பது போல் தோற்றம் ஏற்படுகிறது. உண்மையில் Aயும் Bயும் ஒரே அளவுடைய கோடுகள் தாம். அளந்து பார்த்தால் உண்மை புரியும். வளைந் துள்ள கோடுகள் உண்மையில் வளைந் திருக்க வில்லை. நேரா கத்தான் இருக்கின்றன.

ஒரே அளவுள்ள இரண்டு கோடுகளுக்கு அருகில் வெவ்வேறு உருவங்கள் அமையும் போது கண் சட்டென உண்மையை உணராது மாயத்தோற் றத்தைபிரதிபலிக்கிறது. எனவே இப்படி தோன்றுகின்றன.

— அமராவதி





⑤

கோமதேஸ்வரர்

அயோத்தியை ஆண்ட விருவிபநாத மன்னருக்கு இரண்டு பிள்ளைகள். மூத்தவன் பரதன்; இளையவன் பகுபாலி. இருவரும் அரசவம்சத்துக்குரிய எல்லா வீரக்கலைகளையும் கற்று சிறந்த வீரர்களாக விளங்கினர்.

"விருவிபநாதனின் பிள்ளை என்பதைவிட உங்களின் தந்தை என்று வரலாற்றில் இடம் பெற வேண்டும். இதுவே எனது விருப்பம்" என்றார் மன்னர்.

இருவரும் நற்குணங்களின் களஞ்சியமாகத் திகழ்ந்தனர். அயோத்திக்கு பரதனை அரசனாகவும், பதன்புராவுக்கு பகுபாலியை அரசனாகவும் முடி சூட்டிய மன்னர், தவம் செய்ய காட்டுக்குப் போய் விட்டார்.

பரதன் திக்விஜயம் செய்து அனைத்து நாடுகளையும் கைபற்றினான். கடைசியாக 'பதன்புரா' மேலும் படையெடுத்தான்.

தான் மன்னாதி மன்னனாக, சாம்ராஜ்யாதிபதியாக சரித்திரத்தில் பெயர் பொறிக்கப்பட்டு தந்தையின் ஆசையை நிறைவேற்றுகிறோம் என்ற எண்ணம் அவன் நெஞ்சில் நிறைந்திருந்தது.

பகுபாலி தமையனைப் போர் முனையில் சந்தித்தான். "அண்ணா! எந்த உயிரையும் அழிக்கும் உரிமை எவருக்கும் இல்லை!




ஆர். பொன்னம்மாள்

அதனால் நாட்டை உங்களிடம் நானே தந்து விடுகிறேன்" என்றான் பகுபாலி.

பரதன் வெகுண்டு "வீரப்பரிசாக பதன்புராவை அடைவேனே அன்றி தானம் பெற்றான் பரதன் என்ற இழிச் சொல்லுக்கு ஆளாகேன்" என்றான்.


"தானம் என்று ஏன் கருதுகிறீர்கள்? தந்தையின் உரிமைப் பொருள் மகனுக்குரியதுதானே!" என்று பகுபாலி கேட்க, "அது



உனக்கெனத்தரப்பட்டது. போரிட்டே பெறுவேன்" என்று சூளுரைத்தான் பரதன்.

"சரி, அப்படியானால் நாமிருவரும் யுத்தம் செய்வோம். வென்றவருக்குத் தோற்றவர் அடிமை" என்ற பகுபாலியின் பேச்சுக்குச் சம்மதித்து தமையனோடு ஐம்பத்தெட்டு வகைகளில் போரிட்டான் பரதன். ஆனால் எல்லாவற்றிலும் பகுபாலியே வென்றான். "பகுபாலி! ஒப்பந்தப்படி நானும், என் நாடும் உனக்கு அடிமை" என்ற பரதன் உடைவாளைப் பகுபாலியின் பாதத்தருகே வைத்துத் தலை குனிந்து நின்றான்.

"அண்ணா! என்ன வார்த்தை சொல்லி விட்டீர்கள்? வீராதி வீரராக ஜெயக் கொடி நாட்டிய தாங்கள் எனக்கு அடிமை ஆவதா? எவரிடமாவது தாங்கள் தோற்கக் கூடும்.



"உன் மகனுக்கு என்ன வயசாச்சு?"
"அது ஆச்சு, இரண்டு கழுதை வயசு!"
— எம். கே. வேங்கவேல்

அதனால் வலுச் சண்டைக்குப் போய் மக்களைப் பலியிடக் கூடாது என்பதை உணர்த்தவே தங்களுடன் போரிட்டேன். தாங்கள் நாட்டின் சீர்திருத்தத்தில் மனதைச் செலுத்த வேண்டும். மக்களின் வாழ்க்கையைச் செப்பனிட வேண்டும். நாடாளும் ஆசை எனக்கு என்றுமே இருந்ததில்லை. ஆன்மீகத்தையே என் மனம் நாடுகின்றது" என்றபடி நாட்டைத் தமையனிடம் ஒப்படைத்துவிட்டு காட்டுக்குத் தவம் புரியச் சென்று விட்டார் பகுபாலி.

'தம்பியின் தியாகமும், அன்பும், பாசமும் புரியாமல் போரிட்டோமே" என்று வருந்திய பரதன் நாட்டை நீதி தவறாமல் செம்மையாக ஆண்டான். பல சீர்திருத்தங்கள் செய்தான்.

கடும் தவம் புரிந்து ஆன்மீக ஞானம் பெற்ற பகுபாலியை மக்கள் கோமதேஸ்வரராகப் போற்றி வணங்கினர். சமண சமயத்தின் 24-வது தீர்த்தங்கரராக தந்தை விரும்பியபடி வரலாற்றில் இடம் பெற்றார். மக்களுக்கு மெய் ஞானத்தைப் போதித்து நல்வழிப் படுத்தினார்.

அவர் மேல் பக்தி கொண்ட கங்க மன்னனரின் அமைச்சர் சவுண்ட ராயர், ரத்தின கிரி பர்வதத்தில் அவர் தவம்புரிய நின்ற கோலத்தில் ஒரு சிலை வடித்தார்.

அவர் மேல் பக்தி கொண்ட லட்சோப லட்சம் ஜனங்கள் அபிஷேகத்திற்கென வைக்கப்பட்டிருந்த அண்டாக்களில் பாலைக் கொண்டு வந்து நிரப்பினார்கள்.

அபிஷேகம் நடந்தது. ஆனால் இடுப்புக்குக் கீழே பால் இறங்கவில்லை. இடுப்பு வரை வந்ததுமே ஆவியாகிவிட்டது. பாதம் நனைந்தால் தானே பூஜை நடத்த முடியும்?

அமைச்சர் கவலையோடு நின்றிருந்தார். 'சிலை வடித்ததில் பிழை ஏற்பட்டிருக்குமோ? அலட்சியமாக எவரேனும் நினைத்திருப்பார்களோ?' இப்படி எண்ணாததெல்லாம் எண்ணினார்.

"இந்நேரம் அபிஷேக ஆராதனை முடிந்திருக்கும். நான் கையாலாகாதவன்" என்று நொந்து கொண்டே ஒரு கிண்ணத்தில் பாலோடு இறைக்க இறைக்க மலை ஏறினாள் அந்தக் கிழவி. கோமதேஸ்வரர் மேல் பக்தி கொண்டவள் அவள்.

"இந்தப் பாலையும் அபிஷேகத்தில் சேர்த்துக் கொள்ளுங்கள்" என்று கிண்ணத்தை நீட்டினாள்.

"ஆமாம்! அண்டா அண்டாவாய் அபிஷேகம் செய்துமே இடுப்புக்குக் கீழே நனையவில்லை. இதில்தான் வழிந்து ஓடப் போகிறதாக்கும்" என்றபடி அலட்சியமாக வாங்கி அபிஷேகம் செய்தவன், திகைத்தான்.

பால் மளமளவென்று ஓடி பாதத்தடியில் நின்றது. அப்போது அசரீரி "எவ்வளவு கொடுக்கிறார்கள் என்பதை விட எந்த நினைவுடன் செயல்படுகிறார்கள் என்பதே முக்கியம். கருணைக்குக் கட்டுப்பட்டவன் நான்" என்று ஒலித்தது.

கூடியிருந்த மக்களெல்லாம் பிரமித்தனர். பன்னிரெண்டு ஆண்டுகளுக்கொருமுறை மாஸ்திகா என்ற இந்தப் பெரிய அபிஷேகம் இன்றும் நடக்கிறது. கோமதேஸ்வரரின் தந்தை, தமையன் என்றால்தான் புரியும் என்ற அளவில் ஆன்மீக சாம்ராஜ்யத்தில் மாமன்னராக இடம் பெற்றவர் பகுபாலி.

காண்டா மிருகம் வரைவோமா?

கீழே கொடுத்துள்ள குறிப்புகளின்படி எழுத்தும் எண்ணும் சேரும் இடத்தில் புள்ளி வைத்து விடுங்கள். பிறகு ஒவ்வொரு புள்ளியையும் கோட்டால் இணைத்தால் காண்டா மிருகம் கிடைத்து விடும். எங்கே ஆரம்பியுங்கள் பார்க்கலாம்!

உடல், தலை, கால் C12 → D10 → F9 → K10 → M10 → P9 → Q9 → T10 → U10 → W12 → X10 → X12 → Y11 → Y9 → Z11 → Z13 → Y14 → Y15 → X16 → V15 → S15 → R16 → P16 → M17 → J17 → H16 → F17 → F18 → G20 → F20 → E18 → E17 → D15 → C12

1-வது காது T10 → T9 → U8 → U9 → T10

2-வது காது: U10 → V9 → W9 → V10 → U10


2-வது கால்: R16 → R20 → Q20 → Q17

3-வது கால்: R16 → P18 → P20 → O20 → O18 → P16


4-வது கால்: C12 → C16 → D18 → D20 → E20 → E18

வால்: C12 → B14 → B16 → A17

B16 → A18 B16 → B18



ரயிலைப் பிடித்துக் கன்னியாகுமரிக்குச் செல்லுங்கள்!



இந்த விளையாட்டிற்கு இரண்டு பேர் தேவை.

தேவையானவை : 5 கற்கள், வெவ்வேறான கலர் பட்டன்கள் 2.


எப்படி விளையாடுவது?

1. கல் விளையாடுவது போல், கற்களை மேலே தூக்கிப் போட்டு புறங்கையால் பிடிக்க வேண்டும்.

2. பிடிக்கப்பட்ட கற்களின் எண்ணிக்கைக்கேற்ப பட்டனை எண்களில் நகர்த்த வேண்டும். கன்னியாகுமரியை யார் முதலில் அடைகிறார்களோ அவரே வெற்றி பெற்றவர்.

தாயக் கட்டைகளைப் பயன்படுத்தியும் விளையாடலாம்!

விளையாட்டை ஆரம்பியுங்கள்!



கூக்கூக் கூ....


இன்று ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்ல எவ்வளவு வசதிகள் வந்து விட்டன! அதிகமான வணிகப் பொருள்களைச் சுமந்து, விரைந்து தரையில் செல்லும் வாகனங்களில் ரயிலுக்கு இணை வேறு இல்லையென்று சொல்லலாம்!


வடக்கில் துருவத்தை அடுத்த பிரதேசங்களிலும், ஆல்ப்ஸ் மலைச் சரிவுகளிலும், ஆப்பிரிக்காவின் அடர்ந்த காடுகளிலும், இந்தியச் சமவெளிகளிலும் ரயில்கள் செல்கின்றன.

நீராவியால் இயக்கப்படும் ரயில்கள் தோன்றி இருநூறு ஆண்டுகள் ஆகப் போகின்றன. பதினேழாம் நூற்றாண்டிற்கு முன்பே மரத்தால் ஆன தண்டவாளங்களை அமைத்து பொருள்களைக் கொண்டு சென்றிருக்கின்றனர்.

இந்தியாவில் முதன்முதலாக மும்பையிலிருந்து தானாவிற்கு இருபத்தி ஒரு மைல் தூரத்திற்கு ரயில் பாதை அமைக்கப்பட்டது.

ரயில் ஆரம்ப காலத்திலிருந்தே பல மாறுதல்களுக்கு உட்பட்டு இன்று வியத்தகு வளர்ச்சி பெற்ற போக்குவரத்து சாதனமாக விளங்குகிறது.





பிருந்தாவனக் கவியரங்கம்



கோடை காலம் வந்தது

கோடைகாலம் பிறந்தது
கொளுத்தும் வெயிலும் வந்தது
வேடந்தாங்கல் பறவைகளும்
வெயிலைத் தாங்கி நொந்தது.

குளிர்பானங்கள் கோடையிலே
கொளுத்தும் வெயிலைக் குறைத்திடும்
தென்னை தரும் இளநீரும்
தென்றலாய் நமக்கு இதமளிக்கும்!

மின்விசிறி இல்லாமல்
வழியும் வியர்வை குறையாது
காற்று வீசும் சோலைகளை
நாடா மனமும் இருக்காது!

கோடையைத் தணிக்க அனைவரும்
கோடை தலங்களுக்குச் செல்லலாம்
மகிழ்ச்சியாக நாட்களைக் கழித்து
மனம் இல்லாமல் திரும்பலாம்!

- அ. சுப்புராஜ்
பத்தாம் வகுப்பு
அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி,
வத்தலக்குண்டு - 624 202.

தாத்தா

தாத்தா மிகவும் நல்லவர்
தங்க குணம் கொண்டவர்

பாசத் தோடு இருப்பவர்
பாட்டுப் பாடி மகிழ்பவர்

கற்பனைச் சுவை கூட்டியே
கதைகள் பலவும் சொல்பவர்

அன்பான ஆசான் போல்
அறிவுரை பலவும் கூறுபவர்

பள்ளி செல்ல நமக்குமே
பலவித உதவி செய்பவர்

இனிக்க இனிக்க பேசுவார்
இவரே எங்கள் தாத்தாவாம்!

— த.பழனி,
வரிக்கல் கிராமம்
அணையேரி (அஞ்சல்),
செஞ்சி — தாலுக்கா.





ஒன்பதாம் வீடு!

9. பெருமை கூடியது!

பள்ளி அறிவிப்புப் பலகையில் ஓவியப் போட்டியில் முதல் சுற்றில் விஜயா பரிசு பெற்றதையும் இறுதிப் போட்டியில் சித்ரா முதல் பரிசு பெற்றதையும் செய்தியாக எழுதி அவர்கள் புகைப்படங்களையும் ஒட்டியிருந்தார்கள்.

திங்கட்கிழமை அசெம்பிளி கூடியபோது, பெரிய மேடம் இதையே செய்தியாகக் கூறி, இருவரையும் மேடைக்கு அழைத்துக் கை கொடுத்துப் பாராட்டினார். கரவொலி வாயிலாக மாணவிகளும் அதில் கலந்து கொண்டனர்.

அன்று நிஜாவின் அப்பா, ஹைதராபாத்தில் இருந்து பெரிய மேடத்துக்குப் போன் பண்ணி, ஓவியப் போட்டியின் முடிவைப் பற்றிக் கேட்டார்.

“நீங்கள்தானே நடுவராக இருந்தீர்கள்! உங்களுக்கு எப்படித் தெரியாமல் போகும்?” என்று கேட்டார் பெரிய மேடம்.

“முதலில் தீர்மானித்தபடி நானும் நடுவர்களில் ஒருவராக இருப்பதாகத்தான் இருந்தேன்” என்று தொடங்கிய அவர், சித்ரா, அவர் நடுவராக இருப்பதானால் போட்டியில் கலந்து கொள்ள மறுப்பதாகத் தெரிவித்ததை ஒட்டி நடந்தவற்றை விளக்கினார். பெரிய மேடம் சித்ராவின் நேர்மை உணர்வைப் பாராட்டி, போட்டி முடிவையும், விஜயா எழுப்பிய பிரச்னைகளையும் கூறினார். “நல்ல காலம், சித்ரா பிடிவாதமாக இருந்ததால் நான் நடுவராக இருக்கவில்லை. அதோடு போட்டி நடக்கும் வாரத்தில் வியாபார விஷயமாக வெளியூருக்கும் சென்று விட்டேன். இப்படி இல்லாமல் நான் மட்டும் நடுவராக இருந்

வெ. நல்லதம்பி

திருந்தால் என்ன ஆகியிருக்கும்? எனக்கு ஏற்பட இருந்த தலைகுனிவைத் தடுத்த பெருமை சித்ராவுக்கே. என்னுடைய பாராட்டையும் வாழ்த்துகளையும் அவளுக்குத் தெரிவியுங்கள்'' என்றார் நிஜாவின் அப்பா.

பள்ளி நேரம் முடிந்து எல்லோரும் வீட்டுக்குப் போய் விட்டார்கள். பெரிய மேடமும் கிளம்ப இருந்தார். தொலைபேசி கிணுகிணுத்தது.

பெரிய மேடத்திடம் கூறிவிட்டுக் கிளம்ப வந்த எழிலரசி டீச்சர் தொலைபேசியை எடுத்தார். தொலைக்காட்சி நிலையத்திலிருந்து தான் அழைப்பு. மறுநாள் மாலை ஓவியப் போட்டியில் முதல் பரிசு பெற்ற சித்ராவை அழைத்துக் கொண்டு தொலைக்காட்சி நிலையத்திற்கு வரும்படி செய்தி.



''எழிலரசி, நிஜாவின் அப்பா அனுப்பியுள்ள பாராட்டுச் செய்தியையும், தொலைக் காட்சி அழைப்பையும் சித்ராவின் வீட்டில் சொல்லி விட்டு, நாளை மாலை சித்ரா வீடு திரும்ப நேரமாகும் என்பதையும் கூறிவிட்டு வாருங்கள்'' என்று பொறுப்பை ஒப்படைத்தார் பெரிய மேடம்.

அன்று மாலை தலைவலி என்று பசுபதி சற்று முன்னதாகவே அலுவலகத்திலிருந்து வந்து விட்டார். காப்பியைக் கொடுத்த மங்கையிடம், "ஏதாவது கடிதம் உண்டா?'' என்று கேட்டார்.

"மூன்று விஷயங்கள்! ஒன்று உங்களை நம்ம வீட்டின் சொந்தக்காரர் பார்க்கணும் என்றார். இரண்டு, உங்கள் மகளுக்கு ஓவியப் போட்டியில் பரிசு கிடைத்திருக்கிறதாம்! மூன்று, அவள் பள்ளியிலிருந்து ஒரு கடிதம் வந்திருக்கிறது. அதோ மேசை மேல் வைத்திருக்கிறேன்! அவ்வளவுதான்'' என்று மங்கை ஒவ்வொன்றாக ஒப்பித்தார்.

பள்ளியிலிருந்து வந்திருந்த கடிதத்தைப் படித்தார் பசுபதி! மாதாந்திரத் தேர்வின் மதிப்பெண் பட்டியல் அது. பள்ளியிலிருந்து அனுப்பியிருந்தார்கள். சித்ரா ஆங்கிலம், தமிழ் இரண்டிலும் தேறியிருந்தாள். மற்ற பாடங்களில் தேறவில்லை. 'அதிகக் கவனம் தேவை' என்ற குறிப்பு எழுதி சிவப்பு மையில் அடிக்கோடு போட்டிருந்தார்கள்.

"மங்கை! நீ படித்துப் பார்த்தாயா இதை! இல்லை அப்படியே என்னிடம் கொடுத்து விட்டாயா! உன் மகள் வாங்கி இருக்கிற மதிப்பெண்களைப் பார்த்தாயா?'' – பசுபதி கோபமாகக் கேட்டார் மங்கையிடம்.

"பார்த்தேன்! என்ன செய்வது?''

"என்ன செய்வதா? இவளைப் பற்றி நாம் என்னென்னவோ மனக்கோட்டை கட்டியிருக்கோம். வயிற்றைக் கட்டி, வாயைக் கட்டி சக்திக்கு மேல் செலவு பண்ணிப் படிக்க வைக்கிறோம். ஆனால் இவளுடைய ஆர்வமெல்லாம் ஓவியத்திலேயே பதிஞ்சிருக்கு. ஆங்கிலம், தமிழ் இரண்டில் மட்டுமே பாஸ் மார்க். மீதியெல்லாம் பெயில். எத்தனை சொன்னாலும் புரியறதில்லே!''

"கொஞ்சம் கவனமாகவே பேசுங்கள். உங்களுக்குத் தேவைப்படும் போது அவளை உங்க சேர்மன் வீட்டுக்கு படம் வரைய அனுப்பறீங்க. அப்படி அனுப்பினதுக்காக, அவளுக்கு வேண்டியபடி ஓவியப் போட்டியில் கலந்துக்க அனுமதிச்சீங்க. அதனால ஒரு வகையில் நீங்களும் அவளுடைய ஓவிய ஆர்வத்தைத் தூண்டிகிட்டேதான் இருக்கீங்க. அதனால் கண்டிக்கும் போது கவனமாகக் கண்டியுங்க'' என்றார் மங்கை.

"யாராக இருந்தாலும் கண்டிக்கும் போது கவனமாத்தான் கண்டிக்கணும்'' என்று வாசலில் ஒரு குரல் கேட்டது. பசுபதியின் நண்பர் டாக்டர் சுந்தரம்தான் உள்ளே வந்தார்.

''வாங்க வாங்க'' என்று வரவேற்றார்

பசுபதி.

"யார் மேலே கோபம் ஐயாவுக்கு" என்று கிண்டலடித்தார் சுந்தரம். கால்நடை மருத்துவர். பசுபதி, சுந்தரம் இருவரும் தொடக்கப் பள்ளி காலத்திலிருந்தே நண்பர்கள்.


"எல்லாம் சித்ரா மேல்தான் கோபம்" என்றவாறே மங்கை அங்கு வந்தார். கையில் இரு கப் காப்பி கொண்டு வந்து வைத்தார்.

"ஏன் கோபமாம்?" - டாக்டர் சுந்தரம் கேட்டார்.

"என்னப்பா சுந்தரம்! இந்த வருடம் ஒன்பதாம் வகுப்பு போய் இருக்கா! நல்லாப் படிம்மா, நல்ல மார்க் வாங்கினாத்தான் அடுத்த வருடம் பத்தாம் வகுப்பிலேயும் நல்ல மார்க் கிடைக்கும் அப்படின்னு கரடியாக கத்துறேன்! எந்தப் பயனும் இல்லே. எனக்கு இவளுடைய எதிர்காலத்தைப் பத்தி ஒரே கவலையா இருக்கு.

"ஓவியப் போட்டிகள்ல தங்க மெடல். ஆனா படிப்புல நான்கு பாடத்திலே பெயில். இவளை எப்படி மாத்தறதுன்னே தெரியலே!" என்று தன் கவலையை வெளியிட்டார் பசுபதி.

"வந்ததுலேருந்து நீங்க உங்க கஷ்டத்தையே சொல்லிக்கிட்டிருக்கீங்க. அவர் எதுக்காக வந்திருக்காரோ என்னவோ அதைக் கேளுங்க" என்றார் மங்கை.



"சாரி சுந்தரம். எத்தனையோ நாளைக்குப் பிறகு அபூர்வமா நீ வந்திருக்கே. என் கஷ்டத்தைச் சொல்லி உன்னை மேலும் போரடிக்க நான் விரும்பலே. நீ என்ன காரியமா வந்தே? அதைச் சொல்லு முதல்ல?" என்று கேட்டார் பசுபதி.

சுந்தரம் பேசவில்லை. பசுபதி வற்புறுத்தினார்.

"பசுபதி, நான் வந்த காரணம் உனக்குப் பிடிக்காது. பேப்பர்ல உன் பெண் சித்ரா, லயன்ஸ் கிளப் ஓவியப் போட்டியில் முதல் பரிசு பெற்றதாக பத்திரிகைகளில் பார்த்தேன். நேரில் வந்து பாராட்டவே வந்தேன். இங்கே வந்த பிறகுதான் உன் நிலைமை எனக்குப் புரிஞ்சுது. நீ என் நண்பன். உன் மனம் வருந்தும்படி நான் நடந்துக்க மாட்டேன். நான் வரேன்" என்று கிளம்பினார் சுந்தரம்.

"பரவாயில்லை சுந்தரம். இருந்து பாராட்டி விட்டுப் போ" என்று வற்புறுத்தினார் பசுபதி.

இதற்குள் வெளியே சென்றிருந்த சித்ரா வந்து விட்டாள். "என் பாராட்டுகள் சித்ரா. வருங்காலத்தில் இந்தியாவின் பெருமைமிக்க ஓவியர்களுள் முன்னணியில் வந்து உயர்ந்து கலை வாழ்வு வாழணும்" என்று தன்னை அறியாது வாழ்த்தினார் சுந்தரம். "நன்றி அங்கிள்" என்று கூறிவிட்டு உள்ளே

போனாள் சித்ரா.

சுந்தரம் போன பிறகு எழிலரசி டீச்சர் வந்தார். அவருக்கு பசுபதியின் மனநிலை தெரியாது. நல்லகாலம் டீச்சர் வந்தபோது பசுபதி, டாக்டர் சுந்தரத்தை வழியனுப்பச் சென்றிருந்தார். மங்கை அரவை நிலையத்திற்குப் போயிருந்தார். வீட்டில் சித்ரா மட்டுமே இருந்தாள். அவளிடம் நிஜாவின் தந்தை தெரிவித்த பாராட்டையும், மறுநாள் தொலைக்காட்சி நிலையத்திற்கு அழைத்து வரும்படி வந்துள்ள செய்தியையும் கூறிவிட்டுச் சென்றார் டீச்சர்.

வீடு திரும்பிய பிறகு பசுபதி யாருடனும் பேசவில்லை. அம்மாவுக்கு அவருடைய வீட்டு வேலை சரியாக இருந்தது.

அப்பா இருந்த மனநிலையைக் கவனித்து விட்ட சித்ராவுக்கு எழிலரசி டீச்சர் வந்த செய்தியைக் கூறத் தோன்றவில்லை.

அடுத்த நாள் காலை - டிபன் பொட்டலத்தை வாங்கிக் கொண்டு பள்ளிக்குப் புறப்பட்ட சித்ரா, "அம்மா இன்று எழிலரசி டீச்சர் என்னை டீவி. நிலையத்திற்கு அழைத்துச் செல்வதாகக் கூறியுள்ளார். திரும்பி வர எவ்வளவு நேரம் ஆகும் என்று சொல்லவில்லை. நேற்று இங்கே வந்திருந்தார். போய் விட்டு வருகிறேன்" என்று சொன்னாள்.

மங்கைக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை! "அப்பாவுக்குத் தெரியுமா?" என்று மட்டும் கேட்டார். "நீயே அப்பாவிடம் சொல்லிடும்மா" என்றாள் சித்ரா. வேறு வழியில்லாமல், "சரி போய் வா! பத்திரம்" என்று விடைகொடுத்தார் அம்மா.

தொலைக்காட்சி நிலையத்தில் எழிலரசி டீச்சரும் சித்ராவும் வரவேற்பறைக்குச் சென்றார்கள். மாடியிலிருந்து இறங்கி வந்த குழந்தைகள் நிகழ்ச்சித் தயாரிப்பாளர், அவர்களைத் தன் அறைக்கு அழைத்துச் சென்றார். சித்ராவின் ஓவியத் திறமையை பஜன்லால் மூலம் கேள்விப்பட்டதாகவும், அதனால்தான் சித்ராவுக்கு அழைப்பு விடுத்ததாகவும் தெரிவித்தார்.

அதைக் கேட்ட எழிலரசி டீச்சரும் சித்ராவும் ஒருவரையொருவர் மகிழ்ச்சியோடு பார்த்துக் கொண்டனர்.

அடுத்த வாரம் சனிக்கிழமை மாலை நாலரை மணிக்கு ஒளிபரப்பாகும் நிகழ்ச்சியில் சித்ராவின் படம் போடும் நிகழ்ச்சி பதினைந்து நிமிடம் நடக்கும் என்றார். அதற்கு எப்படிப்பட்ட உடையுடன் வரவேண்டும், டீவி. அரங்கில் எப்படி நடந்து கொள்ள வேண்டும், ஒத்திகைக்கான நேரம், வருகை நேரம், ஒப்பனை வசதி, சன்மானத் தொகை முதலிய விவரங்களையெல்லாம் தெரிவித்தார் தயாரிப்பு அதிகாரி.

சித்ரா, என்ன தாள், என்ன வண்ணம், ஓவியமாக என்ன உருவம் போடுவது என்பது பற்றிய விவரங்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டாள்.

மகிழ்ச்சியோடு திரும்பி வந்து கொண்டிருந்த சித்ராவும் டீச்சரும், 'ஹலோ' என்ற குரல் கேட்டு நின்றார்கள். எதிரே ஐம்பது வயது மதிக்கத்தக்க மாமி, "நான்தான் உங்களை அழைத்தது. நீ சித்ராதானே?" என்றார். ஆம் என்று தலையசைத்த சித்ரா தன் டீச்சரை அறிமுகப்படுத்தினாள்.

'உன்னை அன்று ஓவியப் போட்டியில் பார்த்தேன். என் பெயர் நளினாதேவி! நான் நீர் மேல் பொடி தூவி கோலங்கள் போடுவேன்! அதை இன்று டீவியில் செய்து காட்டப் போகிறேன்!" என்றார் அந்த அம்மையார்.

சித்ராவுக்கு அதைப் பார்க்க வேண்டும் என்று ஆசையாக இருந்தது. "அதைப் பார்த்து விட்டுச் செல்லலாமே டீச்சர்?" என்றாள். "நமக்கு வீட்டுக்குத் திரும்ப நேரம் ஆகுமே சித்ரா?" என்றார் அவர்.

"பரவாயில்லை. நான் என் காரில்தான்



"பரீட்சை எல்லாம்தான் முடிந்து விட்டதே. இன்னும் ஏண்டா கவலையாய் இருக்கே?"

"ரிசல்ட் வருமே. அதை நினைத்துத் தான்."

- வெ. மீனாட்சி



வந்திருக்கிறேன். உங்களை எங்கு வேண்டுமானாலும் கொண்டு போய் விடுகிறேன். இந்தச் சிறுமி இப்படிப் பட்ட கலையைப் பார்ப்பதும், கற்றுக் கொள்வதும் இவளுடைய எதிர் காலத்திற்கு நல்லது" என்றார் நளினாதேவி.

"எனக்குக் கூடத் தரையில் வண்ணக் கோலங்கள் போடத் தெரியும்! முருகன் படம் போடுவேன்" என்றாள் சித்ரா.

"அப்படியா! அதோ அந்த வேப்ப மரத்தடிக்குப் போவோம். கோலப் பொடி கொண்டு வந்திருக்கேன். போட்டுக் காட்டு பார்க்கலாம்?" என்றார் அவர் ஆவலுடன்.

மயில் மேல் முருகன் அமர்ந்திருப்பது போன்ற படத்தை சித்ரா சிமெண்ட் தரையில் போட்டுக் காட்டினாள்.

சித்ராவின் கைகள் சுழன்ற விதமும், சுறுசுறுப்பும் அந்த அம்மையாருக்குப் பிடித்து விட்டது. "அன்று ஓவியம் போட்டு அசத்தினாய்! இன்று கோலம் போட்டு அசத்துகிறாய்! ஒன்று செய்யேன். இன்று நீர் மேல் கோலம் நிகழ்ச்சியில் எனக்கு உதவியாக இருந்து நீயும் போடேன்?" என்று அழைப்பும் விடுத்தார் அந்த அம்மையார்.

சித்ராவால் மறுக்க முடியவில்லை. அந்தச் சாக்கில் டீ.வி அரங்கை பார்த்து விடவும் ஆசை. டீச்சரைப் பார்த்தாள். தலைமை ஆசிரியை பெரிய மேடத்தின் அனுமதியில்லாமல் அதற்கு ஒப்புக் கொள்ள அவருக்குத் தயக்கமாக இருந்தது.

"மேடம், எங்கள் பெரிய மேடத்திடம் அனுமதி வாங்க வேண்டுமே?" என்றார் டீச்சர்.

"அதற்கென்ன! உள்ளே வாருங்கள். கோமதி மேடத்திடம் நானே போனில் பேசுகிறேன். இந்த நிகழ்ச்சித் தயாரிப்பாளரிடமும் பேசுகிறேன்" என்று அழைத்துச் சென்றார் அம்மையார்.

மறுமுனையில் கோமதி மேடம்! "நல்ல யோசனைதான். ஆனால் எங்கள் பள்ளியில் பலரும் பார்க்க முடியாதே!" என்றார். அதற்கு நளினாதேவி, "என் நிகழ்ச்சியைப் பார்க்கும் அனைவரும் உங்கள் மாணவியையும் பார்ப்பார்கள். அதோடு என் வீட்டில் வீடியோவில் பதிவு பண்ணுவார்கள். அதை நான் தரேன். நீங்கள் உங்கள் பள்ளியில் உங்களுக்கு வசதியான நாளில் போட்டுக் காட்டலாம்" போதுமா? என்றவுடன் பெரிய மேடம்

அனுமதி கொடுத்து விட்டார்.

'நீர் மேல் கோலம்' நிகழ்ச்சி நேரடியாக ஒளிபரப்பானது; அந்த வார நிகழ்ச்சிகளில் அதுவே சிறந்ததென்றும், அதில் சித்ராவும் அருகே இருந்து தண்ணீரின் மேல் கோலம் போட்டது சிறப்பாக இருந்தது என்றும் பல பேர் டீவி நிலையத்திலேயே பேசிக் கொண்டார்கள்.

வெகு நேரம் தாமதமாகி விட்டதால் அம்மா கவலைப்பட்டிருப்பாரோ என்ற பதைபதைப்புடன் சித்ரா வந்தாள். நளினா தேவி தன் காரிலேயே அவளைக் கொண்டு வந்து விட்டார். ஏழெட்டுப் பேர்கள் தன் வீட்டு வாசலில் நின்று கொண்டிருப்பதைக் கண்டதும் பயந்து போனாள் சித்ரா.

அந்தத் தெருவில் உள்ளவர்கள் தற்செயலாக டீவியைப் பார்த்திருக்கிறார்கள். அதை உடனே ஓடி வந்து மங்கையிடம் சொல்லியிருக்கிறார்கள். பக்கத்தில் உள்ள ரம்யா வீட்டுக்கு மங்கையும் சென்று பார்த்தார். அப்படியே அனைவரும் பேசிக் கொண்டு வீட்டுக்கு வந்து விட்டார்கள்.

"வணக்கம்மா! நீங்கதான் சித்ராவோட அம்மாவா?" நளினா தேவியே காரை விட்டு இறங்கி வந்து கேட்டார். டீச்சரும் கூட வந்தார்.

"ஆமாங்க! உங்களை டீவில நாங்கள் பார்த்தோம்" என்றார் மங்கை.

அருகே இருந்த பெண் ஒருவர், "எப்படி சித்ரா, பயமில்லாமல் நிகழ்ச்சியைச் செய்தே?" என்று கேட்டார்.


"எல்லாம் மேடம் கொடுத்த உற்சாகம் தான்" என்றாள் சித்ரா.

"எங்க அப்பா கால் வைத்து அழுத்தினால் பஸ் நின்று விடும்!"

"அவ்வளவு பலசாலியா?"

"இல்லை, பஸ் டிரைவர்!"

– எல். கருணா



"சித்ராவுக்கு இன்றைக்குச் 'சுத்திப் போடுங்க' அம்மா, நான் வருகிறேன்" என்று விடைபெற்ற நளினாதேவி, "இந்தக் கலையிலே நீ நல்லா வரணும்" என்று ஆசீர்வாதமும் செய்து விட்டுப் போனார்.

அலுவலகத்திலிருந்து வந்த பசுபதி, "நானும் டீவில எதேச்சையாக நண்பர் வீட்டில் பார்த்தேன்" என்றார். அதோடு சரி. பாராட்டவும் இல்லை. கண்டிக்கவும் இல்லை!

மறுநாள் பள்ளியில் கோமதி மேடம், சித்ராவைக் கூப்பிட்டு அனுப்பினார். இப்போதெல்லாம் 'வித்யா உயர்நிலைப் பள்ளியின் ஸ்டார் சித்ராதான்! எல்லோரும் அவளைப் பற்றியும், அவளுடைய ஓவியத் திறமையைப் பற்றியும்தான் பேசினார்கள். சித்ரா மேடத்திடம் சென்றாள்.

"உனக்கு ஒரு சந்தோஷச் செய்தி சித்ரா! நம் ஆளுநர் குடியரசு தின விருந்துக்கு, தேர்ந்தெடுத்த பிரமுகர்களை ஆண்டுதோறும் அழைப்பார். இப்போதுள்ளவர் நேரு மாமா போலக் குழந்தைப் பிரியராம். உன்னைப் போன்ற சில குழந்தைகளையும் அழைத்து விருந்து கொடுக்கப் போகிறார். உனக்கும் அழைப்பு வந்துள்ளது. பாராட்டுகள்" என்று அழகிய அழைப்பைக் கொடுத்தார் மேடம்.

சித்ராவுக்கு தன் காதுகளையே நம்ப முடியவில்லை. இருந்தாலும் சற்று நிதானித்து "இந்தப் பெருமைக்கெல்லாம் காரணம் நீங்கள் தரும் உற்சாகமும் அன்பும்தான். நன்றி மேடம்" என்றாள்.

"உன்னால் நம் பள்ளிக்கே பெருமை! சென்று வா! அதைச் சொல்லத்தான் அழைத்தேன். வகுப்புக்குப் போ" என்று அனுப்பி வைத்தார். இச் செய்தி கொஞ்ச நேரத்தில் காட்டுத் தீ போல் பள்ளி எங்கும் பரவியது. அடுத்த நாள் பிரார்த்தனைக் கூட்டத்தில் அவர் முறைப்படி அறிவித்தார்.

கவர்னர் விருந்தில் கலந்து கொண்டது சித்ராவின் பெருமையைக் கூட்டியது. பசுபதியும் மங்கையும் எதையும் கண்டுகொள்ளவே இல்லை. இறுக்கமான சூழ்நிலையில் வீடு இருந்தது.

பசுபதி சித்ராவை அமைதியாக அழைத்து பள்ளியிலிருந்து வந்திருந்த புரோக்கிரஸ் ரிப்போர்ட்டைக் கொடுத்தார்.

"நம்மை உடனே வீட்டைக் காலி பண்ணச் சொல்லி விட்டார் வீட்டுக்காரர். அவர் விஜயாவின் தந்தைக்கு நெருங்கிய நண்பராம்" என்றார் மங்கை வறண்ட குரலில்.

(வளரும்)

Mother's Day Special

MAY '98



CARING FOR PETS

WHY IS MAN CLEVER?

Rs. 5/- Only

GOKULAM

The monthly magazine for children

47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097




இலைகளில் உயிரியல் பூங்கா!



உங்கள் வீட்டில் தோட்டம் இருக்கிறதா? இல்லையென்றாலும் கவலை வேண்டாம். நம் வீட்டிற்கருகில் எத்தனையோ மரங்கள், செடிகள், கொடிகள் இருக்கின்றன.

இலைகளை வைத்துக் கொண்டு உருவங்கள் செய்யலாம். அல்லது உருவத்திற்கு ஏற்றவாறு இலைகளை தேர்ந்தெடுக்க வேண்டும். நீங்கள் நினைத்த உருவத்திற்கு







ஏற்ற இலைகளைத் தேடிக் கண்டுபிடித்து வைத்துக் கொள்ளுங்கள்...!

இந்த இலைகளை தடிமனான புத்தகத்தில் தனித்தனியே வைத்து மூடி விடுங்கள். ஒரு வாரம் கழித்துப் பார்த்தால் இலையில் உள்ள பச்சையம் நீங்கி இலை 'காகிதம்'





போல இருக்கும். அப்போதுதான் இலை உருவங்களை உருவாக்க முடியும். இல்லையென்றால் இலை காய்ந்து நொறுங்கி விடும்.

இலைகளை வெட்டாமல் அப்படியே பயன்படுத்த வேண்டும். பெரிய வெள்ளைத் தாளில் பசையால் இலைகளை நாம் விரும்பும் உருவத்திற்கு ஏற்ப ஒட்ட வேண்டும்.

இந்த இலை ஓவியங்கள் பார்க்க வித்தியாசமாகவும் அழகாகவும் இருக்கும். இங்கு சில மாதிரிகள் உள்ளன. மேலும் பல வற்றை உங்கள் கற்பனையில் உருவாக்குங்கள். இனி இலைகளைப் பார்த்தால் என்ன உருவம் செய்யலாம் என்றே தோன்றுகிறதா!

ஒளிந்திருக்கும் வார்த்தைகளைக் கண்டு பிடியுங்கள்! — போட்டி முடிவு

இந்தப் போட்டியில் வழக்கம் போல் ஏராளமானோர் கலந்து கொண்டனர். இதில் இருபது பேர் மட்டும் தவறான விடைகளைத் தந்திருந்தனர். எனவே பரிசுக்குரியவர்களை குலுக்கல் முறையிலேயே தேர்ந்தெடுக்க முடிந்தது.

ரூபாய் பத்து பரிசு பெறுவோர்

1. எஸ். குரு சரண்யா, நான்காம் வகுப்பு, அருப்புக்கோட்டை.
2. ஆர். சசிகுமார், திருச்சி - 17.
3. க. ராஜேஸ்வரி, மானாம்பதி, காஞ்சிபுரம் மாவட்டம்.
4. பி. ராஜு, கிணற்றுவிளை, வடக்கு நட்டாலம்.
5. எஸ். நித்திய கல்யாணி, தெற்கு மாடவீதி, இராதாபுரம்.
6. ஜெ. கோகுல்குமார், தென்காசி, நெல்லை மாவட்டம்.
7. உ. வித்யா ராணி, மணக்காடு, தூத்துக்குடி மாவட்டம்.
8. சுகிர்த் கணேசன், ஆறாம் வகுப்பு, மாமல்லன் மெட்ரிக் பள்ளி, காஞ்சிபுரம்.
9. கே. ராணி, ராசிபுரம், சேலம் மாவட்டம்.
10. எம். அசோக் குமார், திருவையாறு, தஞ்சை மாவட்டம்.
11. வி. ஸ்ரீராம், கல்லூரணி, விருதுநகர் மாவட்டம்.
12. கே.எம். விஜயராகவன், கிருஷ்ணகிரி, தர்மபுரி மாவட்டம்.
13. கே.எம். அமுதவள்ளி, தாமரைக்குளம், தேனி மாவட்டம்.
14. ஜோ. தீபப் பிரியன், சந்தவாசல், போளூர் வட்டம்.
15. பி. சுபாஷிணி, சிங்கம்புணரி.


சரியான விடை :


1. முகம், பாதம், 2. குடகு, பங்கு, 3. குவளை, 4. சினம், அன்று, 5. புரவி.

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றி.

சிங்கக் கழுதை

கதை : ராஜிராதா, திருச்சி   படம் : சசி





நல்ல சுவையாக இருக்கே இந்தக் காகிதம்! முழுவதையும் நாமே சாப்பிட்டு விடலாம்!
டாமி சாப்பிட்ட திருப்தியில் –
லாலல லா; லாலல லா; லாலலலா
டாமி தன் கூட்டத்தினருடன் சேருவதற்குள் அங்கு சிங்கம் ஒன்று வர –
வேகமா ஓடுங்க
டாமி செய்வதறியாது நின்று கொண்டிருந்தது.
சிங்கம் டாமியை நோக்கி வர, டாமி எடுத்தது ஓட்டம்.
பெரிய பாறைக்குப் பின் ஒளிந்தது டாமி.
சே! என்ன வாழ்க்கை? எப்போதும் சிங்கத்திற்குப் பயந்து வாழ வேண்டியுள்ளதே!
நான் சிங்கமாகப் பிறந்திருந்தால் எல்லா விலங்குகளும் என்னைப் பார்த்து பயந்து ஓடும் அல்லவா!



மறுநாள். தன் அம்மாவைத் தேடிக் கிளம்பியது டாமி.
இது என்ன, சிங்கத்தின் தோல் போலத் தெரிகிறதே!
அருகில் சென்றது.
ஆமாம்! இறந்து போன சிங்கத்தின் தோலேதான்!
உடனே டாமிக்கு ஒரு யோசனை தோன்றியது.
இத்தோலுக்குள் நான் புகுந்து கொண்டால் நானும் சிங்கம் போலவே இருப்பேன்!
உடனே சிங்கத்தின் தோலை மாட்டிக் கொண்டது டாமி.
காட்டிற்குள் ராஜ நடை போட்டு வந்தது.
என் ஒப்பனை சரியாகப் பொருந்தி யிருக்கு! அதனால்தான் பிராணிகள் எல்லாம் பயந்து ஓடுகின்றன. ஹா! ஹா! ஹா!
மகிழ்ச்சியடைந்த டாமி தன் இருப்பிடத்திற்கு வந்து சேர்ந்தது.
ஐயோ! சிங்கம் நம்ம இடத்தைக் கூட கண்டு பிடித்து விட்டதே! வாங்க தப்பி ஓடலாம்!
சீக்கிரம் ஓடுங்க!
என் அம்மாவுக்கே என்னை அடையாளம் தெரியலையே!



மறுநாள் –
அடடா! சாப்பிடக் கிளம்பினால் சிங்கம் வருதே! இந்தப் புதர்ல ஒளிந்து கொள்வோம்.
புதரில் இருந்தபடி சிங்கத்தை கவனித்தது நரி.
என்னது? சிங்கம் சாதுவா நின்னுட்டு இருக்கு! பொதுவா சிங்கம் வந்தால் கர்ஜிக்குமே!
நரிக்கு சந்தேகம் வந்தது. மெல்ல வெளியே தலை காட்டியது. அப்போதும் டாமி பேசாமல் நின்றது.
அருகில் வந்தது நரி.
நீ உண்மையிலேயே சிங்கம்தானா?
டாமி ஒரு அடி எடுத்து வைத்திருந்தால் நரி ஓடிப் போயிருக்கும். ஆனால்....
எப்படி கண்டு பிடிச்சே! நான் சிங்கமில்லை.
அப்படியா?
ஆமாம். நீ யாரிடமும் சொல்லாவிட்டால் என் முகமூடியைக் கழட்டறேன்.
சரி. கழற்று.


டாமி சுழற்றியது.
உன்னைப் பார்த்தா எல்லோரும் பயந்தோம்.
ஆமாம் எப்படி என் புத்திசாலித் தனம்!
கோபம் கொண்டது நரி.
வேஷம் போட்டாலும் புத்திசாலித் தனத்தோட நடந்துக்கணும். அது கூட தெரியாத ஒரு கழுதை, என்னை பய முறுத்துவதா?
உன்னை என்ன செய்யப் போறேன் பாரு?
இரு, இரு சிங்கத் தோலை தூக்கிட்டு ஓடிடறேன.
நரி துரத்த டாமி அலறியடித்தபடி ஓடியது.
மறுபடியும் தோலா?

போட்டிக்குப் புறப்படு!



காட்சி : 1

இடம்: விமலா வீடு

(விமலா படித்துக் கொண்டிருக்கிறாள்)

ராதா: விமலா, விமலா...

விமலா: என்ன ராதா?

ராதா:... விமலா மறந்தே போயிட்டேன். புது புத்தகங்களுக்கு அட்டை போட்டாகணும்... பக்கத்துக் கடைக்குப் போய் பிரௌன் பேப்பர் வாங்கிக்கிட்டு வாரேன்!

விமலா: ராதா நில்லு! அட்டையை காசு கொடுத்தா வாங்கப் போறே?

ராதா: பின்னே எங்கே இலவசமா தராங்க?

விமலா: சரியான மறதி நீ! போன வாரம் இது விஷயமா நம்ம 'சிக்கன மாநாடு' எடுத்த முடிவை மறந்துட்டியா?

ராதா: ம்... என்ன முடிவெடுத்தோம்? ஓ.. காகித சிமெண்ட் பைகளை நல்லா உதறிட்டு, ஒழுங்கு பண்ணி, புத்தகங் களுக்கு அட்டையா போட்டுக்கிட்டா உறுதியாகவும் இருக்கும்; அழகாகவும் இருக்கும்னு தீர்மானிச்சோம்; அதைச் சொல்றியா?

விமலா: நம்ம வீட்லேயும் நிறைய காகித சிமெண்ட் பைகள் இருக்கு இல்லே!

ராதா: இருக்கு...

விமலா: பின்னே என்ன யோசனை? எடுத்து சுத்தம் செய்து போட்டுக்க வேண்டியதுதானே... பக்கத்துத்தெரு புவனா கூட இந்த மாதிரி செய்து, அட்டைபோட்டு நமக்குக் கொண்டு வந்து காட்டினா இல்லே, எவ்வளவு நல்லாயிருந்தது?

ராதா: ஓ.கே! நான் சிமெண்ட் பை அட்டையையே போட்டுக்கறேன்!

விமலா: வெரி குட்! இப்படி நாம சிக்கனப்படுத்தற காசை வழக்கமா என்ன செய்யற வழக்கம்...?

ராதா: 'சிக்கன உண்டி'யிலே போடற வழக்கம், இதோ போட்டுடறேன்.

(புவனா வருகிறாள்)


புவனா: என்ன, நம்ம சிக்கன உண்டி வேகமா நிரம்பிக்கிட்டே வறது போலிருக்கு!

விமலா: ஆமாம் புவனா! நாம அடிக்கடி கூடிப்பேசி எப்படி எப்படியெல்லாம் சிக்கனத்தைக் கடைப்பிடிக்கலாம்னு யோசனை பண்ணி எடுக்கிற முடிவுகளை செயல்படுத்திக்கிட்டு வரோம்! நம்ம முயற்சிக்கு நல்ல பலன் இருக்கு.

ராதா: நான் எதையாவது மறந்தாலும் விமலா விடமாட்டா...

விமலா: எரிஞ்சு மீந்துபோன மெழுகு வர்த்தித் துண்டுகளை எப்படி மறுபடியும் ஒன்னா சேர்த்துப் பயன்படுத்தலாம், மாதாமாதம் கிழிக்கிற பெரிய 'காலண்டர்'

எஸ். ஆர். ஜி. சுந்தரம்



தான்களையும் வீட்டுக்கு வர பெரிய தபால் கவர்களோட உட்பக்கத்தையும் எப்படி 'ரப்' நோட்டாதைச் சுக்கலாம், கிழிஞ்சுபோன துணிகளை எப்படி கைக்குட்டைகளா மாத்திக்கலாம்- இப்படி நீ சொன்ன பல யோசனைகளையும் நாங்க கடைப்பிடிச்சுக்கிட்டு வரோம்!

புவனா: மளிகை சாமான் கட்டிவர சணல் கயிற்றை ஒண்ணாசேர்த்து எப்படி எப்படி உபயோகப்படுத்தலாம், பவுடர் டின்னை எப்படி பூந்தொட்டியா மாத்திக் கலாம்னு நீங்க சொன்ன யோசனைகளும் ரொம்ப ஜோர்!

விமலா: இந்த கோடை விடுமுறையிலே இதையெல்லாம் பழகிப் பார்க்க நமக்கு நிறைய நேரமும் இருக்கு இல்லையா?

மணி: (கைதட்டியபடி) சபாஷ்! உங்க கருமிகள் மாநாடு ரொம்ப ஜோர்! முன்னெல்லாம் மாதம் ஒருமுறைதான் கூடும்! இப்போ வாராவாரம் கூட ஆரம்பிச்சுட்டுது போலிருக்கு!

ராதா: மணி, சும்மா இரு.

மணி: ஏன் உள்ளதைச் சொன்னா கோபம் வருதா?

ராதா: நீ எங்க தம்பி! எங்களைக் கிண்டல் பண்ணா பொறுத்துக்குவோம்! ஆனால் புவனாவையும் சேர்த்து...

புவனா: மணி! சிக்கனம்னா என்ன, அதை ஏன் கடைப்பிடிக்கணும்னு தெரியாத நீ எங்களைப் பார்த்து கிண்டல் செய்யறதிலே அர்த்தம் இல்லே.

மணி: கருமிகளோட நெருங்கிய நண்பன் சிக்கனம். சிக்கனத்தைப்பத்தி இவ்வளவு தெரிஞ்சா போதாதா?

விமலா: ரொம்ப தப்பான விளக்கம்!

மணி: எதுக்கு அக்கா சிக்கனம் அது இதுன்னு பழகிட்டு கஷ்டப்படணும். இதோ பார், நான் எவ்வளவு ஜாலியா இருக்கேன்! அப்பா தினமும் நமக்குத் தர பாக்கெட் மணியை அப்பப்போ சந்தோஷமா செலவழிச்சுடறேன். 'பேண்ட்', 'ஷர்ட்'டை லாண்டரிக்குப் போட்டு மடிப்புக் கலையாம 'ஜில்'லுன்னு மாட்டிக்கிறேன். அப்புறம் உங்களை மாதிரி கஞ்சத்தனமாக எழுதாமல் அழகா குண்டு குண்டா எழுதறேன். நிறைய நோட்டு, பேனா, பென்சில் என்று கடையே வச்சிருக்கேன் தெரியுமா?

புவனா: ஆக மொத்தம் பென்சில், நோட்டுக் கடை வெச்சிருக்கேன்னு பெருமைப்படறே!

மணி: ஆமாம்! உங்களுக்கென்ன?

ராதா: ஏன் மணி இப்படி பல்லைக் கடிக்கறே?

புவனா: ஒருவேளை மணிகிட்டே பல்செட் ரெடியா இருந்தாலும் இருக்கும். அந்தத் தைரியம்தான்.

விமலா: எங்களோடு சேர்த்து அவளையும் கருமின்னு சொன்னே இல்லே. இப்போ வாங்கிக் கட்டிக்க.

மணி: ஆமாம். அப்படித்தான் சொல்வேன். நீங்க எல்லாரும் ஒண்ணாம் நம்பர் கருமிகள்!

விமலா: இருக்கட்டும்! இந்தப் பாரி வள்ளலும் ஒரு நாள் இல்லாட்டா ஒரு நாள் இந்தக் கருமிகள் மாநாட்டிலே 'அட்மிஷன்' கேக்கத்தான் போறார்.

மணி: நடக்காது!

ராதா: அதையும் பாக்கறோம்!

காட்சி: 2

இடம்: விமலா வீடு

(விமலாவும் ராதாவும் போட்டி ஒன்றிற்குச் செல்லத் தயாராக இருக்கின்றனர்.)

விமலா: ராதா! இன்னிக்கு நடக்கப்

போற 'இந்திய சுதந்திரதினப் பொன்விழா' கட்டுரைப்போட்டிக்கு எதைப்பத்தி எழுதச் சொல்வாங்கன்னு நீ எதிர்பாக்கறே?

ராதா: அநேகமா 'நமக்குப் பிடிச்ச சுதந்தரப் போராட்ட வீரர்' யாரையாவது பத்தி எழுதச் சொல்வாங்கன்னு நினைக்கிறேன்

விமலா: அதுவும் சரிதான்! எப்படியும் ஒரு மணி நேரம் முன்னாடியே தலைப்பை சொல்லிடுவாங்க! வெளுத்துக் கட்டிடலாம்!

ராதா: நாமதான் பல தேசியத் தலைவர்களைப்பத்தி நல்லா தெரிஞ்சு வச்சிருக்கோமே! அந்த ஆயிரம் ரூபாய் பரிசை எப்படியாவது தட்டிடணும்!

மணி: (உள்ளே வந்தபடி) என்ன ஆயிரம்; அது இதுன்னு அடிபடறது!

ராதா: நாங்க இன்னிக்கு ஒரு கட்டுரைப்போட்டியிலே கலந்துக்கப் போறோம். முதல் பரிசு ஆயிரம் ரூபாய்!

மணி: முதல் பரிசு ஆயிரம் ரூபாயா? அக்கா நானும் இந்தப் போட்டியிலே கலந்துக்கப்போறேன்...

ராதா: தாராளமா கலந்துக்க, போட்டிக்கு இன்னும் ரெண்டுமணி நேரம்தான் இருக்கு!

மணி: ஓகே! தயாராயிடறேன்!

ராதா: போட்டிக்கு வேண்டிய பேப்பர், பேனா எல்லாத்தையும் நாமதான் எடுத்துக்கிட்டுப் போகணும்.

மணி: எத்தனை பக்கம் கட்டுரை எழுதணும்? அதைச் சொல்லலையே!

விமலா: குறைஞ்சது பத்துப் பக்கம் எழுதணும்!

மணி: வெளுத்துக்கட்டிடறேன்! (உள்ளே சென்றுவிடுகிறான்.)

விமலா: வா புவனா. உட்கார்!

மணி: விமலா, கொஞ்சம் இருங்க, நான் கடைக்குப் போய் போட்டியிலே கலந்துக்க பேப்பர் வாங்கிக்கிட்டு வந்துடறேன்.

ராதா: நில்லு மணி! நீ எங்கே சுத்தினாலும் உனக்கு இன்னிக்கு பேப்பர் கிடைக்காது.

மணி: ஏன்?

ராதா: இன்னிக்குத்தான் நகரமொத்த வியாபாரிகள் கதவடைப்பாச்சே... எந்தக் கடையும் திறந்திருக்காது!

மணி: ச்சே! மறந்தே போச்சு!.. உங்களுக்கு எப்படி பேப்பர் கிடைச்சது?


ராதா: நாங்க நேற்றே பேப்பர் வாங்கி வச்சிட்டோம்.

மணி: ஐயய்யோ... நான் இப்போ என்ன செய்வேன்?

புவனா: என்ன ஆச்சு இவனுக்கு, தவிக்கிறான், குதிக்கிறான்!

மணி: ஐயோ பேப்பர் இல்லாம எப்படி போட்டியிலே கலந்துக்கறது?

புவனா: ஒரு பேப்



பர் கூடவா இல்லே?

மணி: இல்லே புவனா.

விமலா: எப்படி இல்லேன்னு கேளு? எங்க அப்பா இவனுக்குனே நிறைய பேப்பர் கட்டுக் கட்டா வாங்கி வச்சிருந்தார்.

மணி: ம்... அது வந்து.. வந்து.. எல்லா பேப்பர்லேயும் எழுதியாச்சு!

புவனா: ஏண்டா கண்ணு! பலாக் கொட்டை பலாக்கொட்டையா எழுதித் தீர்த்துட்டியா?

மணி: அவசரமா இப்போ பேப்பர் வேணும், அதுக்கு வழி சொல்லுங்கோ! ஐயோ ஆயிரம் ரூபாய் பரிசு!

புவனா: விமலா, ராதா! மணி தவிக்கிறான் பார்த்தியா?

மணி: விமலா, உன் பேப்பர் கட்டிலிருந்து நீதான் பத்து பேப்பர் கொடேன்!

விமலா: எனக்குப் போக மீதி ரெண்டு பேப்பர்தான் இருக்கு!

மணி: ராதா நீயும் கொடு!

ராதா: இந்தா ரெண்டு பேப்பர்.

மணி: புவனா நீ?

புவனா: போயும் போயும் கருமிகளையா கேட்கறே! ஐய்யோ பாவம்!

மணி: நேரம் ஆகிக்கிட்டே போறது புவனா. சீக்கிரம் கொடு.

ராதா: மணி இப்படி வா! 'எதிலும் சிக்கனமா இருக்கப் பழகிக்க, சிக்கனமா இருக்கப் பழகிக்க'ன்னு எவ்வளவு தடவை சொல்லியிருக்கோம்! ம், அவஸ்தைப்படு!

விமலா: மணி! சிக்கனம்கிறது கருமித்தனம் இல்லே! எந்தப் பொருளையும் குறைந்தபட்ச அளவிலே உபயோகப் படுத்தி, நம் எதிர்காலத் தேவைக்காகவும், சவுகரியத்துக்காகவும், நமக்கே உதவியா இருக்கறதுக்காக ஏற்படுத்திக்கிற நல்ல பழக்கம்தான் சிக்கனம்.

புவனா: இருக்கும்போது எதையும் வாரி வாரி இறைக்கறது புத்திசாலித் தனமில்லே...

ராதா: சிக்கனத்தோட அர்த்தமும், பெருமையும் இப்பவாவது புரியறதா?

புவனா: சிறு துரும்பும் பல் குத்த உதவும்... ஆனால்... அந்த சிறு துரும்பையும் வீணாக்காம பாதுகாக்கத் தெரிஞ்சிருக்கணும்!

மணி: விமலா! புவனா! ராதா!... நீங்க எல்லாரும் என்னை மன்னிச்சுடுங்க! என்னோட கையெழுத்திலே அலட்சியம் காட்டினதால அதைத் திருத்திக்க முடியல்லே...சிக்கனபுத்தி இல்லாததும், உங்க பேச்சை மதிக்காததும்தான் இப்போ என்னோட இந்த நிலைமைக்கு காரணம்! சிக்கனமில்லாத பழக்கத்தால இப்போ இந்த போட்டியிலே கலந்துக்க முடியல்லே! சிக்கனத்தோட அருமை இப்பத்தான் எனக்குப் புரியறது.

விமலா: கவலைப்படாதே மணி! எங்ககிட்டே அதிகப்படியான பேப்பர் இருக்கு. உன் தவறை உனக்கு எடுத்துக் காட்டத்தான் உன்னைத் தவிக்கவிட்டு வேடிக்கைப் பார்த்தோம். இந்தா, போட்டிக்குப் புறப்படு!

மணி: நன்றி விமலா!

புவனா: சபாஷ்! நம்மோட அடுத்த 'கருமிகள் மாநாட்'டுக்கு ஒரு புது உறுப்பினர் கிடைச்சாச்சு!

மணி: இல்லே... உங்க 'கருமிகள் மாநா'ட்டிலே நான் சேரமாட்டேன்!.. சிக்கன மாநாட்டிலேதான் சேருவேன்!

(சிரிப்பலைகள்)



"ஆமைகளுக்குள் சண்டை வந்தால் யாரிடம் போகும்?"
" 'நாட்டாமை'யிடம் தான்"
– வியாசை கிருஷ்ணன்



பள்ளியில் சில வைரங்கள்!

மு. நடராசன்

தபால்காரர் கொடுத்து விட்டுப் போன கடிதத்தைப் படித்ததும் மகிழ்ச்சியில் துள்ளினாள் மேனகா. மனதில் எல்லையில்லா ஆனந்தம் கரைபுரண்டோடியது!

"அம்மா... அம்மா...." என்று கத்திக் கொண்டே ஓடிப் போய் கடிதத்தை அம்மாவிடம் கொடுத்தாள். வாங்கிப் படித்த அவளது அம்மாவின் முகத்தில் பெருமிதப் புன்னகை!

இந்த சிறுவயதில் அவள் எழுதி, நடித்த நாடகத்தை அறிந்து 'அமுதம்' சிறுவர் இதழிலிருந்து அவளைப் பேட்டிகாண ஞாயிற்றுக் கிழமை வரப்போவதாக அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தது.

மேனகா படிப்பில் மட்டுமல்ல அனைத்துத் துறைகளிலும் அபாரத்திறமை பெற்றிருந்தாள். ஒரு கருத்தைச் சொன்னால் அதிலிருந்து ஒன்பதை விளைவித்துக் கொள்கின்ற அற்புத ஆற்றல் அவளிடம் இருந்தது கண்டு, அவள் பள்ளி ஆசிரியர்களே அதிசயித்துப் போயிருக்கிறார்கள்!

இசை, நாட்டியம், நாடகம், பேச்சு, கட்டுரை போன்ற எந்தத் துறையில் போட்டி என்றாலும் அதில் ஒரு புதிய அணுகுமுறையைக் கையாண்டு வெற்றிக் கனியை தனதாக்கிக் கொள்வது அவள் வாடிக்கை!

ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும், நண்பர்களுக்கும் மட்டுமே பரிச்சயமாயிருந்த அவளது திறமை பத்திரிகையாளர்களையும் எட்டக் காரணமாயிருந்தது, மாநில அளவில் பள்ளிகளுக்கிடையே நடந்த அந்த நாடகப் போட்டிதான்.

அந்த நாடகப் போட்டியில் மற்றவர்களின் நாடகம் சாதாரணமாக இருக்க, இவளது நாடகம் சமுதாய அக்கறை கொண்டதாக இருந்தது; அனைவரையும் கவர்ந்தது.

நடுவர்கள் மேனகா குழுவினர்க்கு முதல் பரிசு அளித்தனர். நாடகத்தை இயற்றி நடித்த மேனகாவுக்கு சிறப்புப் பரிசு கொடுத்தனர்.

அந்த செய்தி பத்திரிகைகளில் பெட்டிச் செய்தியாய் வந்து அனைவரது கவனத்தையும் ஈர்த்தது! அவளின் திறமைகளை முழுக்க அறிந்து வெளிக் கொணர்வதன் மூலம் அவளையும் பெருமைப்

படுத்தலாம், மற்றவர்களையும் ஊக்கப் படுத்தலாம் என்று அமுதம் பத்திரிகை ஆசிரியர் நினைத்ததன் விளைவே, இன்று மேனகாவின் கையில் இருக்கும் அந்தக் கடிதம்!

மேனகாவைப் பேட்டிகாண அமுதம் பத்திரிகை ஆசிரியர் வரும் செய்தியை தலைமையாசிரியர், பேரவையிலேயே அறிவித்து அவளைப் பாராட்டி, அவளால் இந்தப் பள்ளிக்கே பெருமை என்று கூறி முடித்தபோது, கரவொலி விண்ணைப் பிளந்தது.

'என்ன முயன்றும் இந்த மேனகாவை விஞ்ச முடியவில்லையே' மனம் சலித்துப் போனான் மாணிக்கம். வகுப்பில் மேனகாவுடன் போட்டி போட்டுப் படிக்கும் ஒரே மாணவன் அவன்தான். இந்த மேனகாவால்தான் தன் திறமை மங்கிப் போகிறது. ஆசிரியர்களைத் தன்னால் கவரமுடியவில்லை; வெற்றி நிச்சயம் என்ற உறுதியில், எந்தப் போட்டிக்கும் அவளையே பரிந்துரை செய்து விடுகிறார்கள்.

இன்னும் இந்த பத்திரிகைப் பேட்டி வேறு நடந்து விட்டால் சொல்லவே வேண்டாம், ஆசிரியர்களையும், தலைமையாசிரியரையும், வானளாவப் புகழ்ந்து விடுவாள். 'அனைத்துக்கும் அவர்கள்தான் காரணம்' என்று ஐஸ் கட்டியைத் தூக்கி வைத்து விடுவாள். பிறகு கேட்கவே வேண்டாம்.

என்ன பத்திரிகை ஆசிரியர் இவர். என்னிடம் உள்ள திறமையை இவரால் கண்டு பிடிக்க முடிந்ததா? அங்கீகரிக்க முடிந்ததா? இந்த மேனகா மட்டும் என்ன இமய மலையா ஏறிவிட்டாள்! பெரிசாய்ப் பேட்டி காண வருகிறார்களாம்! பொறாமைத் தீயில் எரிந்து கொண்டிருந்த மாணிக்கத்தின் மனம், வினோதமாய் ஒரு சிந்தனையைத் தூக்கிப் போட்டது.

'இந்தப் பேட்டியை நடக்காமல் செய்து விட்டால்....! மிகுந்த ஆவலாய் இருக்கும் இவள் மனம் ஒடிந்து போகும். எதிர்பார்ப்புடன் இருந்த நண்பர்கள் ஏமாந்து போவார்கள். கேலி செய்வார்கள். அதனால் மனம் துணுக்குற்று ஆர்வம் இழப்பாள்! இதுதான் அவளை வீழ்த்த சரியான நேரம்! திட்டம் போட்டுக் கொண்டே ஒரு வெள்ளைத்தாளை எடுத்தான்.

அன்புள்ள அமுதம் ஆசிரியருக்கு,

உங்கள் கடிதம் கிடைத்தது. எனது மகளைப் பேட்டி காண வருவது, அவள் பாட்டிக்குப் பிடிக்கவில்லை. கண்பட்டு விடும் என்கிறார்கள். மேலும், அந்த ஞாயிற்றுக் கிழமையன்று நாங்கள் வெளியூர் செல்ல இருப்பதால் தாங்கள் வரவேண்டாம் எனத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.


இப்படிக்கு,
சந்திரமோகன்.

மேனகாவின் அப்பா எழுதுவது போல் ஒரு கடிதத்தை எழுதி பத்திரிகை அலுவலகத்திற்கு அனுப்பிவிட்டு வந்த பிறகுதான் மாணிக்கத்திற்கு நிம்மதியாய் இருந்தது.

அன்று ஞாயிற்றுக்கிழமை. "மாணிக்கம், மேனகா வீட்டிற்கு நீ ஏண்டா வரலே? மேனகாதான் நம்மையெல்லாம் கூப்பிட்டிருந்தாளே, பத்திரிகைக்காரங்க வந்து அவளை பேட்டி கண்டு, எங்களையெல்லாம் கூட அவள் பக்கத்தில் நிக்கவச்சு புகைப்படம் எடுத்திட்டுப் போயிருக்காங்கடா." சீனிவாசன் செய்தியைச் சொன்னபோது தலையில் இடி விழுந்ததைப் போல் இருந்தது மாணிக்கத்திற்கு!

"உடம்பு சரியில்லேடா. அதான் வர முடியலை"

"எங்கே அவசரமா புறப் பட்டீங்க?"
"பக்கத்து மைதானத்துல 'அலகுப் போட்டி' நடக்குதாம். அதைப் பார்க்கப் போறேன்."
— கி. மஞ்சுளா



எதையும் வெளிக்காட்டிக் கொள்ளாமல் பக்குவமாய் அவனிடம் பேசி அனுப்பி விட்டான்.

எப்படி வந்தார்கள்? கடிதம் போய்ச் சேரவில்லையா? இருக்காதே, அப்படி ஏதும் நடந்துவிடக் கூடாது என்பதற்காகத் தானே பதிவுத் தபாலில் அனுப்பினான்! என்னமாய் யோசித்தும் விடை கிடைக்கவில்லை மாணிக்கத்திற்கு!



அன்று பள்ளிக்குப் புறப்பட்டபோது அவன் பெயருக்கு வந்த ஒரு கடிதத்தைக் கொடுத்து விட்டுப் போனார் தபால்காரர்.

அமுதம் பத்திரிகை அலுவலகத்திலிருந்துதான் அந்தக் கடிதம் வந்திருந்தது. ஆர்வமாய் பிரித்துப் படித்தான்.

"தங்களின் 'மின்மினிப் பூச்சிகள்' என்ற சிறுகதை அடுத்த அமுதம் இதழில் பிரசுரமாகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். பாராட்டுகள்."

மகரந்தப் பூக்களாய் மனது விரிய, கடிதத்தைத் திருப்பியபோது பின் குறிப்பு என்று ஆசிரியர் கைப்பட நான்கு வரிகளை எழுதியிருந்தார்.

அன்புள்ள மாணிக்கத்திற்கு,

அமுதம் இதழில் இதுவே உனது முதல் கதை. தொடர்ந்து பல கதைகளை நீ அனுப்பியதால் உனது எழுத்து எனக்கு நன்கு பரிச்சயமாகியுள்ளது. அந்த எழுத்து எந்த ரூபத்தில் வந்தாலும் நான் புரிந்து கொள்வேன்.

எல்லோருக்கும் திறமை உள்ளது. இடைவிடா முயற்சியும் ஊக்கமும் கொண்டு உழைப்பவர்களால் மட்டுமே அந்தத் திறமையை வளர்த்துக் கொண்டு, புகழடைய முடிகிறது. உனது உழைப்பால் மட்டுமே நீ புகழடைய முடியும். நல் வாழ்த்துகள்."

கன்னத்தில் அறைந்தாற் போலிருந்தது ஆசிரியரின் குறிப்பைப் படித்ததும் ஆசிரியர் எவ்வளவு நுணுக்கமாய் உண்மையைக் கண்டுபிடித்து விட்டார்! தான் செய்த காரியத்தை நினைத்தபோது அவனுக்கே வெட்கமாயிருந்தது.


அடுத்த அமுதம் இதழில் ஒரு பக்கம் மேனகாவின் பேட்டியையும் அடுத்த பக்கத்தில் மாணிக்கத்தின் கதையையும் அழகாக வெளியிட்டு இருந்தார்கள். அந்த பக்கங்களைப் பள்ளி தகவல் பலகையில் ஒட்டி அதன் கீழே 'மேனகா - மாணிக்கம் இந்தப் பள்ளியின் வைரங்கள்' என்று எழுதி தலைமை ஆசிரியர் கையொப்பமிட்டிருந்தார். மாணவர்கள் கும்பலாய் நின்று படித்துக் கொண்டிருந்தனர்.

"என்னுடன் போட்டி போட்டுப் படிக்கும் மாணிக்கமும் எனது உயர்வுக்கு ஒரு காரணம் என்று என்னையும் உனது பேட்டியில் பெருந்தன்மையுடன் குறிப்பிட்டிருக்கிறாய். நன்றி" என்று கூறி, மாணிக்கம் மேனகாவுடன் கைகுலுக்கிய போது அவன் மனதில் இருந்த பொறாமைக் குணம் முற்றிலும் காணாமல் போயிருந்தது!

எங்கே போகிறது?

நானும் நண்பனும் பள்ளியிலிருந்து வீட்டிற்குக் கிளம்பினோம். அப்பொழுது ஒரு சிறுவன் எங்களிடம் வந்து "அண்ணா, இந்த ரோடு எங்கே போகுது?" என்று கேட்டான். நானோ "ரோடு எங்கேயும் போகாது. இங்கேயே தான் இருக்கும்" என்றேன். "டேய், அந்தப் பையன் பள்ளிக்கும் ஊருக்கும் புதுசு. அவனிடம் போய் விளையாடறியே" என்று கூறினான் என் நண்பன். நான் அந்தச் சிறுவனிடம் மன்னிப்புக் கேட்டுவிட்டு, வழி சொன்னேன்.






ஜி. மகாராஜன்,
ஒன்பதாம் வகுப்பு 'ஆ' பிரிவு,
அ.மே. நி. பள்ளி, பெரியதச்சூர்.

யார் எழுதியது?

எங்கள் வகுப்பாசிரியருக்கு மாணவர்கள் யாராவது கரும்பலகையில் எழுதினால் பிடிக்காது. அன்று அவர் வகுப்பறைக்குள் நுழைந்த போது கரும்பலகையில் ஒரு பொன்மொழி எழுதியிருந்தது. ஆசிரியர் அதைப் பார்த்து விட்டு "இதை எழுதியது யார்?" என்று கோபமாகக் கேட்டார். மாணவர்கள் ஒவ்வொருவரும் "சாக்ரட்டீஸ், ஷேக்ஸ்பியர், திருவள்ளுவர் என வரிசையாகச் சொல்லவும் ஆசிரியர் கோபத்தை மறந்து சிரிக்க ஆரம்பித்தார்!



எம். மகேஸ், தாரமங்கலம்.

என்ன செய்யப் போகிறாய்?


பள்ளி உணவு இடைவேளை. நண்பர்களுடன் உட்கார்ந்து சாப்பிட ஆரம்பித்தேன். "படிப்பு முடிந்தவுடன் என்ன செய்யப் போறே?" என்று என்னிடம் கேட்டான் நண்பன். நானும் என் விருப்பத்தைச் சொன்னேன். இப்படி பலரும் தங்கள் எதிர்காலத்தைக் குறித்துப் பேசியபடியே சாப்பிட்டோம். எங்கள் நண்பர்களில் ஒருவன் தாமதமாக சாப்பிட வந்தான். அவனிடமும் "நீ படித்து முடித்தவுடன் என்ன செய்வே?" என்று கேட்டோம். "நான் படித்து முடித்தவுடன் புத்தகத்தை பையில் வைத்து விட்டு சாப்பிடப் போவேன்" என்றான். எங்களுக்கோ சிரிப்பை அடக்க முடியவில்லை.

இ. நடராஜன்,
பதினோராம் வகுப்பு,
அனந்தபுரம்

சந்தேகம் வந்தால்?

கணித ஆசிரியர் பாடம் நடத்தி முடித்த பின் "உங்களுக்கு சந்தேகம் வந்தால் எப்போது வேண்டுமானாலும் என்னை வந்து கேட்கலாம்"

எங்கள் பள்ளியில் நடந்தது!





என்றார் எங்களிடம். குறும்புக்கார மாணவன் எழுந்து "சார் இரவு பன்னிரெண்டு மணிக்குக் கூடவா?" என்றான். "நீ முழிச்சிக்கிட்டு இருந்தால் தாராளமாக வீட்டிற்கு வந்து கேள்" என்றார் ஆசிரியர் அமைதியாக. மாணவனுக்கோ சங்கடமாகி விட்டது.

கே. ராஜேந்திரன், நல்லாலம்,
கோவிலூர்

ஈ.குமார் வேணும்?

எங்கள் பள்ளியில் ஆண்டு விழா நடைபெற இருந்தது. அவரவர் வகுப்பை சுத்தப் படுத்திக் கொண்டிருந்தோம். அப்போது பக்கத்து வகுப்பு மாணவன் வந்து " ஈ.குமார் வேணும்" என்று கேட்டான். "எங்கள் வகுப்பில் ஈகுமார் இல்லை, பி. குமார்தான் இருக்கிறான்" என்றேன் நான். தலையைச் சொறிந்தபடி அந்த மாணவன், "நான் கேட்டது ஈ. குமாரை அல்ல, ஈக்குமாரை அதாவது துடைப்பத்தை" என்று கூறவும் வகுப்பே சிரித்தது.

வெ.அ. கார்த்திகேயன்,
ஒன்பதாம் வகுப்பு 'அ' பிரிவு
வென்னோடு.

தூங்காதே தம்பி!

பள்ளியில் பாட்டுப் போட்டி நடைபெற்ற போது அடுத்த போட்டியாளரை அழைத்தார்கள். பலமுறை அழைத்தும் அந்த போட்டியானர் வராததால், அதற்கடுத்த போட்டியானரைக் கூப்பிடார்கள். திடீரென கூட்டத்திலிருந்து முதலில் அழைத்த போட்டியாளரான அந்த மாணவன் மேடையை நோக்கி ஓடினான். அவனையே பாடச் சொன்னார்கள். மேடையேறிய அவன் தன் தொண்டையைக் கனைத்துக் கொண்டு "தூங்காதே தம்பி, தூங்காதே..." எனப் பாடவும் பள்ளியே சிரித்தது!

த. அன்பழகன்,
திருவாரூர்



குமரன் வெளியே புறப்படத் தயாரானபோது அவனது அப்பா அழைக்க எரிச்சலுடன் அப்பாவின் அறைக்குள் சென்றான்.

குமரனின் அப்பா பலசரக்கு கடை வைத்திருப்பவர். சிறிய கடைதான். எனவே ஆட்கள் யாரையும் வைத்துக் கொள்ளாமல் அவரே கவனித்துக் கொண்டார். இரண்டு நாட்களாக அவருக்கு உடல் நிலை சரியில்லாததால் கடை மூடியே இருந்தது.

தனக்கு எதிரே வந்து நின்ற குமரனிடம் "குமரா இன்று உனக்கு விடுமுறை தானே! கடையைத் திறந்து கவனித்துக் கொள்ளேன். ஏதோ வருகிற வரை வரட்டும். நாளை எப்படியும் என் உடல் தேறி விடும். பிறகு நான் சமாளித்துக் கொள்கிறேன்" என்றார்.

குமரன் "அப்பா நான் எஸ்.எஸ்.எல்.சி படிக்கிறேன். என்னைப் போய் பொட்டலம் மடிக்க போகச் சொல்றீங்களே? என் நண்பர்கள் பார்த்தா கேலி செய்வாங்க. என்னால முடியாது" என்றான் உறுதியான குரலில்.

இதுவே வேறொருவராய் இருந்தால் அடித்து கடையை கவனிடா என்று துரத்தி இருப்பார்கள். குமரனின் அப்பா சாந்தமே உருவானவர்.

"இப்போ எங்கே போறே?" எனக் கேட்டார்.

"நண்பன் வீட்டுக்குப் போறேன். கேரம் விளையாட" எனக் கூறிவிட்டுச் சென்றான்.

குமரனின் அம்மா, "ஆனாலும் அவனுக்கு அதிகமா செல்லம் தர்றீங்க. ரெண்டு அதட்டு அதட்டினா பயந்துட்டுச் செய்யறான். அன்பா பேசினா இப்படித் தான் செய்வான்" என்றார்.

"அப்படியில்லை. சின்னப் பையன் தானே. போகப் போக தானாகவே பொறுப்பு வரும்" என்றார் அப்பா அதே கனிவான குரலில்.

குமரன் தனது நண்பன் சுந்தரத்தைக் காணச் சென்றபோது அவன் வெளியே கிளம்பிக் கொண்டிருந்தான்.

"வா குமரா. கேரம் விளையாட வரச்



வாண்டுதாசன்


சொல்லி இருந்தேன் இல்லையா? அப்புறம் விளையாடலாம். இந்தக் கணக்கை எத்தனை முறை போட்டாலும் தப்பாவே வருது. நீ போட்டுக் காட்டேன்'' என்றான்.

குமரனும் பலமுறை போட்டுப் பார்த்தும் தப்பாகவே வந்தது.

"சரி வா. நாம சரவணனைப் போய் கேட்கலாம். அவனுக்கு கணக்கெல்லாம் தண்ணி மாதிரி. அவனைப் பார்க்கத்தான் கிளம்பிக்கிட்டிருந்தேன்'' என்றான் சுந்தரம்.

சரவணன் மிக நன்றாகப் படிப்பவன். நண்பர்கள் சந்தேகம் கேட்டால் முகம் சுளிக்காமல் கற்றுத் தருபவன். அவன் அப்பா சலவைத் தொழிலாளி. சரவணனும் விடுமுறை நாட்களில் அவருடன் துணிகளுக்கு இஸ்திரி போடுவான்.

செய்யும் தொழில்...



இருவரும் போனபோது சரவணன் இஸ்திரி போட்டுக் கொண்டிருந்தான். பக்கத்தில் இஸ்திரி போட்டு மடிக்கப்பட்ட துணிகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. இஸ்திரி போட வேண்டிய துணிகள் தனியே இருந்தன. அவன் தந்தை வெளியே சென்றிருந்தார். சரவணன் இருவரையும் மலர்ச்சியுடன் வரவேற்றான்.

''சரவணா, கணக்குல சந்தேகம் கேட்க வந்தோம்'' என்றான் சுந்தரம்.

"கொஞ்சம் பொறு. இந்த சட்டையை இஸ்திரி போட்டுட்டு வரேன். ஆள் காத்துக் கொண்டிருக்காங்க. அப்படி உட்காருங்க" என்று நாற்காலிகளைச் சுட்டிக் காட்டினான்.

குமரனுக்கு ஆச்சரியம்! என்ன இது! இவன் தந்தை இஸ்திரி போடும் கடை

வைத்திருக்கிறார் என்று தெரியும். இவனும் இஸ்திரி போடுகிறானே! தான் இஸ்திரி போடுவதை நண்பர்கள் பார்க்கிறார்களே என்று கொஞ்சம்கூட கூச்சப்படாமல் இவ்வளவு இயல்பாக வரவேற்கிறானே! இவனால் எப்படி முடிகிறது. அசிங்கமாகப் படவில்லையா என எண்ணி வியந்தான்.

வேலையை முடித்து வந்த சரவணன் அந்த கணக்கினை ஐந்து நிமிடத்தில் போட்டு முடித்தான். தெளிவாக விளக்கினான்.

"தேங்ஸ் சரவணன். நாங்கள் கேரம் விளையாடப் போறோம். நீயும் வருகிறாயா?" எனக் கேட்டான் சுந்தரம்.

"இல்லை சுந்தரம், எனக்கு வேலை இருக்கிறது" என்றான் சரவணன்.

"சரவணா நீ இந்த வேலையைச் செய்யும்போது கூச்சமாக இல்லை? நண்பர்கள் கிண்டல் செய்யவில்லையா?" எனக் கேட்டான் குமரன்.

சரவணன் புன்னகைத்தான். "இப்போது நீங்கள் என்னைக் கிண்டலா செய்தீர்கள்? உழைப்பவனைக் கண்டு உருப்படாதவனும், சோம்பேறியும்தான் கிண்டல் செய்வார்கள். அப்படிப் பட்டவர்களின் பேச்சைக் கேட்டு நாம் மாறினால் நம்மை விட முட்டாள்கள் யாரும் இருக்க மாட்டார்கள். அவர்கள் பேச்சைப் பொருட்படுத்தக் கூடாது. என்னைப் படிக்க வைப்பதும், சாப்பாடு போடுவதும் இந்தத் தொழில்தான். தெய்வத்திற்குச் சமமான இதைச் செய்வதில் என்ன அசிங்கம் இருக்கிறது? செய்யும் தொழில் தெய்வமில்லையா?" என்றான்.

"புரிந்தது சரவணா" என்ற குமரன், "சுந்தரம் எனக்கு முக்கியமான வேலை இருக்கிறது. மாலையில் விளையாடுவோமே. சரவணனையும் சேர்த்துக் கொள்வோம்" என்றான்.

"மாலையில் எனக்கும் வேலையில்லை. நானும் வருகிறேன்" என்று கூறித் தனது சம்மதத்தைத் தெரிவித்தான் சரவணன். சுந்தரமும் "சரி" என்றான்.

சுந்தரமும், குமரனும் சரவணனிடம் விடைபெற்று நடக்கத் தொடங்கினார்கள்.

குறுக்கெழுத்துப் புதிர் விடை

1 ஆ	ஸ்	தி	ரே	2 லி	யா	■	டி	3 ஜா
ந்	■	4 ந்	■	ங்	■	ணி	■	ன்
தை	■	ல	■	க	■	4 ப	ட்	சி
■	■	5 சி	ன	ம்	■	■	■	ரா
ம்	6 நா	■	■	■	■	■	7 கே	ணி
ர	■	■	■	8 கா	ளா	ன்	■	■
தி	ந்	9 த	■	ற்	■	வி	■	லி
த்	■	டை	■	றா	■	ர்	■	ல்
10 ச	ணி	■	கா	டி	ர்	11 டா	ன்	12 அ

உங்கள் நூலகம்



பொன்மொழிக் கதைகள், ச. கவிதா, பக். 168 ரூ. 32/- மணிமேகலைப் பிரசுரம், 4, தணிகாசலம் சாலை, சென்னை - 17.

21 பொன் மொழிகளை மனதில் பதிய வைக்கக்கூடியனவாக 21 சிறுகதைகள் இத் தொகுப்பில் உள்ளன. கதைகள் எல்லாமே பெரிய வயதுச் சிறுவர்களின் மனதைக் கவரும் வகையில் சுவையாக உள்ளன. புதிய திருப்பம் தரும் நாடோடிக் கதைகளும் இதில் அடங்கும். கதை கூற விரும்புவோருக்குப் பெரிதும் பயன்படும். ஒரு படம் கூட இல்லையே!

கிப்ளியின் ஜங்கிள் புக் - அ. ஜெயக்குமார், பக். 236, ரூ. 40/- உமா பதிப்பகம், 58, ஐயப்ப செட்டித் தெரு, மண்ணடி, சென்னை - 1.

ஆங்கிலத்தில் உலகப் புகழ்பெற்ற இலக்கியமான கிப்ளியின் ஜங்கிள் புக் கதைகளின் கதாநாயகனான ஓநாய்ப் பையன் என்கிற மௌக்லி மட்டும் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளின் தொகுப்பு இது. ஜங்கிள் புக்கின் பல்வேறு கதைகள் (Episodes) கார்ட்டூன் திரைப்படங்களாகவும், சித்திரக் கதைகளாகவும் வந்து சிறுவர் மனதைக் கொள்ளை கொண்டுள்ளன. ஆனால் படிக்கக்கூடிய வகையில் ஒரே தொகுப்பாக வந்துள்ளது இதுவே முதல் முறை. கார்டூன்களைப் பார்க்காதவர்களுக்கும், சித்திரக் கதைகளாக வந்துள்ளவற்றைப் படிக்காதவர்களுக்கும் இந்த நூல் பெரு மகிழ்ச்சியைத் தரும் என்பதில் சந்தேகமே இல்லை. எளிதில் படிக்கக்கூடிய வகையில் பெரிய எழுத்துகள். அழகு கொஞ்சும் படங்கள். தரமான தயாரிப்பு.

புதையல் தீவு - பூவை அமுதன், பக். 112 ரூ. 22/- செந்தூரான் பதிப்பகம், 6, ஜெய்சங்கர் தெரு, சென்னை - 33.

தொண்டை நாட்டுக்கும் வேங்கை நாட்டுக்கும் உள்ள பகையின் காரணமாக, தொண்டை நாட்டின் மேல் படையெடுத்து அதை அழிக்க, புதையல் தீவில் உள்ள தங்கப் புதையலை எடுத்துப் பயன்படுத்திக் கொள்ள வேங்கை நாட்டினர் திட்டமிடுகின்றனர். புதையல் தீவில் பேய் பிசாசுகள் வாழ்வதாக வதந்தியைப் பரப்பி, யாரும் நெருங்க விடாமல் செய்து, புதையலை எடுக்கும் முயற்சியில் அவர்கள் வெற்றிகாணும் நிலையில், தொண்டை நாட்டு இளைஞன் தமிழ் அமுதன் உயிருக்குத் துணிந்து புதையல் தீவுக்கு வந்து, போராடி, வேங்கை நாட்டுத் தளபதியையும் பிடித்துக் கொண்டு வஞ்சக திட்டத்தைத் தடுத்து விடுகிறான். வாரிசு இல்லாத மன்னனுக்கு மகனாகி, தொண்டை நாட்டுக்கு அரசனாகிறான். கோகுலம் வாசகர்களுக்கு நன்கு அறிமுகமான ஆசிரியரின் படைப்பு. சுவையாகப் படிக்க வைக்கிறது. ஒரு படம் கூட இல்லையே!

- ரே

நாடகை ஆடிய நாயம்! ரேவதி, பக். 80, ரூ. 22.50, பழனியப்பா பிரதர்ஸ், 14, பீட்டர்ஸ் சாலை, சென்னை - 14.

பேய்க் கதைகள், மந்திரக் கதைகள் நிறைய வெளிவந்திருந்தாலும் இந்த நூல் வித்தியாசமாக உள்ளது. ஒவ்வொரு கதையும் விறுவிறுப்பைத் தூண்டி ஒரே மூச்சில் படிக்க வைக்கிறது. கதையின் முடிவில் அறிவியல் விளக்கமும் இருப்பதுதான் சிறப்பு. ஆறு கதைகளிலும் விறுவிறுப்பு, சுவைக்குப் பஞ்சமில்லை. கலாவின் படங்கள் அருமை! இக் கதைகள் கோகுலத்தில் முன்னாள் கௌரவ ஆசிரியர் ரேவதி அவர்களால் எழுதப்பட்டு வாசகர்களால் பாராட்டப் பெற்றுள்ளவை என்பது குறிப்பிடத்தக்கது.

- விஜி

போகாமல் வந்தேனே!

வீரனூரில் டம்பாச்சாரி ஒருவன் இருந்தான். செலவழிக்கவும் மனம் வராமல் வீண் ஆடம்பரத்துக்காக அவன் செய்யும் செயல்கள் அனேகம்.

பெருமாளுக்கு முடி, முருகனுக்குக் காணிக்கை என்று பொய் சொல்லிவிட்டு பாதி இரவில் பக்கத்து ஊரில் போய் மொட்டை அடித்துக் கொண்டு வருவான். ஊராரோ இவன் பக்தியைப் பாராட்டினர்.

தினமும் இரண்டு மணிக்கு மேல் எல்லோரும் சாப்பிட்டிருப்பார்கள் என்று நிச்சயமாகத் தெரிந்தபின் "விருந்துக்கு வருவோர் எவரேனும் உண்டோ?" என்று வீட்டுக்கு வெளியே வந்து குரல் கொடுப்பான்.

இதனால் ஊரில் அவனுக்குக் கொடாக்கண்டன் என்ற பெயர் ஏற்பட்டது. அவன் பெயர் நீலகண்டன். இதை நீலகண்டனின் மனைவி கண்டித்து வந்தாள்.

"எவனாவது ஒரு நாள் 'போடு சாப்பாடு' என்று வரப் போகிறான். அப்போது உங்கள் சாப்பாட்டைத்தான் போட வேண்டும். என்னால் பட்டினி கிடக்க முடியாது. எதுக்காக இந்தப் போலி ஜம்பம்?" என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டாள்.

அதே ஊரில் மணிகண்டன் என்றொருவன் இருந்தான். அவன் இந்த மாதிரியான வண்டவாளப் பேர்வழிகளை அம்பலப்படுத்துவதிலேயே குறியாய் இருந்தான். அதனால் அவனை விடாக்கண்டன் என்று ஊரார் அழைத்து வந்தனர். ஒருநாள் நீலகண்டனின் வீட்டுத் திண்ணைக்கடியில் கண்டான் முண்டான் சாமானுக்கிடையே பதுங்கி இருந்தான் மணிகண்டன்.

வழக்கம்போல் சத்த வெளியே வந்த நீலகண்டனின் வேஷ்டி நுனியைக் கெட்டியாகப்பிடித்துக் கொண்டான். சத்தி முடித்ததும் 'நான் இருக்கேன்' என்றபடி வெளிப்பட்டான் மணிகண்டன்.

நீலகண்டனுக்கு மனைவி சொன்னது சரியாகிவிட்டதே என்றிருந்தது. ஆனாலும் என்ன செய்வது? சாப்பாடு போடாவிட்டால் ஊரெல்லாம் தன் போலித்தனம் வெட்ட வெளிச்சமாகிவிடும். சாப்பாடு போடலாமென்றால் தன் வயிறு காயும். ஏதும் புரியாமல் அவனைக் கூடத்தில் உட்கார வைத்து விட்டு உள்ளே வந்தான்.

மனைவியைப் புறக்கடைக்கு அழைத்துச் சென்று "இப்போது என்ன செய்வது?" என்று கையைப் பிசைந்தான்.

"இதற்குத்தான் தலை தலையாய் அடித்துக் கொண்டேன்" என்று அவன் கூறியதும், "ஆ! ஐடியா வந்து விட்டது" என்றவன், "நான் தலையணையை மொத்துகிறேன். நீ உன்னை அடித்ததாய் பாவித்து அழவேண்டும்" என்றான். அவளும் ஒப்புக் கொண்டாள்.

நீலகண்டன் உள்ளே சென்றதும், பின்னாலேயே போய் மனைவியுடன் அவன் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்ட மணிகண்டன் சரேலென அடுத்த அறைக்குள் நுழைந்தான். அவன் அதிர்ஷ்டம் மேலே ஒரு பரண்

பவித்ரா



இருந்தது. சரசரவென அதில் ஏறி சாமான்களை முன்னால் நகர்த்தி வைத்துப் பின்னால் ஒளிந்து கொண்டான்.

புறக்கடையிலிருந்து அறைக்குள் மனைவியோடு நுழைந்த கொடாக்கண்டன் ஒரு கம்பால் தலையணையை அடித்துக் கொண்டே "உனக்கு எவ்வளவு திமிர் இருந்தால் விருந்தாளியைக் கேவலமாகப் பேசுவாய்! வந்த விருந்தாளியை உபசரித்து, வரும் விருந்தாளியை எதிர்பார்ப்பது தமிழன் பண்பாடு. மரியாதையாய் நாடகமாடாமல் எழுந்து வந்து சாப்பாடு போடப்போகிறாயா, இல்லையா?" என்று கத்தினான்.

அவன் மனைவி, "ஐயோ! இந்த அநியாயத்தைக் கேட்பாரில்லையா? மனைவி என்றால் யந்திரமா? இவர் இஷ்டத்துக்கு தெருவில்போகிற கண்ட கழுதையையெல்லாம் அழைச்சிட்டு வந்து வடிச்சுக் கொட்டச் சொல்கிறாரே!" என்று சொல்லியபடி போலியாக அழுதாள். மூக்கை உறிஞ்சினாள்.


நீலகண்டன் வெளியே வந்து எட்டிப்பார்த்தான். "அடியே! போதும் நடித்தது. விடாக்கண்டன் போய் விட்டான்" என்றான் மகிழ்ச்சியுடன்.

இருவரும் சமையலறைக்குப் போனார்கள்.

இரண்டு தட்டுகளை வைத்துப் பரிமாறினாள் மனைவி. "என் சாமர்த்தியம் எப்படி? நான் நோகாமல் அடித்ததால்தான் அவன் போனான்" என்றான் நீலகண்டன்.

"நான் ஓயாமல் அழுதேனே! என் புலம்பலைக் கேட்டுத்தான் அவன் ஓடி விட்டான்" என்றாள் அவன் மனைவி.


"இப்படியெல்லாம் நடக்கும் என்று தெரிந்துதான், நான் போகாமல் இருந்தேன்!" என்றபடி ஒரு தட்டின் முன் அமர்ந்து சாப்பிட ஆரம்பித்தான் விடாக்கண்டன்.



குரங்கு 1 : உன் நண்பனுக்கு வேலைக்குப் போக பிடிக்காதுன்னு சொன்னியே! இப்ப எப்படி சமந்தோஷமாப் போறான்?
குரங்கு 2 : வாழைப் பழக் கடையிலே வேலை கிடைச்சிருக்கே!
— எம்.கே. வேங்கவேல்,
சேலம்.


சிரிப்...

"எங்கே உன் ஓட்டைக் காணோம்?"
"வெயில்ல புழுக்கம் தாங்கலை. கழட்டி வெச்சுட்டேன்!"
— சக்தி. சரவணன்.



"விரலில் ஏன் ரத்தம் வருதுன்னு கேட்டதுக்குப் பின் விளைவுங்கிறியே ஏன்?"
"குண்டூசியால குத்திக்கிட்டேன்!"
— கங்கா கணேசன்.







"கிரிக்கெட் விளையாடும் போது என் அண்ணன்தான் அவுட் ஆவான். நான் அவுட்டாகவே மாட்டேன்!"
"ஆச்சரியமாயிருக்கே, எப்படி?"
"நான்தான் விளையாடவே மாட்டேனே!"
— தாரை மா. மகேஷ்ப்ரியன்.

"வீட்டிலேயே இருக்கிற கனமான பூச்சி எது?"
"மூட்டைப் பூச்சிதான்!"
— ஐ. இமாம் பாஷா,
வத்தலக்குண்டு.



பூனை





சென்ற மாதம் கனகாவிற்காகப் பட்டாம் பூச்சி வெளியிட்டவுடன் பட்டுக்கோட்டையிலிருந்து கே. பார்த்திபன் (ஆறாம் வகுப்பு) தனக்குப் பிடித்த பூனையையும் செய்து காட்டும்படி கடிதம் எழுதியிருந்தார். இந்த மாதம் பார்த்திபனுக்காகப் பூனை!

பூனைக்கு இரண்டு சதுர வடிவத் தாள்கள் வேண்டும். ஒன்று தலை செய்வதற்கு, மற்றொன்று உடலுக்கு.

1. சதுர வடிவத் தாள் ஒன்றை எடுத்து படத்தில் காட்டியபடி பிடித்துக் கொள்ளுங்கள்.

2. கீழ்முனையை மேல் நோக்கி மடியுங்கள்.

3. படத்தில் காட்டியபடி வலது, இடது பக்கங்களை மடித்து விடுங்கள்.

4. இப்பொழுது படம் 4-ல் உள்ள உருவம் கிடைக்கும்.

5. மேல் முனையை கீழ் நோக்கி மடித்து விடுங்கள்.

6. தாளைத் திருப்புங்கள்.

இதோ பூனையின் தலை தயார். முகத்தில் கண்ணும் மீசையும் வரைந்து விடுங்கள்.

1. இரண்டாவது தாளை எடுத்து மேலிருந்து கீழ் நோக்கி மடிக்கவும்.

2. வலது முனையை படத்தில் காட்டிய படி மடிக்கவும்.

பூனையின் உடல் தயார். தாளின் மேல் நுனியில் தலையைத் தூக்கி வைக்க வேண்டும். அழகான பூனை உங்கள் முன் அமர்ந்திருக்கும்.

எங்கு? எப்படி?

கத்தரிக்காய் எங்கு தோன்றியது?



கத்தரியின் தாயகம் இந்தியா தான். இது உருண்டையாக இருப்பதால் வட இந்தியர்கள் 'முட்டைக் காய்' (Egg Plant) என்று அழைக்கின்றனர். இந்தியாவிலிருந்து, பக்கத்து நாடான சீனாவுக்கே சுமார் 1500 ஆண்டுகளுக்கு முன்புதான் கொண்டு செல்லப்பட்டது. இப்போது உலகம் முழுவதும் பரவலாக உபயோகிக்கப்படும் ஜனரஞ்சகக் காயாகி விட்டது கத்தரி.

இருண்ட காலம் என வரலாற்று ஆசிரியர்களால் வர்ணிக்கப்படும் கி.பி. 6, 7ம் நூற்றாண்டுகளில் இந்தியா மற்றும் சீனாவுக்கு வணிகம் செய்ய வந்த அரேபியர்கள் மூலம், ஐரோப்பியாவினுள் அடியெடுத்து வைத்தது கத்தரி.


சுமார் 1200 ஆண்டுகளுக்கு முன் ஸ்பெயினில் இது பயிரிடப்பட்டது. 17ம் நூற்றாண்டுக்கு முன்னரே பிரேசில் நாட்டு மக்கள் கத்தரிக்காயை சமைத்து உண்டனர். உழைப்புக்குப் பெயர் போன ஜப்பான் நாட்டு மக்கள் விரும்பி உண்ணும் உணவுப் பொருட்களில் கத்தரிக்காய் நான்காவது இடத்தைப் பிடிக்கிறது. இந்தியாவில் சுமார் 50,000 ஹெக்டேர்களில் கத்தரி விளைவிக்கப்படுகிறது.

கத்தரி வெப்பப் பிரதேசங்களில் மிகுதியாக விளைகிறது. பொதுவாக இது ஓராண்டுப் பயிர் என்றாலும், சில வகைகள் 4 - 5 ஆண்டுகள் கூட பயன் தருவதும் உண்டு. கத்தரிச் செடி, சுமார் 4 அடி உயரம் வரை வளரும். கத்தரியில் பல வகை உண்டு. உருண்டையாகவும், நீளமாகவும், சுரைக்காய் வடிவிலும், வரி வரியாகவும், முட்டை போலும், பல அளவுகளில், பல வடிவங்களில் காணப்படுகின்றன. கத்தரி பச்சை, மஞ்சள், பழுப்பு,

"நம்ம ஊருல ஒன்பது மணியாகும் போது சிங்கப்பூர்ல எத்தனை மணியாகும்?"

"நம்ம கடிகாரத்துலயா, சிங்கப்பூர் கடிகாரத்துலயா?"


— மேலப்பாதி நாகராஜன்



வயலெட் மற்றும் வெள்ளை நிறங்களிலும் விளைகிறது.

வெள்ளைக் கத்தரிக்காய், ஆயுர்வேத மருத்துவத்தில் சர்க்கரை வியாதிக்கு மருந்தாகப் பயன்படுகிறது. பொதுவாக நம்மிடையே, 'கத்தரி - சத்துக் குறைந்த காய்' என்ற கருத்து பரவலாக உலவுகிறது. அது உண்மையல்ல. அனைத்து வைட்டமின்களும், தாதுப் பொருட்களும் உள்ள ஒரே காய் கத்தரிக்காய்தான்!

கத்தரிக்காய் அதிகமாக காய்க்கும் காலங்களில் ஊறுகாய் மற்றும் வத்தல் போடப்படுகிறது.



கத்தரிக்காயில் என்னென்ன சத்துப் பொருட்கள் உள்ளன?

ஈரப்பதம், புரதம், கொழுப்பு, தாது உப்புகள், நார்ச்சத்து, மற்ற சர்க்கரைப் பொருட்கள், கால்சியம், மக்னீசியம், பாஸ்பரஸ், ஆக்சாலிக் அமிலம், இரும்பு, சோடியம், பொட்டாசியம், தாமிரம், கந்தகம், குளோரின் முதலிய பொருட்கள் உள்ளன. இதைத் தவிர வைட்டமின்கள் ஏ, பி, சி ஆகியவையும் கணிசமாக உள்ளன.

முத்துக்கம்பளிப்புழு எப்படி தப்பிக்கிறது?

கரணை, கரணையாய் இணைப் புடன் கூடிய நீளமான உடம்பு, புசு, புசுவென்று நிறைய கால்கள் முன்னே நீட்டிக் கொண்டிருக்கும்: இரண்டு உணர் கொம்புகள் – இதுதான் கம்பளிப் புழுவின் பொதுவான லட்சணங்கள். சிலவற்றிற்கு முசுமுசு வென்று உடம்பு முழுவதும் நிறைய முடிகள். இதனை நாம் 'முசுக் கட்டை' என்கிறோம். கம்பளிப் புழுக்கள் இயற்கையின் வினோதத்துடன் கலர், கலராய் தான் வாழும் இடத்திற்குத் தகுந்தாற்போல், இலைப் பச்சை, பழுப்பு நிறம், மரப்பட்டை, கறுப்பு, இலைப் பழுப்பு, சிவந்த நிறம் என்று பலவித வர்ண ஜாலங்களில் பவனி வரும். இத்தனை நிறங்களும், வடிவமைப்புகளும், தங்களை எதிரிகளிடமிருந்து காப்பாற்றிக் கொள்ளும் முயற்சியே.

முத்துப் போல பளபளவென மின்னும் கம்பளிப் புழு ஒன்று உள்ளது. இதன் பெயரே 'முத்துக் கம்பளிப்புழு'தான். இதன் அறிவியல் பெயர் புளூரோடையா ரூராலிஸ் (Pleurotya ruralis) கிரேக்க மொழியில் Pleuro - என்பதற்கு பளபளக்கும் என்று பொருள். இதற்கு அரிப்பினைத் தரும் உறுப்போ, குமட்டும் வாசனையோ கிடையாது. அதனால் இதன் ஜாகை பொதுவாக மரத்தின் உச்சியிலுள்ள இலைகளின் மேல் தான். மிக அரிதாக இது இலையை விட்டு இறங்கி வீதி உலா வரும். சில சமயங்களில் எதிரிகளிடம் மாட்டிக் கொள்வதும் உண்டு. அப்போது என்ன செய்யும் தெரியுமா? இதனை விட பெரிய எதிரிகள், இதனை விழுங்கத் தொட்டால் போதும்! உடனே, இது தான் நடக்கும் வேகத்தை விட 39 மடங்கு அதிக வேகத்தில் 'பேக் டைவர்' (Back diver) போல் பின்னோக்கி எழும்பி துள்ளிக் குதித்து ஓர் அரை டஜன் குட்டிக் கரணம் போடும். இதன் குட்டிக்கரணத்தைப் பார்க்கும் எதிரி இது என்னவோ ஏதோ வென்று பயந்து போய் ஒரு கணம் ஸ்தம்பித்து நின்று விடும். முத்துக் கம்பளி தப்பித்து விடும். இது ஏன் இப்படிச் செய்கிறது என, 'படுவேக வீடியோ'வில் படம் எடுத்து, இதன் தொழில் முறை தப்பித்தல் யுக்திகளை ஆராய்ந்து கொண்டிருக்கின்றனர், ஆராய்ச்சியாளர்கள்!

— எஸ். மோகனா

அசாருதீன் பிடித்த 100 காட்சுகள்!



• அசாருதீன்

மார்ச் 27 அன்று பெங்களூரில் நடைபெற்ற டெஸ்ட் ஆட்டத்தில் கெவின் ராபர்ட்சன் (ஆஸ்திரேலியா) அடித்த அனில் கும்ப்ளேவின் பந்தைப் பிடித்தார் அசார். இது அவருக்கு நூறாவது காட்ச். தனது 91ஆவது டெஸ்ட் ஆட்டத்தில் இச்சாதனையை அசார் செய்தார். இதையடுத்து உலக அளவில் 100 காட்சுகளைப் பிடித்த பதிமூன்றாவது வீரர் மற்றும் இரண்டாவது இந்தியர் என்ற பெருமையை அசார் பெற்றுள்ளார்.

1986இல் இந்திய வீரர்களில் கவாஸ்கர் 125 டெஸ்ட் ஆட்டங்களில் 108 காட்சுகள் பிடித்து சாதனை நிகழ்த்தியிருந்தார். ஆஸ்திரேலிய வீரர் ஆலன் பார்டர் 156 டெஸ்ட் ஆட்டங்களில் 156 காட்சுகள் பிடித்ததோடு முதலிடத்தையும் பிடித்துள்ளார்.

இங்கிலாந்து ஆட்டக்காரர் வாலி ஹாம்மண்ட் 1939இல் மான்செஸ்டரில் மேற்கிந்தியத் தீவுக்கு எதிராகப் பிடித்த காட்ச்தான் ஒரு ஃபீல்டர் பிடித்த முதல் நூறாவது காட்ச் ஆகும். ஆஸ்திரேலியா.வின் பாப் சிம்ப்சன் 1977-78 இல் பெர்த்தில் நடைபெற்ற தன் 54ஆவது டெஸ்டிலேயே நூறாவது காட்சைக் கைப்பற்றி விட்டார்.

ஆஸ்திரேலியாவிற்கு எதிராக 15 டெஸ்ட்களில் 13 காட்சுகள், இங்கிலாந்திற்கு எதிராக 15 டெஸ்ட்களில் 9 காட்சுகள், நியூசிலாந்திற்கு எதிராக 10 டெஸ்ட்களில் 4 காட்சுகள், பாகிஸ்தானிற்கு எதிராக 9 டெஸ்ட்களில் 12 காட்சுகள், தென்ஆப்பிரிக்காவிற்கு எதிராக 10 டெஸ்ட்களில் 13 காட்சுகள், இலங்கைக்கு எதிராக 16 டெஸ்ட்களில் 27 காட்சுகள், மேற்கிந்தியத் தீவிற்கு எதிராக 14 டெஸ்ட்களில் 20 காட்சுகள், ஜிம்பாவேக்கு எதிராக 2 டெஸ்ட்களில் 2 காட்சுகள் பிடித்து தனது காட்ச் சதத்தை அசார் அடைந்தார்.

இலங்கை ஆட்டக்காரர் அரவிந்த டி சில்வாதான் அசாருதீனிடம் அதிகமுறை (6) அகப்பட்டவர். அசார் காட்ச் பிடிக்க ஏற்ற வகையில் 25 முறை பந்து வீசியவர் அனில் கும்ப்ளே.

அசார் முதன்முதலாக டெஸ்ட் களமிறங்கிய (1984-85) கல்கத்தா டெஸ்டில் சிவராமகிருஷ்ணனின் பந்தில் பாட் போகாக்கை வீழ்த்தியதுதான் அவருடைய முதல் காட்ச். கொழும்பு நகரில் 1993-94 இல் தன் 57வது டெஸ்டில் ராஜேஷ் சௌகான் பந்தில் திலீப் வியாங்கைப் பிடித்ததே 50 ஆவது காட்ச்.

ஆல் ரவுண்டர் அசார் மஹ்மூத் — அதிரடி ஆட்டக்காரர்

தற்போது கிரிக்கெட் உலகில் நுழைந்துள்ள இளம் ஆட்டக்காரர்களில் பெரும்பாலோர் ஆல் ரவுண்டர்களாகவே இருக்கிறார்கள். அசார் மஹ்மூத் அவர்களில் ஒருவர். இந்த அசாருக்கு வயது 22. பாகிஸ்தான் நாட்டின் ராவல்பிண்டி பகுதியைச் சேர்ந்

தவர். அறிமுகமான முதல் டெஸ்ட் ஆட்டத்திலேயே சதமடித்த பெருமை பெற்றவர். ஏழாவது பேட்ஸ்மேனாகக் களமிறங்கினாலும் உறுதிபட நின்று அதிரடியாக ஆடி வருபவர். 5 டெஸ்ட் ஆட்டங்களில் 3 சதங்களை எடுத்த அசார் விக்கெட்டுகளை வீழ்த்துவதிலும் வல்லவர்.

சென்ற ஆண்டு தென் ஆப்பிரிக்க அணி பாகிஸ்தானில் டெஸ்ட் ஆடிய சமயம். பாகிஸ்தான் அணி 206 ரன்கள் எடுப்பதற்குள் ஆறு விக்கெட்டுகளை இழந்து விட்டது. அசார் மஹூத் ஆட வந்தார். 128 ரன்கள் குவித்து அணியின் ஸ்கோர் 456 ஆக உயர உதவினார். பத்தாவது விக்கெட்டுக்கு முஷ்டாக் அகமத் உடன் சேர்ந்து உலக சாதனை நிகழ்த்தினார்.

இந்த ஆண்டு பாகிஸ்தான் அணி தென் ஆப்பிரிக்காவிற்குச் சென்றது. 5 விக்கெட்டுகளை இழந்த பாகிஸ்தான் 112 ரன்களையே எடுத்திருந்தது. அசார் உள்ளே நுழைந்தார். தன் பங்கிற்கு 136 ரன்கள் சேர்த்து பாகிஸ்தான் அணி 329 ரன்கள் பெற வித்திட்டார்.

டர்பனில் நடந்த டெஸ்டில் ப்ாகிஸ்தான் 89 ரன்களுக்கு 5 விக்கெட்டுகளை இழந்திருந்தது. இங்கும் அணி கௌரவமான ஸ்கோர் பெற கை கொடுத்தது அசார் மஹூத்தான். அடுத்த 5 விக்கெட்டுகள் பெற்ற 170 ரன்களில் 132 ரன்கள் அசாருடையது!

அசார் மஹூத்தின் ஆட்டத்தை பாகிஸ்தானின் ஆஷிப் இக்பால், இந்தியாவின் கபில்தேவ் ஆகியோரின் ஆட்டத்தோடு கிரிக்கெட் வர்ணனையாளர்கள் ஒப்பிட்டுப் பாராட்டுகிறார்கள். ராவல் பிண்டியில் மேற்கிந்தியத் தீவோடு விளையாடியபோது நான்கு விக்கெட்டுகள் வீழ்த்தியது இவருடைய சாதனையாகும். டெஸ்ட் ஆட்டங்கள் அளவிற்கு ஒரு தின ஆட்டங்களில் அசாரின் திறமை இன்னும் முழுமையாக வெளிப்படவில்லை. எனினும் அசார் மஹூத் கிரிக்கெட் உலகில் பல சாதனைகளைச் செய்ய காலமும் உள்ளது; திறமையும் உள்ளது.

• அசார் மஹூத்



இந்தியாவின் நெம்பர் 1 டென்னிஸ் வீராங்கனை!

"என் கனவு நனவானது. நான் மிகவும் பரபரப்பாக இருக்கிறேன்" - இவ்வாறு கூறியவர் நிருபமா வைத்தியநாதன். ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியின் இரண்டாவது சுற்றிற்குள் வெற்றிகரமாக நுழைந்த முதல் இந்தியப் பெண்மணி இவர்தான். கோவையைச் சேர்ந்த நிருபமாவிற்கு கடந்த டிசம்பரில்தான் 21 வயது பூர்த்தியானது. இன்று இந்தியாவின் நெம்பர் 1 டென்னிஸ் வீராங்கனை இவர்தான்.

மிகவும் திட்டமிடப்பட்ட வாழ்க்கை நிருபமாவினுடையது. காலை 7 மணிக்கு எழுந்து 40 நிமிடங்கள் ஓட்டம் மற்றும் சைக்கிள் ஓட்டுதல். அடுத்து இரண்டு மணி நேர டென்னிஸ் பயிற்சி. மதிய உணவு. பின் மூன்று மணி நேர டென்னிஸ் பயிற்சி. இவைதான் நிருபமாவின் வழக்கமான ஒரு நாள் நிகழ்ச்சிகள்.

நிருபமா சென்ற ஆண்டு டென்னிஸ் உலக தரப்பட்டியலில் 162 ஆவது இடத்தில் இருந்தார். இந்த ஆண்டு 134ஆவது இடத்திற்கு வந்து விட்டார். விரைவில் முதல் 100 இடங்களுக்குள் இடம் பிடிப்பார் என எதிர்பார்ப்போம்!

— **விளையாட்டுப் பையன்**


நாகரீக வளர்ச்சியில் போக்குவரத்து வளர்ச்சிக்கு முக்கிய பங்கு உண்டு. போக்குவரத்தில் நீர்வழிப் போக்குவரத்து முறை பழங்காலத்திலிருந்தே முக்கியமானதாகக் கருதப்பட்டு வருகிறது. நீர் வழிமுறை பொதுவாக நீண்ட காலம் எடுக்கக் கூடியது. எனவே ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்குச் செல்லும் தொலைவை எவ்வளவு குறைக்க முடியுமோ அவ்வளவு குறைக்க முயற்சி மேற்கொள்வர்.

நீர்வழிப் போக்குவரத்தில் கால்வாய்கள் மிக முக்கியமானவை. இவை தொலைவை வெகுவாக குறைக்கின்றன. இக்கால்வாய்களில் குறிப்பிடத்தக்கது 'சூயஸ் கால்வாய்' (Suez Canal).

சூயஸ் கால்வாய் மெடிடெர்ரேனியன் கடலையும் செங்கடலையும் இணைக்கிறது. இக்கால்வாய்க்கான திட்டம் கி.மு. 7ஆம் நூற்றாண்டிலேயே தீட்டப்பட்டது என்றால் ஆச்சரியமாக இருக்கிறதல்லவா! உண்மை தான், கி.மு. 7ஆம் நூற்றாண்டில் எகிப்திய அரசர் நெகோ (Necho) இதற்கான முயற்சியை மேற்கொண்டார். இம்முயற்சியில் சுமார் 1,20,000 அடிமைகள் மடிந்தனர். இதன் பின்னரே இம்முயற்சி கைவிடப்பட்டது.


கி.மு. 522-ல் பெர்சியர்கள் எகிப்தை வென்றபோது, பெர்சிய அரசர் டேரியஸ் (Darius) இத்திட்டத்தைப் புதுப்பித்து, கால்வாய் முடிவடைந்ததாக ஒரு கல்வெட்டும் நிறுவினார். இவருடைய கால்வாய் நீண்ட தூரம் கொண்டது. ரோமானியர் காலத்தில் மேம்படுத்தப்பட்ட இக்கால்வாய், காலப் போக்கில் கவனிப்பாரின்றி வீணானது. பின்னர் வந்தவர்களால் இதைச் சீர் செய்ய இயலவில்லை. நெப்போலியன் முயன்றபோது அவருடைய

சூயஸ் கால்வாய் கி.மு. ஏழாம் நூற்றாண்டில் திட்டம் தீட்டப்பட்டு கி.பி. 1869 ஆம் ஆண்டில் முழுமை அடைந்தது!



சூயஸ் கால்வாய்!

பொறியியல் வல்லுநர் விடுத்த தவறான எச்சரிக்கையால் அம்முயற்சியும் கைவிடப்பட்டது. இக்கால்வாய் திட்டம் கனவாகவே முடிந்து விடும் போல் இருந்தது.



கி.பி. 1854 ஆம் ஆண்டு ஃபெர்டினான்ட் டெ லெஸ்ஸெப்ஸ் என்னும் பிரஞ்சு பொறியியல் வல்லுநர் முகம்மது செத் பாஷா என்னும் எகிப்திய வைசிராயிடம் இக்கால்வாய் பணியைத் துவக்க அனுமதி பெற்றார். இதற்காகவே 1858இல் சூயஸ் கால்வாய் கம்பெனி துவக்கப்பட்டது. பிரஞ்சு முதலீட்டாளர்கள் மற்றும் வைசிராயின் ஆதரவு இக்கம்பெனிக்கு இருந்தது. ஆனால் இக்கால்வாய் மூலம் அதிகப் பலன் பெறக் கூடிய பிரிட்டன் இத்திட்டத்தினைக் கடுமையாக எதிர்த்தது.



பல்வேறு தடங்கல்களுக்கிடையே, 1859 ஆம் ஆண்டு இக்கால்வாய் உருவாக்கும் பணி லெஸ்ஸெப்ஸின் தலைமையில் துவங்கியது. சுமார் 25,000 பேர் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். இவர்களுக்கென்றே தனி குடி நீர் கால்வாய் ஏற்படுத்தப்பட்டது என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

பத்து ஆண்டுகளுக்குப் பின்னர் பணி முடிவடைந்து, 1869 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சூயஸ் கால்வாய் திறக்கப்பட்டது. இதன் திறப்பு விழாவினை லெஸ்ஸெப்ஸ் மிகவும் பிரமாண்டமான முறையில் நடத்தினார். பிரஞ்சு பேரரசி ஈயூ ஜெனி சிறப்பு விருந்தினராக இதில் கலந்து கொண்டார். இதற்காக நடைபெற்ற விருந்தில் சுமார் 6000



விடை சொல்லுங்கள்!

1. உலகிற்கு பட்டை அறிமுகப்படுத்திய நாடு?

2. சீனக்குடியரசின் முதல் ஜனாதிபதி யார்?

3. அல்ஜிப்ரா வார்த்தை எந்த மொழியிலிருந்து வந்தது?

4. ஒலிம்பிக்கில் பெண்கள் பங்கேற்ற ஆண்டு எது? எங்கு?

5. வெளவால் முட்டையின் நிறம் என்ன?

6. சோடியத்தைக் கண்டறிந்தவர் யார்?

7. சூரியனைத் தவிர எந்த நட்சத்திரம் பிரகாசமானது?

8. எந்த நாடு மீன் பிடிப்புத் தொழிலை அதிகமாகச் செய்கிறது?

— பி. பிரசாத்.
பத்தாம் வகுப்பு,
திருமோகூர்.

விடைகள் : 1. சீனா, 2. சன் யாட் சென், 3. அராபிக், 4. 1912 ஆம் ஆண்டு, ஸ்டாக்ஹோம், 5. வெளவால் பாலூட்டி, முட்டை இடாது. 6. சர் ஹம்ப்ரி டேவி, 1807 ஆம் ஆண்டு, 7. சிரியஸ், 8. ஜப்பான்

பேர் கலந்து கொண்டனர். இவ்விருந்தினை சுமார் 500 சமையற்காரர்கள் தயாரித்தனர்; ஆயிரம் பணியாளர்கள் இதைப் பரிமாறினர். வாண வேடிக்கைகள், இசை நிகழ்ச்சிகள், நடன நிகழ்ச்சிகள் எனப் பல்வேறு கோலாகலத்துக்கிடையே இக்கால்வாய் திறக்கப்பட்டது.

இக்கால்வாய் உருவானதால் லண்டனுக்கும் பம்பாய்க்கும் இடையேயான தூரம் 4,563 மைல்களாகக் குறைந்தது. முன்பு இத்திட்டத்தை எதிர்த்த பிரிட்டன் 1875ஆம் ஆண்டு சூயஸ் கால்வாய் கம்பெனியின் பெரும் பங்கை வாங்கியது குறிப்பிடத்தக்கது.


கான்ஸ்டான்டிநோபிள் (இன்றைய இஸ்தான்புல்) ஒப்பந்தப்படி (Convention of Constantinople) சூயஸ் கால்வாய் உலக நாடுகளுக்கு திறந்து விடப்பட்டது. எகிப்து அதிபர் நாசர் 1956ஆம் ஆண்டு இதை தேசியமயமாக்கினார். இதனால் எகிப்து மீது இஸ்ரேல் தாக்குதல் தொடுத்தது. பின்னர், பிரிட்டிஷ் படையும் பிரஞ்சு படையும் இதில் கலந்து கொண்டன.

உலக நாடுகளில் எழுந்த எதிர்ப்பின் காரணமாக இவை பின்வாங்கின. குறிப்பாக, ரஷ்யாவும், அமெரிக்காவும் எதிர்ப்பு தெரிவித்தன. இதனால் பிரிட்டிஷ் பிரதம மந்திரி ஈடன் பதவி விலக நேரிட்டது. இக்காலகட்டத்தில் (அக் - டிச. 1956) அமெரிக்காவுடனான பிரஞ்சு, பிரட்டிஷ், ஆஸ்திரேலியாவின் உறவு பாதிக்கப்பட்டது.


சூயஸ் கால்வாயின் நீளம் சுமார் 100 மைல்கள், ஆழம் 50 அடி. இதன் குறைந்த பட்ச அகலம் 197 அடி. இக்கால்வாயில் 1,60,000 டன் சரக்குகளைக் கையாள முடியும். இக்கால்வாய் முழுவதையும் காண வேண்டுமானால், படகில் பயணிப்பதே சிறந்த வழி. இஸ்மெய்லா நகரில் இருந்து ரயில் மூலமும் கெய்ரோவில் இருந்து டாக்ஸி மூலமும் பயணிக்கலாம்.

— கோ. சதீஷ்குமார்

Edited, printed and published by K. Rajendran at Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager : 2345623; Subscription and Advertisement : 2345622; Chief Administrative Officer : 2345621
Subscription : (Inland) Annual Rs. 60/-; Half Yearly Rs. 30/-
Overseas (Air Mail) Annual Rs. 400/-; Half Yearly Rs. 200/-



இந்தக் குரங்குக்கு ரொம்பப் பசிக்கிறதாம் பாவம். யாராவது வாழைப்பழத்திற்கு வழியைக் காட்டுங்களேன்! ஆனால் வழிகாட்டும்போது இடையிலுள்ள கோட்டைத் தாண்டிச் செல்லக் கூடாது.





''எனக்கு ஊசி வேண்டாம் டாக்டர்.''

''ஊசியை உன்கிட்டே கொடுத்துட்டு நான் என்ன செய்வேன்?''

— சீர்காழி வி. ரேவதி

இந்த யானையின் பாதச்சுவடு எது?





கிரிக்கெட் எப்படித் தோன்றியது?


கிரிக்கெட் இங்கிலாந்தின் தேசிய விளையாட்டு. இந்தியா, பாகிஸ்தான், ஆஸ்திரேலியா, ஸ்ரீலங்கா என்று பல நாடுகள் ஆர்வத்துடன் கலந்து கொள்கின்றன. இந்த விளையாட்டு 15–ஆம் நூற்றாண்டிலேயே துவங்கி விட்டது. முதல் போட்டி 1719 ஆம் ஆண்டு இலண்டனுக்கும் கென்ட்டுக்கும் இடையே நடைபெற்றது.

'சிரிக்க, ரசிக்க, சிந்திக்க' என்ற நூலிலிருந்து:எல். கோபாலகிருஷ்ணன்

பிருந்தாவனம்

யாராவது குழாயைத் திறந்து விடுங்களேன்!





விடை: ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் வாடியிருக்குமாம் கொக்கு.

விடை: 3

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registe
No. TN / MS (S) 281/98 " Licensed to post without prepayment under PMG's Lice
No. TN / MS / (S) 14 " Registered as a Newspaper in Srilanka

பெருமையுடன்
அறிமுகம்



Mom...
Gimme
One More...

SUGHAAM

Just add 2 teaspoon full
to a glass of hot or cold milk

INSTANT PISTA MIX
INSTANT BADAM MIX
RAGIMALT
ROSE MILK MIX
COCOA MIX







Mfrd & Mkted:

CHENNAI MARKETING SERVICE

35/6, Pankaja Nilayam, Tulasi Street,
Venkatapuram, Ambattur, Chennai - 53.
INDIA Tel : 044-6350057.
Fax : 044-6257220. Grams : CIYEMYES





Drink Healthy
Grow Wealthy

C & F, SUPERSTOCKISTS, STOCKISTS
ENQUIRIES SOLICITED